[illegible]

# சூரைமாநகர்ப் புராணம்.

திருவாவடுதுறை

ஆதீனத்து மஹாவித்துவான்

## ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

இயற்றியது.

இஃது

மு. வெ. இலக்குமணச் செட்டியாரவர்களுடைய

[illegible],

ஞானாசிரியர் மாணாக்கரும்

[illegible]

## உ. வே. சாமிநாதையரால்

புதியனவாக எழுதிய அருங்குறிப்புரையுடன்

சென்னை

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

சோபகிருது ஆனிமீ

1904

*Copyright Registered.*

கணபதி துணை.

# முகவுரை.

சூரைமாநகரென்பது, பாண்டிவளநாட்டில், கிழக்கே வீரவனத்தையும், தெற்கே கோயிலூரையும், மேற்கே மயூரகிரியையும், வடக்கே திருமெய்யத்தையும் ஐயைந்து நாழிகைவழித் தூரத்தில் எல்லைகளாகப்பெற்று இவற்றினிடையே விளங்குவதொரு புராதன சிவஸ்தலம்; இது சூரைக்குடி, சூரை, விசயாலயபுரமெனவும் வழங்கும்.

ஸ்தலவிநாயகமூர்த்திகள் இருவர்: (க) காட்சிவிநாயகர், (உ) சயங்கரவிநாயகர்.

ஸ்வாமியின்திருநாமங்கள்: சங்கரநாதர், சுந்தரேசரென்பன.

அம்பிகையின்திருநாமங்கள்: பார்வதி=பார்ப்பதி, மீனாக்ஷி=கயற்கண்ணம்மையென்பன.

தீர்த்தங்கள்மூன்று: (க) சூரியதீர்த்தம், (உ) பொற்றாமரை, (ங) விஷ்ணுதீர்த்தம்.

ஸ்தலவிருக்ஷம் இரண்டு: (க) இலந்தை, (உ) கடம்பு.

வழிபட்டுப்பேறுபெற்றோர்கள்: சூரியன், சூரன், பொன்னனைவிசயாலயத்தேவன், சங்கப்புலவர்கள், திருமாலென்பவர்கள்.

இதைச்சார்ந்துள்ள சுப்பிரமணியஸ்தலங்கள் நான்கு: (க) திருவேலன்குடி, (உ) பலவானவர்குடி, (ங) ஆலந்திப்பட்டி, (ச) மாலையிட்டான்.

மேற்கூறிய விசேடங்களையுடையதும், மிகப் பழமையானதுமாகிய இந்தச் சூரைமாநகரின் புராணத்தை வடமொழிமுதனூலினின்று மொழிபெயர்த்துத் தமிழில் இனியசெய்யுணடையாக இயற்றியவர்கள், கவிஞர்பெருமானும் திருவாவடுதுறை ஆதீனத்து மஹாவித்துவானுமாகிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்.

இந்நூலை அக்காலத்தில் ஆக்குவித்த பிரபு, காரைக்குடி முரு. லெ. இலக்குமணச்செட்டியாரவர்களுடைய புத்திரரும் பெருங்கொ

# சூசிபத்திரம்.

பக்கம்.


கடவுள்வாழ்த்து ... ... ... ... ௧

ஆக்குவித்தோர்... ... ... ... ... ௪

அவையடக்கம் ... ... ... ... ௫

சிறப்புப்பாயிரம் ... ... ... ... ,,

திருநாட்டுப்படலம் ... ... ... ... ௬

திருநகரப்படலம் ... ... ... ... ௧௪

நைமிசவனப்படலம்... ... ... ... ௨௪

சூரியன்பூசித்தபடலம் ... ... ... ... ௩0

சூரன்பூசித்தபடலம்... ... ... ... ௪0

பொன்னனவிசயாலயதேவன் திருப்பணிப்படலம் ... ௪௬

பொன்னனவிசயாலயதேவன் திருத்தரிசனஞ் செய்தபடலம் ௫௩

சங்கப்புலவர் பூசித்தபடலம் ... ... ... ௫௬

திருமால் பூசித்தபடலம் ... ... ... ௭௧

தலவிசேடப்படலம் · ... ... ... ... ௭௫

இந்நூலின் அரும்பதவுரை ... ... ... ௭௯

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கூறைமாநகர்ப் புராணம்.

## கடவுள் வாழ்த்து.

### காட்சி விநாயகர்.

பூமேவு செந்தமிழுஞ் சதமொழி யிரண்டினொன்று போன் றோர் தூணி, ஞமேவு வலைநயுதித்த படங்கல்பிறப் பிடத்திழிபு நாடி நாண, மேவாமேவு முருகசரமு பயபிடியுங் கலபபவுதித் தாலக மெல் லாந், தாமேவு விநடபொலியுங் காட்சிமால களிற்றினிரு சரணஞ் சார்வாம். (க)

### சங்கர விநாயகர்.

மருவுபெரும் போகமொலா டொருங்கடை வான் பூசைபுரி மாண்பு வாய்ந்தோர், திருவுநர மாவிற்றோ சுருங்கிறமேறு வென்று விரி செனுநதா தாமாட, பொருவுநவிர பெருதரந் தொடபொலிந்து நாடபயனும புவனத் தியார்க்கு, வெருவுதவிர்த்த தருவுமொரு சங் கரமால் களிற்றினடி மேவி வாழ்வாம். (உ)

### சுந்தரேசர்.

பொன்பூத்த தாமரையிற் குடியானு நெடியானும் போற்றி யேத்த, வின்பூத்த கனிபடையாக் கடம்பினடி வசிபபதினு மேற்ற மாக, மன்பூத்த நாற்பயனும் வழங்கிநறுங் கனிதுறுமும் வதரி நீழற், கொன்பூத்த பொலிவினமர் சுந்தரேச ரமலர்த்தாள் குறித்து வாழ் வாம். (ங)

### கயற்கணம்மை. வேறு.

மயற்க ணம்மையும் வீழ்ந்துழ லேதுவாம் வழிச்செலீஇ மா ழாந்து, செயற்க ணம்மைசற் றுயினு மருவகை செய்தெவை யெ னும்வாயிற், பெயற்க ணம்மையு மெடுத்தினி தாண்டவள் பேர ருட் பெருமாட்டி, கயற்க ணம்மைபொற் பாததா மரைமலர் கருத் திருத் துபுவாழ்வாம். (ச)

**சபாநாயகர். வேறு.**

சடையமர் மடமா லாளும் புயத்தமர் தரும ராவு
மிடையமர் புலியு மாட விடத்தமர் மடம லாளும்
புடையம ரராவு மற்றைப் புலியுங்கண் டுவப்ப வேதத்
தொடையமர் மன்று ளாடுஞ் சோதிதாட் கன்பு செய்வாம். (௫)

**சிவகாமியம்மை.**

கருங்கடல் கடுக்கு மேனிக் காகுத்தன் முதலா வுள்ள
பெருங்கட வுளரு மேனைப் பசுக்களும் பிறவிப் பாச
மொருங்கட வின்ப மேவ வும்பர்நா யகன்செய் கூத்தா
மருங்கட லமுத நோக்கா லள்ளியுண் பவடாள் போற்றி. (௬)

**தக்ஷிணாமூர்த்தி.**

உணர்த்துத லுணர்த லென்ன வுரைசெயோ ரிரண்ட னுள்ளு
முணர்த்துத றனதே மற்றை யுதுபசு வினதே யென்ப
துணர்த்திட வொருநால் வர்க்கு மொருகல்லா னிழல் வைகி
யுணர்த்திய வருள்சான் முற்று முணர்ந்தவாக் கன்பு செய்வாம்.(௭)

**வைரவக்கடவுள்.**

விதித்திடு தொழிலி னுனும் காத்திடு விறலி னுனுந்
துதித்திடு முதலி யாமன் முதலியா மெனத்துள் ளாது
பதித்திடு காலத் தோடு படர்பெருஞ் சூலந் தாங்கித்
திதித்திடு வடுகப் புத்தேள் சேவடி சென்னி சேர்ப்பாம். (௮)

**காட்சி விநாயகர்.**

குலமறை யெடுத்துக் கூறுங் குறிகுணங் கடந்து மேலோ
வலமுறக் கருத லாய மானமுங் கடந்தி யாரு
நிலவுநாற் பயனு மெய்த நிறைந்தொளிர் மதியக் கீறுக
கலமுடிக் கருணைக் காட்சிக் களிற்றினைக் கருத்துள் வைப்பாம்.

**முருகக்கடவுள்.**

தரைபுக லெழுத்தே யீற்றிற் சார்தர வொருவாய் பாட்டி
னுரையமை படையுந் தெய்வ வூர்தியுங் கொடியுந் தாங்கி
வரைமுதற் பகைகண் மாய்த்து மன்னுயி ரனைத்துங் காக்கும்
விரைகெழு கடப்பந் தண்டார் வித்தகற் கடிமை செய்வாம் (௧௦)

**திருநந்திதேவர்.**

மன்னிய கரவல் பூண்டு மறைமுடிப் பெருமான் சேவை
முன்னிய புறத்து நல்கி முழுப்பெருங் குரவு பூண்டு

துன்னிய வகத்து நல்கிச் சூரன்முத் திரையுந் தாங்கு
மின்னிய செங்கை யண்ணல் விரைமலர்ப் பாதம் போற்றி. (கக)

அகத்தியமுனிவர்.

அறவினை யாதெ னிற்கொல் லாமையென் பதற்கு மாறு
மறவினை புரிவா தாவி வில்வல னுயிரை மாட்டி
யறவினை கோற லானு மமையுமென் றகிலந் தேற்றி
மறவினை கடிந்த தெய்வ முனிவனை வணக்கஞ் செய்வாம். (கஉ)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

ஆணெனப் பட்ட பெண்ணை யடங்கலும் பெண்ணே யாக, மாணெனச் சமைத்தா னென்றும் பெண்ணென்றும் வழங்கா வெ ன்பு, நாணெனப் பொலிபெண் ணாகப் பாடிய நாவ லோன் பொன், வீணெனப் பொலியும் பூந்தாள் விடாதுளத் திருத்து வாமே. (கங)

திருநாவுக்கரசுநாயனார். வேறு.

கொண்ட விரகங் குலத்தவர்கள் யாரும் பாவக் குழிசியாய்க்
கண்ட பிறடபெல் லாந்துளைந்து கவன்று வருந்திக் கடையாகக்
கொண்ட விரதங் குலத்தளவாச் சிவபுண் ணியக்கொள் கலமாகிக்
கண்ட பலங்கள் களைந்துமுத லானார் கழலுட் கருதிடுவாம். (கச)

சுந்தரமூர்த்திநாயனார்.

ஓங்கு பலநாள் விடாதுதொடர்ந் துண்டை செலுத்திக் கூனி மிர்த்த, வாங்கு சிலைக்கை யிராமனுமா மாழாந் தகலா நாணடையக், கோங்கு முலைமா தொருத்திபுறஞ் சிறிது நோக்கிக் கூனிமிர்த்த, வீங்கு புனல்சூழ் நாவலூர்ப் பெருமான் பாதம் விழைந்திடுவாம்.

திருவாதவூரர். வேறு.

ஆக்குவித தோனுஞ் செய்யு ளணியுடைத் தலைவன் றானுந்
தூக்குமுற் றெழுது வோனுஞ் சொற்பொருள் விரிப்பின் றோனுந்
தேக்குபன் மறைக ளானுந் தெளிதரா வொருவனையா
பாக்குவாய் மலரும் வாத வூரர்தாள் பரசி வாழ்வாம். (கரு)

சண்டேசுரநாயனார். வேறு.

நிரமபுநூற் கேள்வியி னிகழ்த னக்குமாத
திரம்பிதா வாயினுற் சினந்து தீர்ந்தொரீஇ
வரம்பில்பல் லுயிர்க்கெலாம் பிதாம ருங்கினு
தரம்புகப் புகுத்தசேய் சரண்புக் குய்துமே. (கஎ)

அறுபத்துமூவர். வேறு.

அளவி றீமை யடைந்தவென் னுளத்து
மளவில் பேரரு ளாலவை மாற்றிய
வளவில சீர்த்தி யறுபத்து மூவரு
மளவில் காதலி னுரு மமாவமே. (சஅ)

பஞ்சாக்கரதேசிகர். வேறு.

ஒருமல வலியு மிருவினைச் செயலு முவகை மாயையி னுறைபபு, மருவுநாற் கதியு மைந்தவத் தைகளும் வயமபடு மறுவகைத் திறனும, வெருவெழு பிறப்பு மாவடு துறையின் மேவிய குருநமச் சிவாய, னிருமல ரடிசா ரடியவ ரடையா ரெனைய ரெனையரோ வறியேம். (கக)

அம்பலவாணதேசிகர்.

அம்பல வாண தேவனோ டமாவுற வருவடு துறையிடத் தருள்கூர்
நமபல மான நமச்சிவா யன்கா ணலமலி சுபபிர மணிய
வும்பனோ டமர்வு றருணணி சொரிக்கு முதத்தம னம்பல வாணன்
செம்பது மத்தா ளவனறரும் யாமே சிரமேயா மீமனைய யாமரோ. ()

மறைஞானசிவதேசிகர்.

சூரைமா நகரிற் றலங்கவற் றிருக் குஞ் சுந்தரே சுரன்றுணைத தெழுந்து, வாரையா தரிக்குங் குவிமுலைக் கயற்கண் மடந்தைமற் றிவாபணி புரிவோா, பாரோமம மபக்குஞ் சிவாலய தருமப பணி பல சிறந்தவையிற செய்மவா, ராகாயா பினுமற் றவாநவைப புரப்பா ரெற்றைககு பவனோயந் தெடுப்பாம். (உ௩)

ஆக்குவித்தோர்.

முகைமுறுக் குடைந்து நறவுகொப் புளிக்கு முண்டகத தடம புடை யுடுத்துத், தகைகெழு வளஞ்சால் சூரையம் பதியிற் றவலரும் வதரிநன் னீழ, னகையமர் சிறபபி னிரும்வீற் றிருக்கு நலங்கெழு சுந்தரப பெருமான, றகைதவிர் தெய்வ மான்மிய மென்னப யகர்தரு பெருவட மொழியை. (க)

மொழிபெயர்த் தெடுத்துத் தமிழினற் பாடி முடித்திட வேண்டுமா லென்று, கழிமகிழ் சிறப்பக் காரையம் பதிவாழ் கனமிகு வணிகர்தங் குலத்தோன், பொழ்பெருஞ் சீர்த்தி புனையிலக் குமணப புண்ணியன் புரிதவத் துதித்தோன், வழிவழி யறமே பயின்றிடு நலத்தான் மழையெனப் பொழிகர தலத்தான். (உ)

வளரொளி யனைய தளிப்பணி சிறப்பின் மல்குறப் புதுக்கிய வள்ளல், கிளர்மணித் தடந்தோட் கிருட்டின மகிபன் கெழுதகு சிரத்தையிற் கேட்பத், தளர்வகன் றரிய தவம்பல வியற்றிச் சார்த ருஞ் சிவபத மெளிதே, விளர்தபப் புகுவா மென்பதுட் கருதி விருப் பமிக் குரைத்திட லுற்றேன். (௩)

## அவையடக்கம்.

ஒழிவரும் பெருமை யாயிரத் தெட்டென் றுரைத்திடு மண்ட முற் றளித்த, கழிவலிச் சூரன் புரிந்த பூசனைபோற் காசினி நாட் டிலோர் சிறிதா, மொழிபுகழ் விசயா லயனெனு மொருவன் புரிந்தபூ சனையுங்கொளா பெருமான், பழிதபு வலியோர் பாடல்போ லெளியேன் பாடலுங் கொள்வது வழக்கால். (௧)

குலபதி யுதித்த சூரையம் பதியோன் குளிரமு தொழுக்கு வெண் பிறையு, நலமணி விடநல் சரவுமவெங் கொலையநவிறதி விழுமா தியுந்தோல், பலருமென் பாடல் குணமுங்குணங் குற்றங் குற்றமாய் பருவிடு மேனு, நிலவுமிம் முன்று பொதுவிலக் காகு நிகழ்ந்ததுமுற் காட்டினு லவற்றைக். (௨)

## சிறப்புப்பாயிரம்.

### வேறு.

தொடுகட லுலக மேத்துஞ் சூரையம் பதிப்புராணம்  
வடிவுறு தமிழாற் செய்தோன் வயங்குபல் கலையுந் தேர்ந்தோன்  
கொடுவினை துமிக்குந் தெய்வக் குளிர்சிரா மலையில் வாழ்வோ  
னடுநிலை யமைமீ னாட்சி சுந்தர நாவலோனே. (௧)

### வேறு.

சூரையம் பதிமான் மியத்தை மீனாட்சி சுந்தர நாவலன் பா டிக், காரையம் பதிவாழ் கிருட்டின மகிபன் கருத்துற வேண்டலா லடைந்த, சினநன் குடித்த கழுனியம் பதிவாழ் சிதம்பர தேசிகன் வியப்ப, வேனைநன் குடித்த கயற்கணு டிருமுன் னிருந்தரங் கேற்றி னன் மாதோ. (௨)

**ஆகத் திருவிருத்தம் ௨௮.**

# திருநாட்டுப்படலம்.

காரளாவிய பூங்குழற் கயற்கணோ டொடு
நீரளாவிய சடைமுடிச் சுந்தர நிமலன்
பேரளாவிய கருணையிற் பொலிபெருஞ் சூனை
யூரளாவிய பாண்டிநாட் டணிசில வுரைப்பாம். (க)

ஆலவாய்திரு வாப்பனூ ரணியிரா மேசங்
கோலமார்திருச் சுழியல்புத் தூர்கொடுங் குன்றஞ்
சீலமார்திருக் கோயிலூர் முதற்பல செறிந்து
ஞாலமார்புகழ் படைத்தது பாண்டிநன் னாடு. (உ)

பலத்தின் மிக்கது நெருங்கிவாழ் பல்குடிப் பரப்பாங்
குலத்தின் மிக்கது நிலைசெய் தாரிபகை குறைத்தோன்
வலத்தின் மிக்கது கொடும்பரித் திடபொலி மாண்பார்
நலத்தின் மிக்கது பெரும்புகழ்ப் பாண்டிநன் னாடு. (ஈ)

பிறைவி ராவிய சடைமுடிச் சுந்தரப் பெருமான்
கறைவி ராவிய வாள்கொடு பகையறக் கடிந்து
துறைவி ராவிய மனுநெறி செலுத்திடத் தொகுசீர்
நறைவிராவிய தரத்தது பாண்டிநன் னாடு. (ச)

மிக்க வான்பொரு ளாதலின் யாவரும் விழையத்
தக்க தாய்ச்சிறு கேடிஞ்சா ராவினை வுடைத்தாய்த்
தொக்க செல்வருங் கலைஞருந் துவன்றிடப் பட்டு
நக்க மேன்மையிற் பொலிவது பாண்டிநன் னாடு. (ரு)

## மழைவளம்.

வான மாகிய முல்லையிற் பிடாமலர்ந் தென்னக்
கான வெண்புயல் படர்ந்திருங் கருங்கட லடைந்து
பேன வார்புனல் குடித்துடன் கறுத்தன பிறங்கத்
தானமேங்கணும் பூவைபூத் தனவெனச் சாற்ற. (சு)

கறுத்த மாமுகில் பொதியமால் வரையடை காட்சி
யொறுத்த வாள்வலி விருத்திரற் குடைந்தஞ ருற்று
வெறுத்த வானவர் குழாத்தொடு மிந்திரன் மேன்மை
பொறுத்த மாதவன் பாற்சர ணடைந்தது போலும். (௭)

விரும்பு மாமுகில் மிளிர்தடித் தீன்றிடு காட்சி
யரும்பு பேரருண் முனிவரன் கடலறல் குடித்துச்
சுரும்பு மூசுதார் விருத்திரற் றேற்றிடத் துள்ளிய
பொரும்புண் வச்சிரம் புரந்தரன் விதிர்த்தது பொருவும். (௮)

முற்று கொண்டலோர் சிலைவளைத் தாறிய முழக்க
மெற்று தெண்டிரை வெளிபடு விருத்திர னென்பான்
பற்று வெஞ்சிலை வளைத்தெதிர் பகைவனைப் பாராச்
செற்று வெஞ்சினத் தொடுமுழங் கியதிறஞ் சிவணும். (௯)

எங்கள் வாழ்வெனு மாதவன் பொதியமுற் றெழிலி
யங்கண் வார்தொடை வேந்தனு ணையின்மழை பொழித
திங்கள் சூடிய சுந்தர நாயகன் சேர்ந்தார்
தங்கள் பாலருள் பொழிவதே போன்றது சாற்றின். (௧௦)

திருந்து சுந்தர நாயகன் செய்யகோல் செலுத்தப்
பொருந்து பாண்டிநா டடங்கலுங் குளிர்செயும் பொருட்டு
வருந்து தீர்வெளிக் கங்கைமா மலயத்தை மருவி
யிருந்து கீழிறங் குதல்பொரூஉ மருவியாற் றட்டம். (௧௧)

அளவில் செம்மணி யுடன்விரா யிழியும்வெள் ளருவி
பிளவி லேனைய பறம்பெலாம் வெல்பிர தாபங்
களவில் வான்றமிழ் தோன்றுசீ ரிவையுறக் கலந்து
வளவில் வீசிய மலயத்தின் றெழுவது மாலும், (௧௨)

முற்று சந்தனங் குங்குமங் காரகின் முதலா
மற்றுமுள்ளன விரையெலா மகழ்ந்துவா ரருவி
பற்றுசெந்தமிழ் மணங்குலா மிவ்வயிற் படர்ந்து
சுற்று முள்ளன மிலையெனத் தொலைப்பது துணையும். (௧௩)

முடிதொ டுத்திழி யருவிநேர் மொய்த்தசெங் காந்தள்
கடியு டைப்பொருள் பலவுநீ வாருபு கழித

ஞெடிசி றப்பல வென்றுநூ றுயிரங் கைகள்
வடிப ருப்பத மெடுத்துமேற் றகைப்பது மானும். (கச)

கருவி மாமுகி லிடையறு தெழுந்து நீர் கால
விருவி யப்புன முதலிய விடமெலா மீண்டி
பருவி மிக்கெழு முழக்குடன் வயின்வயி றிரண்ட
வருவி பாய்தலிற் பெருகுவ பொருநையா றம்ம. (கரு)

வேறு.

கலைமுழு துடையத் தாக்கிக் கரையிரு பாலு முள்ள
விலைமலர்த் தருக்கண் முற்றும வேர ப் பறித்துச் சாய்த்துக்
குலைகட லகடு கீண்டு கொடுஞ்சுற வேறு கொட்பத்
திரையெறிந் தார்த்துப் பொங்குந் தெண்புனற் பொருநைமாதோ.

ஓடுகால் பலவி னூர்ந் தொருங்குபோ யிருபாலுள்ள
நாடுபே ரேரி யெல்லா நரலைகொ லெனநி றைத்துப்
பாடுசா லிடத்துஞ் சென்று பரந்தெம போல்வா ருய்ய
வேடுதா னெதிர்ந்த செல்ல வீர்த்துடா நதிநீர் வெள்ளம். (சஎ)

முன்னிய கழனி வாயின் முதற்பெருந் தலங்க ளெல்லா
மன்னிப வராவிச் செலலு மதுநதி யொருபாற் பொங்கித்
துன்னிய வேரி யோடை தொகுமலாத் தடங்க ளெல்லா
மின்னிய நிறைத்த தெங்கும் வெள்ளமே யென்ன மாதோ. (கஅ)

வரையிட முழுதும் வெள்ள மண்டிய கான மாய
தரையிட முழுதும் வெள்ளந் தடங்கிடங் கோடை வாய்க்கா
ணிரையிட முழுதும் வெள்ள நெடிலைத் தாழைபூத்த
திரையிட முழுதும் வெள்ள மாயின தேங்கி மாதோ. (ககூ)

மருதம்.

பாங்குறத் திடுவா ரெங்கும் பணியுருட் டிடுவா ரெங்கும்
விரிதரு பலால மிட்டு மீதுமண் சொரிவா ரெங்கு
முரியநீர் போது மாலென் றேவினைப் பெயர்ப்பா ரெங்கு
மரியவித் தொழிலின் மூண்டா ரலர்பணை மருத மாக்கள். (உ0)

பொறிவழிச் செல்கை மாற்றிப் புந்தியைக் குறியி னுய்க்கு
மெறியுடை யறிஞ ரென்ன நெட்டிடைப் பாதி மாற்றி

யெறிதிரை யலைக்கும் வெள்ள மியைமத கூடு சென்று
செறிவய லகத்துப பாய்ச்சிச் செய்தொழிற் றலைநின் றாரே. (உக)

புயலெலாங் கடனீ ருண்டு பொழிந்திட வழிந்து பொங்கிக்
கயலெலா முகண்டு தாவக் கால்வழிப் புகுந்த வெள்ளம்
வயலெலா நிறைப்ப நோக்கி வரைவிலா வுவகை பூத்துச்
செயலெலாம் வல்ல மள்ள ருழுதொழில் செய்வான் புக்கார். (உஉ)

கருகிரும் பனைய கோட்டுக் கடாப்பிடா நுகங்கி டத்தித்
திருகுநீ ரேர்க்கா ணுப்பட் சேர்த்துவன் பாசம வீக்கி
யொருகைவன் மேழி பற்ற வொருகையின் முட்கோல் வாங்கிப
பெருகிய களிப்பு மேன்மேற் பிறங்கிட வுழுவா ராணர். (உங)

பார்நடத் தாதி நன்னூல் பயின்றிட வுதிபபா ஞேர்காற்
றேர்நடத் தருணன் வெள்கத தெற்கிருந் துதக்கி னுய்த்துங்
கார்நடத் துழவர் மேல்பாற் கழிந்துமுற் றிசையி னுய்த்து
மோர்நடத திடுவர் புல்லென் றிசைபபவை யாவுந் தீர. (உச)

கால்வலிக் கருங்க டாவுங் கையெடுத் தோச்சு தண்டும்
பால்படப் பிணிக்கும் வெய்ய பாசமு முடைய ராகி
மேல்வலித் தெழுவன் காலர் மேவிடிற் பழன மெங்குஞ்
சால்புடைச் சிறுபுல் லாதி தணததலோர் வியப்பாங் கொல்லோ. ()

உண்டிடு மருந்தின் சார மாததிர முடலிற் றங்கிக்
கண்டிடு பயனே செய்தல் கண்டுவன் மள்ளர் மேன்மேற்
கொண்டிடு மெருக்கா ணுதி குலவுறு தழைகள் பல்ல
மண்டிடு செறுவுள் ளிட்டுச் சாரந்தங் கிடவாஞ் சிபபார். (உசு)

குழைதரு வயலுட் பைம்புல் குறைத்துநீள் வரப்பின் மேலால்
விழைதரப் பொலிவ தோர்ந்து வித்தென வமர்ந்து நீர்வா
ழுழைதரு வாழ்க்கை யொட்டோ மெனச்சினந் தொழிப்பார போலத்
தழைதரு கங்க ரிந்தவ் வரம்பின்மேற் சாரச் செய்தார். (உஎ)

பரம்பின்மே லிவர்ந்து பாசம் பற்றிமிக் கிறுமாப் பெய்தி
நிரம்புற நடத்துவார்க ணெடுவலிப் பாசம் பற்றி
னுரம்படு மிறுமாப் பெய்த லொருவியப் பன்றே யேற்றத்
தரம்பயின் றுலு மன்ன துறுதற்கோர் தடையுண் டாங்கொல்.

மழைபொழி தலைமை யானு மருதநன் னிலத்துக் காவல்
விழைதரு தலைமை யானும் வேள்விநா யகன்றாள் போற்றித்
தழைதர வயல்க ளொன்று சாற்றிநென் முளைகள் வாரிக்
குழைதரு சேற்றின் மேலால் வீசினார் குலவு மள்ளர். (௨௯)

எண்ணிய முளைகள் வித்தி யாத்திடுங் கலங்க னீரைக்
கண்ணிய பின்னாட் டாழ்ந்த மடைவழி கவிழ்த்த லோடு
மண்ணிய வெண்மை தீர்ந்து பசுமையே யாய நீர்போய்
மண்ணிய விளர்ப்பு மேவு முகிலொடு மாறுற் றென்ன. (௩௦)

செறிதவ முயன்று பெற்ற சேயினை வளர்ப்பார் போலு
மறிவறக் கேட்ட பாடஞ் சிந்தித்து வளர்ப்பார் போலும்
வெறிமதுக் களிகூர் மள்ளர் மென்புனல் பாய்த்தி நாளுங்
குறிபெற வளர்க்க வம்மா வளர்ந்தன குலவு பைங்கூழ். (௩௧)

கணைதரு கழகப் பள்ளிக் கணக்கர்நூல் விருத்தி யாகப்
புணைதரு தானம் போர்த்து வைக்குமா சிரியர் போல
வுணைதரு பைங்கூ ழெல்லா மோங்குபு விருத்தி யாக
வணைதரு பழன மெங்கும் பெயர்த்தனர் நடுவார் மள்ளர். (௩௨)

வெள்ளிய தாய்நீ ருண்டு மேகங்கள் பசத்த லோடுந்
தள்ளிய வெழுந்த சண்ட மாருதம் பொருவ பைங்கூழ்
வெள்ளிய தாய்நீ ருண்டு பசந்தெழு வீறு முற்றுந்
தள்ளிய முளைத்த வம்மா தாமரை யாதி பலல. (௩௩)

களைகளை பருவ நோக்கி மள்ளர்கள் களைவா னேவ
வளைகளை யொதுக்கிக் கூந்தல் புரிகொடு வரிந்து கட்டித்
தளைகளை யுடைக்க விங்கந் திளைத்தலை தருநெண் டாதி
யளைகளை யுற்பு குந்தா ராற்றுக்கா லாட்டி மாரே. (௩௪)

பொருவருங் குவளை கொன்றார் புண்டரீ கங்கள் கொன்றார்
பருவர வாம்பல் கொன்றார் படர்ந்தவுற் பலமுங் கொன்றார்
வெருவர வனிச்சங் கொன்றார் மிடைந்தகோ கநகங் கொன்றா
மருவல ரென்று வந்தால் விடுவரோ மாய்க்கப் புக்கார். (௩௫)

காவிடை யமருஞ் சாயற் களிமயி லனைய மாதர்
நோவிடை யுறுத றேற்றார் நோக்குற வயலு லாவித

தாவிடை யடியு ருமன் மிதிப்பர்தண் மலரைத் தள்ளிப்
பூவிடை மிதிப்ப தல்லால் வேறொன்று பொருந்த மாமோ. (௩௬)

கொண்டலங் கூந்தன் மாதர் குனிந்தனர் களையும் போது
முண்டக மலர்கண் மேன்மேன் முகத்துற மோதா நிற்குந்
தண்டலி லரும்பி ரண்டு தனத்தினும் புடையா நிற்கும்
விண்டவ ரெதிர்ந்த காலை விடுவரோ மெலிய ரேனும். (௩௭)

முகமுத லுறுப்புப் போல மொய்குழற் கரிய வாட்கட்
சுகமொழிக் கடைசி மாதர் முலையையு மறையா தோன்ற
நிகழர விந்த மீன்ற வரும்புநேர் பொலித னோக்கி
மிகவவற் றொடுபோர் செய்வான் வெளிப்படுத் தினர்போன் றம்மா.

கடைக்குல மகளிர் கையாற் களைந்தெறி கமல ராசி
மடைச்செழுங் குலைமேல் வீழ்ந்து வாடின சருகு மாய
வுடைத்திரு ளொதுக்கும் வெய்யோன் கமலமே லோங்கு காதல்
படைத்தவ னென்று கூறு மொழிபழு துடைய தம்மா. (௩௯)

நிறைபுனல் வயலி னூடே நிலவுறப் பயில்வா ரேனுங்
கறைகெழு வேற்கட் செவ்வாய்க் கடைசியர் முகத்து வேர்வை
யுறையெழுந் தனக்கன் பாய கமலத்தைத் யொறுத்த னோக்கி
யறைகதிர் வெதுப்பத் தோன்றுங் காரிய மனாய தென்ன. (௪0)

கயிரவங் கஞ்சமெல்லாங் கருங்குழ லுழத்தி மார்கைப்
பயினகப் படைக டாக்கப் படிமிசைச் சாய்ந்து வீழ்ந்த
வுயர்நகப் படைமுன் னூற்று லுய்வது முண்டு கொல்லோ
பெயர்வரு மாம்ப லோடு பிறங்குதா மரையு மாதோ. (௪௧)

அடர்பல களையு மிவ்வா றூற்றுக்கா லாட்டி மார்க
ளிடர்தபக் களைந்து தத்த மிருக்கையிற் புக்க பின்பு
படர்பிணி மிடியி லாநுண் மதியினன் பயின்ற கல்வி
சுடர்வது பொருவ வெங்கும் பணைத்தன தொக்க பைங்கூழ். (௪௨)

ஒள்ளிய நாற்றங் காலென் றுரைபிறப் பிடத்து நின்றும்
வள்ளிய நடுகா லென்னு மணமகன் கிரகம் புக்கு
நள்ளிய பைங்கூ ழென்னு நங்கையர் குவளை யாதி
யுள்ளிய களைக ளென்னு முறுபிணி யொழிந்தா ராகி. (௪௩)

சொற்றிடு மள்ள ரென்னுந் தோழியர் நறுநீ ரென்னப்
பற்றிடு முணவு நல்கப் பாதமென் வாயா லுண்டு
செற்றிடு பருவம் வாய்த்துச் செழுவிய கால மென்னு
முற்றிடு கணவற் புல்லி யுறுபெருங் கருப்பம் வாய்ந்து. (சச)

காலம்வந் தடுப்ப வீன்ற கதிரெனுங் குழவி யெல்லாஞ்
சாலவும் வான மாய செவிலிதண் மதிய மென்னுங்
கோலமென் முலையி னின்று கொழித்திடு கிரண மென்னும்
பாலவா யுண்டு தேக்கிப் பணைத்தன பண்ணை யெங்கும். (சரு)

பெருங்கதிர் விளைந்த தோர்ந்து பிறைபுரை யிரும்பு வாங்கி
யொருங்குபல் களமர் புக்காங் கொய்யென வரிந்து சாய்த்து
நெருங்குற விசித்துக் கட்டி நெடுங்களந் தலைக்கொண் டிற்று
மருங்குபல் வரைக ளென்ன வானுறப் பலபோர் செய்வார். (சசு)

போரெலாம் புவியிற் சாய்த்துப் பொருவலித் திண்டோண் மள்ளர்
காரெலாந் திரண்டா லன்ன கருங்கடாப் பிணையல் செய்து
பாரெலாம் வியக்கு மாறு மிதிப்பித்துப் பலாலம் வேறு
நாரெலாம் புரிநெல் வேறு செய்தனர் நலங்கு லாவ. (சஎ)

பரவுவைப் பொடியி னோடு பதடியுங் கழிந்து போக
விரவுமென் காலிற் றூற்றி வெற்பெனக் குவித்தல் செய்து
கரவுசற் றேனு மின்றாக் காணித்தெய் வதமுன் னாக
வுரவுசெய் பலவு முள்ள முவப்புற வினிது நல்கி. (சஅ)

இறையவன் கடமை தீர்த்தாங் கெஞ்சிய தளவு கண்டு
நிறைபெரும் பண்டி யேற்றி நெடுநில நெளிய வுய்த்துக்
குறையறு மனையிற் சேர்த்துக் கூடிக ணிரப்பி யார்க்கு
முறையுளி நல்கி யுண்ணுங் குடிகளே மொய்த்த வெங்கும். (சக)

கந்தியுந் தெங்கு மிஞ்சி மஞ்சளுங் கதித்து நாளு
முந்திய மருதத தென்ன மொழிந்தனம் பாண்டி நாட்டு
நந்திய மற்றை நான்கு நவின்றவை யொன்றொ டொன்று
சந்திசெய் தமைந்து மேய மயக்கமுந் தன்னஞ் சொல்வாம். (ருo)

குறிஞ்சி. வேறு.

திண்மை வேடுவ ரிதைதொறுஞ் செந்தினை வித்தி
வெண்மை யாரரு விப்புனல் பாய்த்துபு விளைத்துக்

கண்மை சால்கொடிச் சியரொடு கலந்துவா ழிடமாய்
வண்மை மேயது சந்தகின் மலிபெருங் குறிஞ்சி. (ருக)

பழுக்கச் சுட்டபொற் றகடெனப் பொலிபலாச் சுளைதே
னொழுக்க வார்ந்திசும் புற்றிடுங் கொடிச்சிய ருறுபுண்
முழுக்க வோப்புவா னெறிகவண் மணியவண் மொய்த்தவ
வழுக்கன் மாற்றிடு வளத்தது மாண்புடைக் குறிஞ்சி. (ருஉ)

முல்லை.

குருந்து கொன்றைகா யாமுதற் பஃறருக் குழுமித்
திருந்து பாற்குடஞ் சுட்டுகள் கன்றொடுஞ் சிவணப்
பொருந்து மெள்வர காதிய விளைதரப் பொலியு
முருந்து வெண்ணகை யாய்ச்சியர் பயில்வள முல்லை. (ருங)

கொன்றை வேய்ங்குழ லூதுவர் கோவலர் மறக்குங்
கன்றை யான்களுந் தணந்தவர் காமவெங் கனலா
மொன்றை மேவுவர் மணந்தவ ரோகையங் கடலா
நன்றை மேவுவர் நலங்கொளித் தகையது முல்லை (ருச)

நெய்தல்.

அலைக டற்றலைத் திமில்விடு முழக்கமு மடுத்து
வலைவி சித்தெறி முழக்கமும் வலையிடைப் படுமீ
னுலைத ரக்கவர்ந் தீர்த்திடு முழக்கமு மொருங்கு
குலைமி சைச்செறி முழக்கமுங் குலவுவ நெய்தல். (ருரு)

கோட்டு வால்வளை யுயிர்த்திடு முத்தமுங் குறித்து
மாட்டு மீன்பல பாய்தலாற் புன்னையின் மருவாச்
சூட்டு நீளருப் பினங்களும் வேற்றுமை தொலையக்
காட்டு நீள்பெரு வளத்தது கருங்கழி நெய்தல். (ருசு)

பாலை.

சாந்து நாறிய கொங்கையர் மகிழ்நரைத் தணவார்
காந்து நீளதர் கடப்புழி நல்குவ கனிபே
ரீந்து நல்குவ பாடல மலரிதஞ் செய்வ
வேந்து பஞ்சுகோங் குகுத்துமா றுதிரும் பாலை. (ருஎ)

வறிய கூவலொண் புனலிலா திருப்பது மதித்து
நறிய பாடல மலர்மது நிறைத்திடு நாமஞ்
செறிய வாவயிற் பயிலுவர் சிலைவலி மறவ
ரறிய மேவுவள் கொற்றியு மவாவியப் பாலை. (ருஅ)

**திணைமயக்கம்.**

வரையின் வாயிரு விழிதரு மதுவமுங் கான
நிரையி னுன்சொரி கீரமு நெடியகா லோடைத்
தரையின் மாங்கனிச் சாறுமோர் தடையற வோடித்
திரையின் வாய்ப்புகூஉ வகற்றுவ தேங்குவ ரொருசார. (ருகூ)

மருவு பாண்டிநன் னாட்டம ரைந்திணை வளமு
மொருவு றுதேவ ருரைப்பவர் யாமெவ னுரைத்தாம
வெருவு தீர்தரச் சுந்தர நாயகன் மேவும்
பொருவில் சூளையம் பதிவளத் தினுஞ்சில புகல்வாம, (சு0)

திருநாட்டுப்படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் அஅ.

---

# திருநகரப்படலம்.

ஆலங்குற மாளிகை யடர்க்கும் பல்பிணி
விலங்குற மாமறை விதிய னைத்துநன்
றிலங்குற வறமெலா மெற்றை ஞான்றினுந்
துலங்குற வொளிர்வது சூளை மாநகர். (க)

பூவினிற் றாமரை போலும் பூதொளிர்
காவினிற் கற்பகம் போலுங் கண்ணிய
தேவினிற் சிவபிரான் போலு மூர்களிற்
சோவினிற் பொலிவளச் சூளை மாநகர். (உ)

பன்மலர் துவன்றிய காவும் பாங்கரி
னென்மலர் பழனமு நிரம்பு நீரதாய்

முன்மல ரோடையு மொய்த்துச் சூழ்தரு
சொன்மலர் வளத்தது சூளை மாநகர். (௩)

அடியவர் மகிழ்தர வருளும் வெள்விடைக்
கொடியவர் மகிழ்ந்தமர் கோல மேயது
படியவர் புகழ்ந்தடை படிய தங்கையிற்
றொடியவர் பயில்பெருஞ் சூளை மாநகர். (௪)

பன்னிய சிவபிரான் வதரி நீழலை
முன்னிய மாதவர் முயற வந்தது
மின்னிய வமரரும் விரும்பு மேன்மையிற்
றுன்னிய வளத்தது சூளை மாநகர். (௫)

வயல் சோலை முதலியன.

விளைதரு பழனமும் விரும்பு சோலையுங்
களைதரு மலர்பல கவின்ற பொய்கையு
மளைதரு மெய்யுடை யாளைப் பேரறம்
வளைதரு திறமென வளைந்து மல்குமே. (௬)

முன்னகம் மினத்தினு ளொன்று முத்திசேர்ந்
தின்னலம் பெறவரு ளிறைவன் றேமெனு
நன்னல முறப்பணை நாளு மேவுவ
பின்னமில் பீலியிற் பிளிறு நாரையே. (௭)

தம்மினத் தொன்றுமுன் பகைமை சார்ந்ததா
லம்மமற் றதுதவிர்ந் தருளவி ராவுவான்
செம்மலர்ப் பணைதொறுஞ் செறிந்த மைந்தெனக்
கொம்மெனச் சூழுவ குரண்ட ராசியே (௮)

முன்புநா ரைக்கருண் முதல்வ னம்மையுந்
துன்புதீர்த் தருளுமென் றுய்ந்து சூழ்வபோ
லன்புமே வகன்பணை யகத்து மற்றுள
நன்புள்யா வையுங்குழீஇ நலக்க மேவுமே. (௯)

மருவுவண் சூளைசூழ் வயங்கு சோலையின்
பொருவரும் பெருவளம் புகுந்து நோக்குறூர்

வெருவுகற் பகத்தையே வியந்து பேசுவா
ரிருமையு நோக்குறி னியம்பு வார்கொலோ. (கO)

## தடாகம்.

செய்யதா மரைமுகஞ் சிறந்த வுற்பல
மையவாம் விழியரக் காம்பல் வாய்மல
ரையநல் வள்ளைகா தாக நாடொறும்
வெய்யதீர் தடாகமெல் லியல்வி ளங்குமே. (கக)

தம்மியற் பெயர்முதற் சார்ந்த கண்ணுடை
யம்மைநன் கமர்தல மாத லான்மகிழ்
விம்மநன் கெழுந்துதாம் விதததின் வாவியுட்
செம்மைசேர் கயல்பல தாவுஞ் சீரவே. (கஉ)

அலர்மிசை வதிதரு மன்னம் பானுக
ளுலர்தலில் கயலைவாய்ப் பற்றி யுண்ணுவ
மலர்சிறு முயற்சியின் மருவி நாடொறும்
புலர்தலில் பயனுகர் புண்ணி யத்தர்போல். (கங)

பரவுதன் கூறெனப் பட்ட நாவலர்
விரவிடங் கலைமகள் விழைந்து சார்ந்தெனக்
கரவிலம் போருக மலரிற் காமரா
தரவுட னேதிமந் தங்கு மென்பவே. (கச)

மருவுநங் காதலன் மாணப் பூசித்துப்
பொருவரு வரம்பெறு புரியி தாமெனக்
கருதியுண் மகிழ்தல்போற் காமர் தாமரை
வெருவற மலர்ந்துநீர் நிலைவி ளங்குமே. (கரு)

புரையற வுற்பலம் பூத்த வாவியிற்
றிரையெழு கஞ்சமேற் செறிந்த வால்வளை
கரையெறி காளிந்தி நதியிற் கஞ்சமேல்
வரைமகள் வளையுறு வளர்ந்தெ ரிக்குமே. (கசா)

திரையெறி தரளம்வெள் வளையிற செம்மைசால்
விளரியெறி தாமரை மலரின் மேவுவ

குணையெறி பாற்கட லுயிர்த்த கொள்கைசால்
புனையெறி யிருநிதிப் பொலிவு காட்டுமே. (௧௭)

சூரியன் பூசனை தொடங்கிச் செய்தவச்
சீரிய நகரிடைப் பிறையுஞ் சேர்ந்துநன்
காரிய பூசனை யாற்றச் சேறல்போ
லோரியல் வெள்வளை குலைக்க ணூருமே. (௧௮)

வள்ளிய சங்கரா வலரொ ருங்குள
முள்ளிய வொருநலி யோதி விட்டவன்
றெள்ளிய புகழெனத் தெளிந்த நீர்க்கரை
வெள்ளிய வளைமணி விராய்க்கி டக்குமே. (௧௯)

வெப்பதே னெழுக்குபு விராவி வண்டுணச
செய்யதா மரைபல செறியப் பூத்துல
குய்யவாந் தடத்திடை யுறத்த ழைத்திடு
மையநா யகன்களை யமரின் வாட்டமென். (௨௦)

மன்னுபங் கயந்தொறும் வண்டி ழக்குவ
வுன்னுதன் பகைமனை யென்ப தோர்ந்திரு
டுன்னுபல் லுருக்கொடு துவைத்தல் போலுமாற்
பன்னுதே னுகலழும் பான்மை போலுமே. (௨௧)

## புறநகர்வளம்.

### யானைகள்.

சலசல மும்மதம் பொழிந்து தாழ்மணி
கலகல வொலித்திடக் களிறு லாவரும்
பலபல வரைகளும் பரந்த கால்பெறா
வுலர்தலி லருவியோ டுலாய தென்னவே (௨௨)

படாகரி யெனப்படும் பனுவலா வண்கவுட்
குடாநிறை கடாமெனக் கூறுங் கள்ளினை
யடர்கறை யடிச்சுவ டாங்க லதந்துவார்த்
துடல்பல வளிகளாங் களியர்க் கூட்டுப. (௨௩)

### குதிரைகள்.

கால்பல வுருக்கொடு கால்க ஞன்கொடு
சால்புறத் திரிந்தெனச் சலிக்கும் வாம்பரி
நூல்பல வுணர்ந்தவர் நுனித்துக் கூறிய
பால்படு மிலக்கணந் தெரித்த பண்பினே. (உச)

வாதவூ ரடிகளுக் காக வையமுற்
றூதரஞ் செயப்பிரா னமைத்த வாம்பரி
போதர லுற்றது போற்றுஞ் சூளைவாழ்
மேதகு பரிக்குமு னிற்றல் வெள்கியே. (உரு)

### தேர்கள்.

பாதல மடித்தலங் காணப் பைம்பொன்செய்
மீதல முடித்தலங் காணமேதகு
பூதல மிசைச்செலும் பொன்செய் தேர்பல
காதலங் கதிருஞ்செய் காட்சி சான்றவே. (உசா)

கடும்பரி யீரிரு கால்வ யத்தவா
யடும்பரி வகன்றதே ரலங்கு றப்புனைந்
திடும்பரி கால்களீ ரிரண்டுஞ் செல்வன
படும்பரி காந்தப்பின் படரி ரும்புபோல். (உஎ)

### வீரர்கள்.

விழித்தகண் ணிமைத்திடார் வேலெ றிப்பினு
மொழித்திடா ருயிர்சுமந் துழன்று மானத்தை
யிழித்திடார் கன்னிலைத் திலங்கு வீரரூப
பழித்திடா வினையர்கல் லூரி யும்பல. (உஅ)

இப்புணோர் கொடுங்கணை யிப்பு ணோரயி
லிப்புணோர் கழுக்கடை யிப்பு ணோர்வசி
யிப்புணோர் மால்களிற் றுலவை யெஃகமோ
ரிப்புணென் றுறகிறத் தெடுத்துக் காட்டுவார். (உகூ)

### ஆயுதமுதலியன இயற்றுவோர்.

அத்திர சத்திர மாதி யாயவு
மதநிகை கடுங்கடி வாளங் கிம்புரி

மொய்த்தகூ விரங்கிடு காதி முற்றவு
மெய்த்திடா தியற்றுந ரிருக்கை மல்குமே. (உ0)

## அகநகர்வளம்.

### அகழி. வேறு.

ஓங்கு சுந்தர நாயக னுறைதலா லாங்கு
வாங்கு தெண்கட லேழுமன் னியதிற மதித்து
வீங்கு நீர்ப்பெரும் புறக்கடன் மேதகு விருப்பி
னீங்கு மேவிய தென்னலா யினுமிகு மகழி. (உக)

### மதில்.

தன்னைச் சூழ்தரு கதிரவன் பூசித்த தானந்
தன்னைக் காதலி னோக்குவான் பற்பல சயிலந்
தன்னைப் போற்றிடப் பொலிவளை சாந்துசூழ்ந் தென்னத்
தன்னைப் போலிலாத் தடமதில் சூழ்ந்தொளிர் தகைத்தே.

### மாளிகைகள்.

இரவு மேவுவெண் கதிரினைச் சுண்ணஞ்செய் தெடுத்துப்
பரவு மாறுபூ சியதெனப் பயில்சுதை நீற்றிக்
கரவு தீரநுண் டொழில்பல வகபுனைந் தமைத்த
வுரவு மாளிகை மீப்பயி லுவமுகி லொருங்கு. (உஉ)

கோட்டி நூறுறக் குழைத்துமேற் பூசுசெய் குன்ற
மாட்டு யாபதி தங்குதல் கதிரவன் மலநோய்
வீட்டு பூசனை புரிந்ததே யென்றுளாம் விழைந்து
நாட்டு தானும்பூ சிக்கவந் திறுத்ததே நயக்கும். (உச)

வான ளாவிய மாடமேற் றுகிற்கொடி மரம்போயக்
கானளாவிய கற்பகக் கிளையொடுங் கலப்ப
வூன ளாவிய வச்சிரப் படையினு னெழுகுந்
தேனளாவிய மலரிலா தென்னென தேர்வான். (உரு)

### வீதிகள்.

கருநெ டுங்கணா ரூடலிற் பறித்தெறி கலனும்
பொருவி லாமலர் மாலையுங் குப்பையாய்ப் பொலியு

தெருவின் மேவுவோ ரொதுங்குபு பயப்பயச் சேறன்
மருவு வாருயி ரூற்றினை யஞ்சுமா தவர்போல். (௩௬)

## கடைவீதிகள்.

மேக மண்டலந் தோய்தரக் காவணம் விரித்துப்
பூக முங்குலைக் கதலியும் வேழமும் பொருத்தி
மோக நன்குறக் குளிர்புனன் முற்றவுந் தெளித்துய
போக வைப்பென வாவண வீதிகள் பொலிவ. (௩௭)

கட்டு மாலையும் பூக்களுங் காயொடு கனியு
மட்டு ருதபன் முதிரையு மணங்கமழ் சாந்தும
பட்டு வர்க்கமும் பன்மணிக் கலன்களும் பிறவு
மெட்டு மாதிரங் களுமவியப புறநிறைந் திருபப. (௩௮)

விரும்பு மைம்பொறி நுகர்பல போகமும் வெறுபப
வரும்பு மாவணப பொலிவினைத தெனவச ப பரிது
சுரும்பு மாலிகைச் சூரமனைத் தியதிறந் துணிர்,து
பெரும்பல் போகமுந் தொக்கென நாடொறும பிறங்கும். ()

செஞ்சு டர்ப்பிரா னடைந்தருச் சித்தது தெரிந்தே
யெஞ்சு மற்றுள கோள்களுந் தொழுபபுகுந் தென்ன
மஞ்சு துஞ்சிய நிவந்தெழு மாடமா ளிகைமேல்
விஞ்சு பன்னிறச் சிகரங்க டனித்தனி விளங்கும். (௪௦)

## பரத்தையர்தெரு.

வைய மாகிய கடலிடை வரிவிழி யாய
வெய்ய வார்வலை வீசியா டவரெனு மீன்க
ளைய கைப்படுத் தன்னவர் கைப்பொரு ளாய
கொய்ய வாந்தசை பறித்துண்மா தர்கடெருக் குலவும். (௪௧)

ஆட லாற்சிலர் யாழெடுத் தமுதுகுத் தென்னப்
பாட லாற்சிலர் படாமுலை யழுந்தமார் பணைத்துக்
கூட லாற்சிலர் கொவ்வைவா யூறன்மிக் கருத்தி
நீடலாற்சிலர் மயங்குற நிகழ்த்திவாழ்ந் திடுவார். (௪௨)

### வேளாளர்வீதி.

தூய நாயகங் காருலகத் துதித்தவர் றாகளின்
றூய வாய்மைய ரோபபுர வாற்றுதற் கஞ்சார்
பாய சீர்த்தியர் பண்புற வுழுதொழில் பயின்று
மேய வாழ்க்கையர் வீதியு மாயிடை விளங்கும். (சங)

வருவி ருந்துப சரித்தலாற் றம்பசி மாற்றார்
பொருவில் கேள்வியா சிவார்ச்சனை நாடொறும் புரிவார்
வெருவி லாதுப காரமே விழைந்திடு மேலோர்
மருவு வார்தெரு பெருவளம் யாவரே வகுப்பார். (சச)

### வணிகர்வீதி.

நிறைபெ ரும்பொரு ளுடைமையிற் றனதனை நிகர்வார்
மறையெ னும்படி மலைதரா மொழிபயில் வல்லார்
கறைய றுஞ்சிவ தருமமே பொருளெனக் காமுற்
றுறைம கிழ்ச்சியி னீட்டுவா ரிருக்கையு மொருசார். (சரு)

வெருளும் வன்சொலி லாதவர் மேதக வயலார்
பொருளுந் தம்பொருள் போனினுந் தாக்கமே புரிவா
ரருளு மம்பிகா பதியடிக கன்புசற் றகலார்
மருளுஞ் செய்கையில் வணிகர்தம் வளஞ்சொலும் வரைத்தோ.

### அரசர்வீதி.

திருந்து செய்யகோ லுடைவிச யாலய தேவன்
பொருந்து பல்கிளை துவன்றிய பொற்பினிற் பொலிவ
மருந்து கொண்டினும் வாழ்க்கையர் வாழுமூர் மயங்கா
திருந்து வாழ்தர நிவந்தன வரசர்வா ழில்லம். (சஎ)

எங்கு மல்கிய துணங்கற லெடுத்துவாய்ப் பெய்து
பொங்கு செஞ்சுடர் விடுமணி பொலிந்துவாள் வேந்தர்
தங்குமாளிகை விளங்கலா லந்நகர் தணவாக்
கொங்கு மல்குதா ரமரரு ரெனப்படுங் குறிக்கின். (சஅ)

### மறையவர்வீதி.

அங்க மாறுநன் குணர்ந்தவ ரருமறை யாளர்
பங்க மேவுறு வாய்மையர் பசுவுடம் பழித்துத

துங்க மேவிய பதிகழல் சார்பெருந் துணிவோர்
தங்கள் வாழ்மனை வீதியு மொருபுறந் தயங்கும். (சகூ)

மறைமு ழக்கமும் வானனை யவிகொள விளிக்கு
நிறைமு ழக்கமுந் தொழுபவர்க் காசிக ணிரப்புந்
துறைமு ழக்கமும் பரமதத் தொடர்பறக் கனைவா
னறைமு ழக்கமும் பெருகுவ வையர்வாழ் வீதி. (ருo)

## ஆதிசைவர்மாளிகைகள்.

பூதி கண்மணி வாஞ்சையர் பரார்த்தமும் போற்று
நீதி வாழ்க்கைய ராகம நெறிமுழு துணர்ந்தோர்
காதி மும்மலங் கண்ணுத லடிநிழல் கலக்கு
மாதி சைவர்வா ழிருக்கையும் பொலிதரு மாங்கண். (ருக)

## அன்னசத்திரம்.

விருப்பு மேவர யாவரும் விழைந்துண முல்லை
யருப்பு நேருநல் லடிசிலும் பொன்னிற மமைந்த
பருப்பும் பாகுங்குய்க் கருணையுஞ் சிற்றுணப் பலவு
மிருப்பு வாய்ந்தசத் திரங்களு மாவயி னிலகும். (ருஉ)

## தண்ணீர்ப்பந்தர்.

பேணி யாலவா யமைத்தெனச் சுந்தரப் பெருமான்
காணி யாயவிவ் விடத்தினுங் கலந்தமைத் தென்ன
நாணி வெய்யவன் வெப்பறப் பெருங்குளிர் நலஞ்செய்
பாணி மேவிய பந்தரும் பொலியுமோர் பாங்கர். (ருந)

## சைவமுனிவர்மடங்கள்.

தாத மார்க்கமுன் னுயநான் மார்க்கமுஞ் சமைந்தா
ரோத மார்க்கமென் றுள்ளன யாவையு மொழிந்தார்
நாத மார்க்கமே லொன்றியோன் றாகிலை நயந்த
போத மார்க்கர்வாழ் திரு மடங் களும்பல பொலிவ. (ருச)

## திருக்கோயில்.

இன்ன பல்வளத் திருமட முதலிய வெவையு
மன்ன நாப்பண்விற் றிருப்பது பேரருள் வலிசா

லன்ன மென்னடை யங்கயற் கண்ணியோ டிணைந்துஞ்
சொன்ன நாயகன் மகிழ்ந்தமர் சுடர்மணிக் கோயில். (ருரு)

பொற்றமரை.

வருந்து பல்லுயிர்ப் பவப்பிணி தீர்க்குநன் மருந்தாய்ப்
பொருந்து பற்பல பூமுதல் வளத்தொடும் பொலியு
முருந்து வெண்ணகை யொருபுறச் சுந்தரர் முன்பு
திருந்து நன்மையின் விளங்குபொற் றாமரைத தீர்த்தம். (ருசு)

திருக்கோபுரம்.

நிலவு பொன்முடிக் கண்ணிறைந் தவனெனு நெடியோன்
குலவு சந்நிதி முன்கரங் குவித்துநின் றென்னக்
கலவு பொன்னணி முடிமிசைத் துகிற்கொடி கவின
வுலவு வானொடு நின்றிடு மோங்குகோ புரமே. (ருஎ)

திருமதில்.

பகைவி ராயுருச் சிதைந்தசோ மூன்றுமுட் படர்ந்து
நகைவி ராவுமோ ருருக்கொடு நலமுறச் சூழ்ந்து
தகைவி ராவுமா நின்றதை யென்னலாந் தணவா
முகைவி ராவுபூங் கொன்றையான் றளிமுதன் மதிலே. (ருஅ)

விமானங்கள்.

மாறு கொண்டசோ வங்கன மருவுதன் மதித்து
வீறுகொண்டபொன் மேருவுஞ் சேயொளி வேணி
யாறு கொண்டவற் குதவிசெய் பாக்கவண் மருவிக்
கூறு கொண்டிருந் தெனப்பல விமானங்கள் குலவும். (ருகூ)

அன்றி யுந்தொழு தேத்திய கதிரவனரற்கு
மொன்று பல்லுல குயிர்த்ததா யாகிய வுமைக்கு
நன்று தண்ணிய வுருக்கொடு நிழல்செயு நலம்போ
லென்று மொண்கதிர் பரப்புவ விமானமோ ரிரண்டும். (சுo)

இலந்தைவிருக்ஷம்.

புரிந்து நீழன்மாத் திரஞ்செயுங் கடம்புபோ லாது
பரிந்து நீழலும் படர்சுவைக் கனிகளு முதவித்

தெரிந்து தீங்கனி தெவ்வுவா னடைதரு தெவ்வு
மிரிந்து போகுகண் டகமுங்கொண் டிலகுமோர் வதரி. (௬௧)

எண்ணில் பல்கிளை மலிகடம் படியில்வீற் றிருப்போன்
மண்ணி லத்தகு வதரிநன் னீழலு மருவல்
கண்ணு மின்சுவைக் கற்பகத் தும்பெறாக் கனிக
ளண்ணு கிற்றலி னவைகவ ராசைகூர்ந் தன்றோ. (௬௨)

மற்ற விசேடங்கள்.

மறைமு ழக்கமு மாகம மெனப்படு மாநூற்
றுறைமு ழக்கமுங் குடமுழா முதலிய தொக்காங்
கறைமு ழக்கமு நால்வர்வாய்ப் பாட்டொலி யறையு
நிறைமு ழக்கமு மெழுகடன் முழக்கென நிமிரும். (௬௩)

சூழு வார்களு மரகர கரவெனத் துதித்துத்
தாழு வார்களுந் தடங்கணீ ரிறைத்திரு வினையும்
போழு வார்களும் புகர்மலங் கழிப்பியா னந்தத்
தாழு வார்களு மளவில ராவயி னம்மா. (௬௪)

இன்ன பல்வள மலிந்தபொன் னாலயத் தெங்கள்
கன்ன லஞ்சுவை கனிந்தசொற் கயற்கணா ளோடு
மன்ன மேனமு முணர்தராச் சுந்தர வமலன்
றன்ன வீற்றிருந் தாருயிர்க் கின்னருள் சுரக்கும். (௬௫)

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௫.

## நைமிசவனப்படலம்.

வலனுயா மாதவா வைகுதற் கிடமாயப
பலனுயர் கங்கையம் படிகரை யகத்திற்
குலனுயர் தருப்பல குழுமவுற் றிருக்கு
நலனுயர் பெருந்புகழ் நைமிசக் கானம். (௧)

மாங்கனி களுமுயர் வருக்கைக ளீன்ற
தேங்கனி களும்விரி தலைச்செழுங் கதலி
யாங்கனி களுமதி னயிறலிற் கற்பந்
தூங்கனி களுமறந் தனர்சுக முனிவர். (உ)

சிங்கமும் யானையுஞ் சினங்கெழு புலியும்
பங்கமில் கலையுமவெம் பணியுமொண் மயிலுமம
பொங்குவெம் பகையறப் பொலிதலின் முதல்வன்
றிங்களு மரவமுஞ் செறிசடை வனமே. (௩)

கற்பகம் பொலிதரு கடவுளா பலரு
மற்பக முறவவிக் கணைவரிங் கறவோா
பொறபமர் கனவினு மதுபுரிங் திலரேற்
சொற்பயி விதன்வளஞ் சொல்லவெண் மையதோ. (௪)

செஞ்சடை மாதவர் திருமலர் செறிந்து
மஞ்சடை வாவியின் வயங்குட னணைபப
பிஞ்சடை தருக்குலம பெய்மது மழையிற்
றஞ்சடை மாக்குலந் தம்முடன ணைப்ப. (ரு)

கோதமில் பேரருட் குழிசிய ராய
மாதவர் மேனியை மறைததல்வெண் பொடியே
மேதகப் பயிறரும் விலங்குடன் மறைததல்
சீதள நறுமலர் செறிந்தவொண் பொடியே. (௬)

பிறைபுரை மருப்புடைப் பெருங்குரல் வேழக்
கறையடி மிதிபபதக் கானக மலரே
மறையுணர் முனிவரர் மலரடி மிதிப்ப
தறைமதன் விடுசர மாயபன் மலரே. (எ)

பாயவன் மரம்பல பயிலுமவ் வனம்பூ
மேயவ னுருக்கொடு விள்ளுவ செருந்தி
மாயவ னுருக்கொடு மல்குவ காயா
தூயவ னுருக்கொடு சுடர்வன விதழி. (அ)

மாதவர் செஞ்சடை வளர்தர யாத்துப்
பாதவ நிழற்சிவம் படர்ந்தினி திருப்பார்

மேதகு மவர்சடை வீழ்தர வகத்திப
போதவிர் பிறைச்சடைப் புனிதனை நிகர்வார். (சு)

உறுவர ரருகுறு முழைச்சிறு கன்றை
மறுவறு மொருகரந் தாங்குவர் மகிழ்ந்தே
யறுபகை யறுபகை யாக்கிய வவர்பின்
பெறுவது தெரிந்துமுன் பழகுபெற் றிமைபோல். (க0)

இத்தகு நைமிசத் தினிதுறை தருவா
ருத்தம வெள்ளிய நீறுடல் வயக்கிப்
பத்தியிற் கண்மணி பற்பல பூண்டு
புத்தியி னைந்தெழுத் தெண்ணுறு பொலிவார். (கக)

எழுகடல் பொங்கி யெழுந்து பரம்ப
முழுமலை போர்கது முழுங்கு கொடுங்கால்
கெழுதரு மேனுங்கி லைசமொன் றில்லா
வழுவறு தங்கண்ம னந்தடு மாறூர். (கஉ)

முளைத்தெழு காமமு தற்பல குற்றம்
வளைத்தெழு மாறும வித்திட நல்கா
தளைத்தெழு பந்தம றுத்துயர் சால்பிற்
றிளைத்தெழு வாரரு டேக்கிய நீரார் (கங)

மாலய னாதியர் வாழ்க்கையு மெண்ணா
காலவி கற்பமொ ழிந்தக ருததார்
சீலமு ருக்கொட மர்ந்தன சீரா
ரோலம றைத்தலை யுள்ளது தேர்வார். (கச)

இருவினை யின்பய னின்பொடு துன்ப
மருவி னுடற்குள தென்றும திப்பார்
கருவறு மாறுக தித்தவு பாய
மொருசிவ மாக்கதை வாஞ்சையென் றுள்வார். (கரு)

வேறு.

புலதத்தியன் றருவாசன் புலகன்வே தாரணியன்
வலத்தியல் சுகனுணி மாண்டவி யன்சங்க

னலத்தமை சுனப்புச்ச னாரத னருவசிட்டன்
குலத்துயர் சமவர்த்தன் குணமலி மதுப்பிரியன். (௧௬)

சம்புதற் பரன்விக்ரான் சவுநகன் சமதங்கி
யயபுவி புகழ்கர்க்க னகத்தியன் காசிபன்சீர்
நம்பினை வதன்கிருது நாடிய புகழ்ப்பிருகு
வம்பிலுத் தாலகன்கோ சிகனாயா மாதேசன். (௧௭)

கண்ணுவன் வாமதேவன் காத்தியா யனனாதி
யெண்ணரு முனிவரரு பீண்டினர் நறுங்கொன்றைக்
கண்ணிய னருள்பெறுவான் கரிசறு மாமகமொன்
றண்ணிய காதலினோ டாற்றின ரப்பொழுது. (௧௮)

வெள்ளிய திருநீறு மேனியின் மேற்பொலிய
வள்ளிய வக்கமணி மாலிகை யுங்கவின
வுள்ளிய வெழுத்தைந்து முச்சரித திருநாவோன்
றள்ளிய விருவினையான் றளைபிறி தொன்றுமிலான். (௧௯)

மன்னிய புகழ்வாத ராயணன் மாணாக்கன்
பன்னிய வீரொன்பான் புராணங்க ளும்பயின்றோ
னுன்னிய மாணவக ரொருங்குபின் றொடர்ந்துவர
முன்னிய குணச்சூத முனிவரன் வந்தனனால். (௨௦)

வந்தவன் றனைக்கண்டாங் கிருந்தபன் மாதவரு
மந்தமி லுவகையராய் விரைந்தெழுந் தடிபணிந்து
நந்தலி லாரிருக்கை நல்கிமற் றதிலிருத்தி
முந்தநல் லுபசார முழுமையு முறையாற்றி. (௨௧)

யாவரு மிருக்கவென வெதிரிரு பாலுமிருந்
தோவரு முவகையரா யுத்தம முனிவரனை
மேவருஞ் சிவசரிதம் விரித்துணர் மேன்மையனே
தாவருய [illegible] யெனத்துதி நனிசாற்றி. (௨௨)

திருவளர் மகமொன்று செய்திடு மிப்பொழுது
குருவளர் தெய்வமுனைக் கொடுவந்து விட்டதனா
லுருவள ரிம்மகமுந் தூய்மைய துத்தமனே
வெருவளர் வினைநீங்கி மேன்மையுற் றனம் யாமும். (௨௩)

என்றுபன் முகமனுரைத் தியாங்களெல் லாமுய்ய
நன்றுசெ யிஃதுணர்ந்து நானிலங் களுமுய்யக்
குன்றுவில் கொண்டசுரர் கொடுமதின் மூன்றெரித்தோ
ளென்றுபஃ றலந்தம்மு ளொருதல மினிதுரைத்தி (உச)

தலமூத லொருமூன்றுந் தனித்தனி சிறந்ததுவாய்ப்
புலமுற நினைத்தாலும் புததிமுத தியுமளிக்கும்
பலமிகு மொருதானம் பகர்ந்தருள் செயவேண்டும்
வலமிகு புகழ்ச்சூத மாதவ வென்றனரால். (உரு)

வேறு.

முனிவர ருரைத்த வார்த்தை முழுமையுஞ் செவியி னேற்று
நனிமகிழ் பூததுச் சூத நன்முனி யொருமு கூர்ததம்
பணிமதி முடித்த வேணிப பகவனைத தியானஞ் செய்து
கனிதரு முளத்தி னென்று கண்டினி துரைக்க லுற்றான். (உசு)

கரைதரு தவத்தீர் நல்ல காரியம் விழைந்தீர் நும்மாற்
புரைதரு தன்மை யேனும் பொலிதவ முடையே னானேன்
விரைதரு சிவபு ராண விருபபமே யெந்த நான்றும்
வரைதரு சிலையான் பாத மருவுதற் கேது வாமால். (உஎ)

வெள்ளியங் கயிலை யாதி விரும்புபஃ றலங்க ளுள்ளு
மொள்ளிய மேன்மை வாய்ந்த வுத்தமத தலமொன் றுண்டால்
வள்ளிய வனைய தானத திருப்பெயா வகுப்பி னெல்லாந்
தெள்ளிய முனிவீர் சூளை யென்மனார் சிறந்த சான்றோா.

மறைதெரி வியாத மேலோன் வகுத்தவீ ரொன்பா னென்ன
வறைபுரா ணங்க ளுள்ளொான் றாகிய காந்தந் தன்னிற்
கறையில்கேத் திரகண் டத்திற் கரைதரப் பட்ட தாகு
மிறைகரு தினர்க்குத தீர்க்கும் வதரியா ரணிய மேன்மை.

அத்தல மூர்த்தி தீர்த்தந் தலமென வாய மூன்று
மெத்தலங் களினு மெய்தா விசேடமா யிருக்கு நாளுங்
கைத்தல நெல்லி போல யாவுங்கண் டுயர்ந்த சான்றீர்
முத்தலம் புகழத் தான மான்மிய மொழிவாங் கேண்மின்.

திரையெழு குமரி யாறுஞ் செம்மணி சிதறி காளுங்
கரையுடைத் தெழுவெள் ளாறுங் காமரு தென்பாற் றிக்கு
முறையமை வடபாற் றிக்கு மெல்லையா யொழுகக் கொண்டு
புரைதரு வளங்க ணலகிப் பொலிதரு பாண்டி நாட்டில். (ஙக)

மறிதிரை சுருட்டி யோடு மதுநதி வடபாற் கோட்டி
னெறியுயிர் முழுதுங் காக்கு நெல்லைநா யகியோ டெங்க
ளறிவுரு வான கொற்ற வாளீச ரமர்ந்து வைகுஞ்
செறிமலர்ப் பொழில்சூழ் தெய்வக் கோயிலூர்க்குதீசித்திக்கில்.

விரிசிறை யிரண்டு புள்ளும் விழுங்கிய பிழையி ரிப்பான்
பரிவொடு மயூர மெங்கள் பரமபர னிளஞ்சேய் பாத
முரியபே ரன்பிற் போற்றி யுவத்தலின் மயூர வெற்பென்
றரியயன் முதலோர் போற்று மதற்குநேர் குணக்குத் திக்கில்.

சத்திய முதல்வ னென்று தணப்புறு திடப்பான் மேவிச்
சத்திய நாதன் பொற்ருள் சக்கர பாணி யென்றுஞ்
சத்திய நெறியிற் போற்றத் தவாதவன் மருவுந் தெய்வச்
சத்திய கிரியென் றேதுந் தலத்துக்குத் தென்பாற் றிக்கில். ()

நன்னிய மத்தை மேவி நைந்துநைந் துருகு வாருட்
டுன்னிய மத்த ளாய சுரிகுழ லுமையா ளோடு
மின்னிய வேணிக் கூத்தர் வீரசே கரனார் மேவ
மன்னிய புகழ்சால் வீரை வனத்திற்கு மேல்பாற் றிக்கில். ()

தனித்தனி யரையே யென்று சாற்றும்யோ சனையி னெல்லை
யினித்தவத தான மேவு மெண்ணினு மெல்லா நல்கும்
பனித்ததீர்த்த தடஞ்சூ பூந்தத் தானத்தைப் பற்ப ரூ
மனிதரின் வந்து வந்து வானரும் வணங்கிப் போவார். (ஙசு)

கனிபல துவன்று நன்ற காமரு வதரி நீழற்
பனிமதி முடித்த வேணிப் பண்ணவன் கயற்க ணாளோ
டினிதமர்ந் திருக்கு நீரா விலந்தையா ரணிய மென்றோர்
நனியுயர் திருப்பேர் யாரு நவில்வரச் சூரைக் கம்மா. (ஙஎ)

என்றுரை செய்த சூத மாதவ னிருதாள் போற்றி
நன்றுரை செய்தா யைய நலமலி சூரை யென்னுந்

தொன்றுளா யுறுதற் கேது வென்னைகொல் சொற்றி யென்று
ரன்றுளா யில்லாச் சூத மாதவ னறைய லுற்றான். (௩௮)

நைமிசவனப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௧௯௧.

## சூரியன்பூசித்தபடலம்.

தண்ணிய மதியஞ் சூடுஞ் சங்கரப் பெருமான் பாத
நண்ணிய கருதிப பாச நாசஞ்செய் தின்ப மேய
புண்ணிய முனிவீர் விண்ணும புகழ்தரு சூளா யென்ன
நண்ணிய நாம வேது நவிற்றுது நயந்து கேண்மின். (௧)

திகழ்தரு தவத்தின் மிக்கான் சிறுவிதி யென்னும் பேரா
னிகழ்தரு தன்மை யில்லா வெழிலவளர் கருங்கட் செவ்வாய்ப
புகழ்தரு மிருபத தேழு மகளிரைப புணர்ந்து திமை
யகழ்தரு மதியோன் கொள்ள வளிததவற் கிது சொல்லும. (௨)

கிறைமதித தேவ கேட்டி நேரிழை யிணையர் தம்மைக
கறையமை பக்க பாதங் கலைபுரு தொபபக் கண்டு
குறையற நடததின் மேன்மேற் கொளருந்து மகிழ்ச்சி யினறேன
முறைபதபச் சபிதது மென்றான் மொழிந்தது கேட்ட வாமேலான். ()

அருளிய படியே செய்வ லையுறே லென்று கூறி
வெருளிய லின்றி யொபப மேவிவாழ்ந் திருககு நாளின்
மருளியல் கருங்க ணோளோர் மங்கைபால் விருபபம் வைத்தான்
பொருளியன் மேனி மற்றைப் பூவைமார் பொறுமை பூண்டு. (௪)

வையமுற் றிறைஞ்சுந் தந்தை மலரடி வணங்கிப போற்றி
யையநன் மருக னென்பா னன்றுடம பட்ட வாறே
செய்யலன் பக்க பாதஞ் செய்வனென் றிறைஞ்சிக் கூற
வெய்யவெங் கோப மூண்டு மேவுமா மதியைக் கூவி. (௫)

மதியெனும் பெயரோய் சொற்ற மாற்றநீ மறந்த னன்றே
முதியவிப் பிழைபொ றுத்தேன் முனிவற வினிமே லேனும்
பொதிசுர ரயன்மால் யாரும் போற்றிடப் பட்ட தாபொன்
விதிமறுத் தொழிமேய லென்று வேண்டவு மறுத்தா னன்றே. (௬)

மறுத்ததை யுணர்ந்து தக்கன் வளரெரி சினந்தா லென்னக்
கறுத்திரு கண்ணுஞ் சேப்பக் கலாநிதிப் பெயரோ யென்சொல்
வெறுத்தலா லின்று தொட்டுன் மேனிதேய்ந் தொழிக வென்று
னிறுத்ததீ வினையை வெல்லு மியல்புடை யாரு முண்டோ. (௭)

ஒழிவருஞ் சாப மேற்றெவ் வொருகலை யாநா டோறுங்
கழிதரக் கண்ட வாமலோன் கற்பக மாலை வேந்தன்
வழிபடு மலரின் மேலான் மாயவ னிவர்பாற் சென்று
மொழிதலும் பெருமான் பாற்போய் முறையிடு கென்று விட்டார்.()

ஊழியுஞ் சலிப்பொன் றெய்தா வொருபெருங் கயிலை சார்ந்து
வாழிய பெருமான் பாத மலரடித் துணைமேல் வீழா
வாழிய துயரந் தோடு பழுதன னழுத லோடுந்
தாழியல் சடையா னன்றெற குறைபது சையக் கேட்டு. (௯)

அஞ்சலை யஞ்சே லென்று வங்கையா லெடுத்தா லோனைச்
செஞ்சடை முடியில் வைத்தான் தேய்தலற் றுயர்ந்தா னன்னோன்
வெஞ்சினங் கொண்டு தக்கன் விதுவினை யுய்யச் செய்த
மஞ்சனை யழையா னுமையார் மகஞ்செயத் துணிந்தா னன்றே. (௧௰)

ஒண்குண மில்லா னாகி யுயிர்க்குயி ராகி நிற்கு
மெண்குணச் செல்வன் றன்னை யிகழ்ந்தொரு வேள்வி யாற்றல்
வண்குண மென்று புக்கான் மாமலக் கோட்பட் டார்க்கு
நண்குண மிதுவோ வின்னும் பலவுள நவிற்றுங் காலை. (௧௧)

கற்பக மாலை வேந்தன் கஞ்சநாண் மலரின் மேலான்
மற்பக வளர்ந்த திண்டோண் மாயவன் வான நாட
ரற்பக விளங்கு மோலி விஞ்சைய ராதி யோரைப்
பொற்பகம் பொலியக் கூட்டிப் புக்கனன் யாக சாலை. (௧௨)

அச்சமொன் றேனு மின்றி யனைவரு மொருங்கு சூழ
வெச்சனை துணையாக் கொண்டு மகமினி தியற்ற லோடும்

கச்சமி றவத்து மேன்மை யாழ்முனி கயிலை சார்ந்து
நச்சர வணிந்த பெம்மா னகைமலர்ப் பாதந் தாழ்ந்து. (௧௩)

ஐயனே நின்னை யெண்ணா தறிவிலாத் தக்க னென்னும்
வெய்யதீக் குணத்தா னின்னே வேள்வியொன் றியற்றப் புக்கான்
செய்யதன் றென்னா ராகித் தேவரு மொருங்கு தொக்கார்
வையமுற் றுய்யு மாறு மதித்தருள் செய்தி யென்றான். (௧௪)

மகதியாழ் முனிவன் வார்த்தை மாதேவன் கேட்டு நக்குத்
தகவிலா னேடு வேள்விச் சாலையும் படுபா டின்னே
யகநெகக் காண்டி யென்னா வருளியோர் நுதற்க ணின்று
மிகவலி படைதத வென்றி வீரனைத் தோற்று வித்தான். (௧௫)

தோற்றிய வீர னையன் றுணைமலர்க் கமல பாதம
போற்றிய வணங்கி நின்று புண்ணிய முதல்வா நாயே
னூற்றிய வாங்குற் றேவ லருள்கென நமது பாக
மாற்றிய கருதித் தக்கன் மகம்புரி கின்றா னென்றான். (௧௬)

என்றலுஞ் சினந்து பொங்கி யெழுந்துவெங் கணங்க ளோடுஞ்
சென்றழன் முழங்கி யார்க்குஞ் சிறுவிதி சாலை புக்கா
னன்றவ ணிருந்த யாரு மடுபுலிப் போத்து நோக்கிக்
குன்றுமான் குழாங்க ளென்னக் குலைகுலைந் தோடி னாரே. (௧௭)

ஓடிய சுரரை யெல்லா மொய்யென வளைத்துக் கொண்டு
கூடிய வாளால் வீசிக் குறைவறு தண்டஞ் செய்ய
நாடிய தக்க னோடு நருதலை யிழந்தா னெச்சன்
பாடிய மதிதேய்ப் புண்டான் பகனகை யொடுகண் டே ற்றான்.

அவியுணத் திரட்டு மங்கை யறுப்புண்டா னழலோன் மற்றைச்
சவியுடை யமரர் யாருந் தக்கதண் டங்கள் பெற்றார்
குவிமுலை யனையர் மாதர் தமைக்கொடுங் கணங்கள் பற்றிச்
செவியுறப் புல்லிப் புல்லித் தீர்த்தன காம நோயே. (௧௯)

இன்னணந் தண்ட மாற்றி யேகினன் வென்றி வீர
னன்னணந் தண்ட முற்ற வமரருட் கதிரோ னென்பான்
பன்னரும் பெருமை சான்ற பரம்பரற் பிழைத்துக் கெட்டே
மென்னனைந் திரங்கி யேங்கி யிவையிவை நினைய லுற்றான். (௨௦)

உலகிருண் முழுது மோப்பி யுறுபொருள் பலவுந் தேற்றி
நிலவுபல் கருமச் சான்றாய் நிகழுநா மந்தோ வந்தோ
விலகிருண் மூடப் பட்டு விரிபொரு ளொன்றுந் தேறா
தலகில்வெவ் வினைக்கோட் பட்டே மழகிது நமது செய்கை. (௨௧)

இறைவன்முக் கண்ணு ளொன்றா யெண்வகை யுடம்பு ளொன்றா
யறையிருப் பிடத்து ளொன்றா யமைந்ததேர்க் காலு ளொன்றாய்க்
குறையற விருந்த நாமிக் கொடுந்துய ருழப்போ மென்னிற்
கறைமிடற் றவனை யெண்ணாக் கயமையெத் துயர்க்கும் வித்தாம். ()

பாதகச் சிதம்புத் தக்கன் புதல்வியர்ப் பயந்த வாறுங்
காதலிற் கலைநி லாவிற் களித்துளங் களித்த வாறு
மேதக வொழிய வன்னான் வேள்விசெய் திட்ட வாறு
நோதக வெமக்கா யிற்றா னுவனுவ தென்னே யென்னே. (௨௩)

கன்றுநெஞ் சுடைய தக்கன் கனன்முகத் துதவு மாட்டே
னென்றுமென் றருந்தப் புக்கு வேரொடு மெயிறி ழந்தோந்
துன்றுபல் லுறுபபின் மேலாஞ் சுடர்விடு விழியி ழந்தோ
நன்றுநஞ் செய்கை கேட்பி னுடைலா நகைக்கு மன்றே. (௨௪)

என்றுபற் பலநி னைக்கு மிரங்கிநெட் டுயிர்ப்பு வீங்குங்
கன்றுநெஞ் சுளைந்து வாடுங் கருதருஞ் சமழ்ப்பின் மூழ்குங்
கொன்றுமுப் புரமுஞ் சாய்த்த குழகன்வாழ் கைலை மேவி
யொன்றுபே ரருள்பெற் றம்ம வுய்துமென் றெழுந்தா னன்றே. ()

கண்ணிய வரங்கள் யாவுங் கண்ணிய படியே நல்குந்
தண்ணிய கைலா யத்தைச் சார்ந்துநந் தியைமுன் போற்றிப்
புண்ணிய நாதன் முன்பு போய்ப்பணிந் தெழுந்து யாகத்
துண்ணிய புகுந்து பட்ட வுறுதுயர்க் களவின் றைய. (௨௬)

முழுதுல கிறைஞ்சா நிற்கு முதல்வநின் முகத்துக் கண்ணா
யிழுதையே னமர்த லாலே யெவ்வுயிர்க் குங்கண் ணானேன்
பழுதிலத் தகையே னுக்கும் பார்வையின் றிருத்த னன்றோ
வெழுவிடம் பருகி வானத் தேவரையும் புரந்து ளாயே. (௨௭)

சிகைபடு தழற்கட் செல்வ நிகழுனக் கிருக்கை யாகி
நகைபடு மெளியே னிந்நா ணகையிழந் திருத்த னன்றோ

முகைபடு வெண்பற் செவ்வாய் மூவுல கீன்ற செல்வி
தகைபடு மிடப்பான் மேவத் தழைந்துளா யருளல் வேண்டும்.

அறிவிலா மையினு னின்னை யவமதித் தவனைச் சார்ந்த
சிறியனேன் கரிசு முற்றுந் திருவுளத் தடைத்தி டாது
குறிபெறு முன்னை போலாட் கொண்டினி தருள வேண்டும்
வெறிமல ரிதழி மாலை மிலைச்சிய மேனி யோயே. (௨௯)

என்றுள முருகி நைந்து நைந்தினி தேத்த லோடுங்
குன்றுவில் வாங்கி மாயக் கோலொன்று தாங்கி மூன்றாய்
வென்றுவா னவரைக் காத்த வித்தகன் கருணை கூர்ந்து
நன்றுநன் றஞ்சே லென்று நகைமுக மலர்ந்து கூறும். (௩௦)

அம்புய மலர்த்தடஞ் செங்கே ழுலவிய பாண்டி நாட்டில்
வம்புயர் கோயி லூர்க்கு வடக்குமா மயிலோ ரைந்து
நம்புயர் குணக்கு மெய்ய நகர்க்குத்தெற் குயார்ந்தோர் போற்றிப்
பம்புயர் வீரை யென்னும் பகர்பெருட் பதிக்கு மேற்கு. (௩௧)

இந்தநான் கெல்லைக் குள்ளா மிருப்பதோர் தெய்வத் தான
மந்தமா தலமி லந்தை வனமென வறைவ யாரும்
புந்திகூர் வதரி நீழற் பொலிந்தவ ணுறைவோ ராரு
முந்தியா தரங்கூர்ந் தெண்ணின் முனிவர்வந் திறைஞ்சிப் போவார்.

கொங்கலர் கூந்தற் செவ்வாய்ப் பார்ப்பதிக் கோதை யோடுஞ்
சங்கர நாத னென்னுந் தவலருப் பெயர்பூண் டென்று
மங்கண்வாழ்ந் திருப்போ னாமங் கடைந்தெவர் புகழ்ந்தா லும்
மங்கருந் தீமை யெல்லா மாய்த்துய ரின்பந் தாழ்வார். (௩௩)

எந்தநற் றலங்க ளுள்ளு மேற்றமத் தலமென் றோர்தி
யெந்தநன் னீழ லுள்ளு மேற்றமவ் வதரி நீழ
லெந்தநற் றீர்த்தத் துள்ளு மேற்றமத் தலத்தார் தீர்த்த
மெந்தநன் மூர்த்தி யுள்ளு மேற்றமத் தலத்தின் மூர்த்தி. (௩௪)

அத்தல நாமஞ் சொற்றா ரடைவர்நம் முயர்சா லோக
மத்தலஞ் சிந்தை செய்தா ரடைவர்நம் முயர்சா மீப
மத்தலங் காணப் பெற்றா ரடைவர்நம் முயர்சா ரூப
மத்தலம் வசிக்கப் பெற்றா ரடைவர்நம் முயர்க லப்பே. (௩௫)

அணையமா தலத்தை யின்னே யடுத்துநீ யழலோன் றிக்கி
னிணையவாந் தீர்த்தந் தொட்டு நிரம்புமத் தீர்த்தங் கொண்டு
புணையவா நம்மை யாட்டிப் பூசைசெய் திருப்பை யாயி
னிணையவா ராதொன் றேனு மெய்துவை நினைத்த யாவும். (௩௬)

என்றுபே ரருளிற் கூறி யெம்பிரான் விடைகொ டுத்தான்
கன்றுமுள் வருந்த மன்றே காற்றியின் புற்றான் போன்று
குன்றுசூழ் பரிதி யென்பான் குழகனை யீட்டுந் தாழ்ந்து
வென்றுமேம் படுமத் தான மடைந்தரல் விழைந்தெ ழுந்தான். (௩௭)

வடதிசைக் கதிரோன் றேற்றித் தென்றிசை வருத லாலென்
னடையுமோ புடவிக் கென்று யாவரு மச்சங் கொள்ள
மடையெலாந் தரங்கு சிந்த வாலவளை கருவு யிர்த்து
மிடைவள மலிந்த பாண்டி நாட்டக மேவி னானே. (௩௮)

இறையவன் சொற்ற வாறே மயூரவெற் பெரிந்தான் மேற்கு
மறைபுகல கழனி வாசன் மாண்புசா றெற்கு மேன்மை
யுறைபெரு வீரை யென்ப தோங்கிய கிருக்கு மெய்ய
நிறைதரு வடக்கு மாக நிலவுதல் கண்டா னன்றே. (௩௯)

இதுகொலா மிறைவன் சொற்ற விலங்கையா ரணிய மென்று
மதுவிராங் கமல மெல்லா மலரிய வுதயஞ் செய்வோன
கதுமெனப் புகுந்து கண்டான் காமரு வதரி நீழல
முதுதவ முனிவர் போற்று மூர்த்தமா சிவலிங் கத்தை (௪௦)

காண்டலு மகிழ்ச்சி பொங்கக் கைதவிர் திசைநெறி வீழ்ந்து
பூண்டபங் கிளமெனச் சாய்ந்த புணர் பூலை பாகங் கொண்ட
வாண்டவ னிங்கு மேய வருளெவ ரறிய வல்லார்
மாண்டவத் துயர்ந்தா ரன்றி மறையோரா தமமு ளென்றான். (௪௧)

வள்ளலா ருணர்த்த திக்கின் மதித்தொரு தீர்த்தந் தொட்டாங்
கெள்ளலி லாத கங்கை முதலிய வெவ்வையுந் தாபித்
துள்ளவா மனைய தீர்த்தத் துறவிதிப் படியே மூழ்கிக்
களமிலி னீறு பூசிக் கண்மணி மாலை பூண்டு. (௪௨)

வேதத்தின் சார மாகி விளங்குமைந் தெழுத்து மெண்ணி
யேத்தரி னின்றே தீர்த்தோ மெனும்பெரு மகிழ்ச்சி பூண்டாங்

கோதத்தின் விடமுன் னுண்ட வொருவனை யிருவர் தேடு
நாதத்தின் முடிவா னனைப் பூசிப்பா னயந்து செல்வான். (௪௩)

கஞ்சநாண் மலர்முன் னாய கடிமலர் பலவும் வில்வத்
தெஞ்சலி றளிர்முன் னாய விணர்த்தளிர் பலவுஞ் சாந்துந்
துஞ்சலில் கனியுங் காயுஞ் சொற்றிடு பிறவு மீட்டி
மஞ்சனந் தன்னாற் செய்யப் பட்டதின் வயங்கக் கொண்டு. (௪௪)

விதிவழி யாட்டி யாட்டி விருப்பினொற் றுடை யிட்டுத்
துதிகமழ் சாந்து பூசித் துணர்மலர் பலவுஞ் சூட்டி
மதியமை வில்வஞ் சாத்தி வயங்கிய கனியுங் காயு
மதிசுவைப் பிறவு நேர்வைத் தலங்குப சாரத் தூட்டி. (௪௫)

குறையற முகமன் யாவுங் கோதறச் செய்த பின்பு
முறையினட் டாங்க மாக முன்பல வணக்கஞ் செய்து
மறைமுடி வின்னுந் தேறு வள்ளலார் திருமுன் னா
நிறைமகிழ் பூத்து விம்ம நின்றிது துதிக்க லுற்றான். (௪௬)

ஆரண முதலே போற்றி யாரண முணராய் போற்றி
பூரணப் பொருளே போற்றி பூரணா னந்த போற்றி
காரண மானாய் போற்றி காரணங் கடந்தாய் போற்றி
நாரணற் கரியாய் போற்றி நாரணற் குரியாய் போற்றி. (௪௭)

வந்துவந் திரப்போ ரெல்லாம் வறியரா காத வண்ண
முந்துமுந் தருளிச் செய்யு முடிவிலா முதலே போற்றி
நந்துநந் தணிந்த காதி னலமிலேன் றுதியு நன்று
கந்துகந் துகக்கை யோடுங் கலந்துவந் தருள்வாய் போற்றி. (௪௮)

வெள்ளிய விடையாய் போற்றி விரிந்தசெஞ் சடையாய் போற்றி
யொள்ளிய படையாய் போற்றி யுமையொரு புடையாய் போற்றி
தள்ளிய கடையாய் போற்றி தரக்கத ளுடையாய் போற்றி
நள்ளிய நடையாய் போற்றி நகுமதித் தொடையாய் போற்றி.

இளைத்துவந் தடியில் வீழ்ந்த விந்துவைத் தரித்தாய் போற்றி
வளைத்துமா மேரு மூன்றார் மாட்டிவிண் பரித்தாய் போற்றி
தளைத்துநின் றடர்க்கு மன்பர் தவாமல மிரித்தாய் போற்றி
விளைத்துவெம் முழக்க மேவு வெங்கரி யுரித்தாய் போற்றி. (௫௦)

உரைசிறந் தொளிரு மேலோ ருளத்தொளி யானாய் போற்றி
யரையிரு ணடனஞ் செய்யு மம்புயப் பதத்தாய் போற்றி
குரைகட லெழுந்த நஞ்ச மமுதுசெய் குழக போற்றி
தரைபுகழ் வதரி நீழற் சங்கர தேவ போற்றி (௫௧)

இனையபன் னுதிமு பூக்கி யிலங்குபார்ப் பதிமுன் சென்றே
யனையமஞ் சனநீ ராட்டி யான்றசெஞ் சாந்து கோட்டி
நனையபன் மலருஞ் சூட்டி நறும்புகை யாதி காட்டிப்
புனையவல் லுணவு மூட்டிப் பூசைசெய் திருந்தா னன்றே. (௫௨)

இத்தகு பூசை யாற்றி யிருந்தனன் கதிரோன் சின்னா
ளத்தகு பூசை நோக்கி யாரருள் சுரந்து பெம்மான்
வித்தக விலிங்க நின்றும் வெளியுருக் கொண்டு தோன்றி
யொத்தக முவப்ப வெய்யோன் றனைவிளித் துரைக்க லுற்றான். ()

ஆழியொன் றுடைய தேரோ யழிதகை யவனைச் சார்ந்த
பாழிகொ டமை செய்யும் பாதக மனைத்து மிந்த
வூழியு மழித ராத வுயர்தலத் துற்ற போதே
வாழிநீத் துயர்ந்தா யெல்லாச் சிறப்புநீ மருவி னையால். (௫௪)

நலமலி தீர்த்தந் தொட்டு நாடொறு நம்மை யாட்டிப்
புலமலி யன்பு பொங்கப் பூசனை புரிந்த வாற்றால்
வலமலி யெயிறுங் கண்ணு மருவுக பண்டு போலக்
குலமலி தேசு மேன்மேற் கொண்டுநீ பொலிதி யென்றான். (௫௫)

என்றலு முவகை பொங்க வேழ்பரித் தோரோன் றாழ்ந்து
குன்றவிற் பிரானே நாயேன் கூறும்விண் ணப்ப மொன்று
நன்றமைந் தோங்கு மிந்த நற்றலந் தீர்த்த மேன்மை
பொன்றலி னியு மென்பேர் பூண்டினி தமர்தல் வேண்டும். (௫௬)

தவாவருள் பெற்றே னிந்தத் தலம்புகுந் தடியே னற்றா
லவாமுத லறுத்த யோக ரகத்தொளி யாகி நிற்கு
முவாமதி முகத்தாள் பாக வொழிவதற் குள்ள மில்லேன்
குவான்மணி பொலியென்றீர்த்தக்கோட்டில்யானிருத்தல்வேண்டும்.

என்னுடை வாரந் தோறு மெரிமருள் கமலம் பூத்த
வென்னுடைத் தீர்த்த மூழ்கி யிலங்குவெண் ணீறு பூசி

யென்னுடைப் பூசை கொண்ட நின்னைவந் திறைஞ்சு வோர்தோ
மென்னுடை யவரென் றோர்த வெண்ணிய தெய்தல் வேண்டும். ()

இத்தகு வரங்க ளெல்லா மெளியனேற் குதவு கென்ன
வுத்தமன் கருணை பொங்க வொற்றைக்காற் றேரி னோய்நீ
சித்தம்வைத் துரைத்த யாவுஞ் சிவனுக தந்தோ மென்று
வித்தக விலிங்கத் தூற்றான் வேதங்க ளளந்தற் கொண்ணான். (௫௯)

அன்றுதொட் டளவா மேன்மை யந்தலங் கதிரோ னாமந்
தோன்றுமெய்ப் படியா லெண்ணி லொருபெயர் சூர னென்பார்
நன்றுமப் பெயரா லென்று நவிற்றுவர் சூளா யென்று
துன்றுபன் மலர்சார் தீர்த்தஞ் சூரிய தீர்த்த மென்பார். (௬௰)

மன்னிய வதரி நீழல் வயங்குசங் கரநா தப்பேர்
துன்னிய பெருமான் றன்னைச் சூரிய நாத னென்பார்
பன்னிய கதிரோற் குள்ள பரியாயப் பெயர்க ளாலு
மின்னிய தலமுன் மூன்றும் விளம்புவ ரறிவான் மிக்கோர். (௬௧)

மண்ணொடு விண்ணும் போற்றும் வதரியா ரணியந் தன்னிற்
பண்ணொடு வண்டு மேவு மலர்செறி பரிதி தீர்த்தத்
தெண்ணொடு நெய்போ னீங்கா தியைந்தமேல் கரையோர் கோயிற்
கண்ணொடு நகையும் பெற்ற கதிரவன் வாழு மென்றும். (௬௨)

சூரிய தீர்த்த மூழ்கிச் சூரியன் றனைச்சே வித்துச்
சூரியன் பூசை செய்த சூரிய நாதன் பொற்றாள்
சூரிய னுதயங் கண்டு தொழுதெழு நியமத் தோரர்
சூரியன் போலத் தேசு துன்னியா னந்தத் தாழ்வார். (௬௩)

குட்டமே தொழுவே சிராக் குன்மமே கொடுங்கண் ணோயே
நட்டமே யியற்றும் வெப்பே நடுக்குறு காச நோயே
வட்டமா ஞாலத் துள்ள மற்றைநோ யனைத்தும் வெய்யோன்
றொட்டநீர் தோய்ந்து வாரா தோய்ந்தரா நகலு முண்மை. (௬௪)

எந்தையா ரருளால் வெய்யோ னியற்றிய தீர்த்தந் தோயிற்
றந்தைதாய் மறையோர் மன்னர் தாரயா திகளைச் சீறி
யந்தையால் வதைத்த பாவ மகன்றிடு மதான்றன் னோர்தா
முந்தைநாட் புரிந்த பாவ முழுமையு முருங்கி மாயும். (௬௫)

வீரத்தை விரும்பி னோரு மெய்வழி பாடு செய்யுந்
தாரத்தை விரும்பி னோருந் தரணியோர் குடைக்கீ ழாளும்
பாரத்தை விரும்பி னோரும் பரவுமெய்ஞ் ஞான மெய்து
மீரத்தை விரும்பி னோரு மெய்துவ ரந்நீர் மூழ்கின். (௬௬)

பிரமராக் கதமே பேயே பெருவலிப் பூத மேமற்
றுரனிலா மேவ லாற சாரந் துயவருந் கிரிமணங்கே
விரவினை மு[illegible] பா[illegible] வி[illegible] [illegible] ரத்தந் தோயி
னிரவமுன் பனிபோ லஞ்சி யெழு[illegible] பிரிந்து போமே. (௬௭)

பொருள்பெற வேண்டி னோரும் பொருவின்மா மறைமுன் னோயுந்
தெருள்பெற வேண்டி னோருஞ் சிவபிரான் பாதஞ் சாரு
மருள்பெற வேண்டி னோரு மாபுன்னோர் தமகத நல்த
மிருள்பெற வேண்டி னோரு மெய்துவர் வெய்யோன் றீர்த்தம்.

நன்புலத் தவர்க ளோதந் தருகதிர்த் தீர்த்த மூழ்கி
வன்புலப் பரிய தாய கயைமிசை மருவி னாருந்
தென்புலத் தவர்க்குத் தாங்கள் செய்கடன் செய்வா ராயிற்
பின்புலப் பரிய போகம் பெறுவாமற் றவர்க ளோடும். (௬௯)

எந்தநாண் மூழ்கி னோரும் பெரும்பய னெய்து மேனு
மந்தமா தீர்த்தம் வெய்யோன் வாரத்தா தென்மே லாகுஞ்
சந்தமா ரனைய தீர்த்த துளியொன்று சாரு மேனும்
பந்தமா ரந்நீர் தோய்ந்த பவனமேற் படினும் போதும். (௭0)

கதிரவன் றீர்த்த மேன்மை கட்டுரைத் திடவல் லார்யார்
முதிர்தவ முனிவீர் கூறா யெனமொழி வதனுக் கேது
வதிகட லுலகஞ் சொலவ தனைத்தன மினும்மோ ராற்றாற்
பிதிர்தரா வேது வுண்டா லதனையும் பேசக் கேண்மின் (௭௧)

சூரியன்பூசித்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம ௨௬௨.

# சூரன்பூசித்தபடலம்.

தக்கனார் புரிந்த வேள்விச் சாலையிற் குழீஇய தேவர்
முக்கணெம் பெருமாற் கன்று மனமுதன் மூன்றா னுஞ்செய்
தொக்கபா தகமோர் மூன்றுந் துடிதுடித் துருக்கொண் டென்னப்
பக்கவெவ் வுலகும் வந்துற் பவித்தன ரசுரர் மூவர். (௧)

வலிகெழு சூரன் சிங்க மாமுகன் மடங்கா வென்றி
யொலிகெழு தாரு கன்பே ரோதிய வொருமூ வர்க்கும்
பொலிகெழு பெருந்த வத்தாற் புண்ணியப் பெருமான் பாங்கர்
மெலிகெழு தன்மை யில்லா வரம்பல வெறுப்பக் கொண்டார். ()

கெடலரு மரணம் வாய்ந்த கேழ்கிளர் நகரு நாளும்
விடலரு மணிபொன் னாதி மிகுபெரும் பொருளு மாசை
படலரு மழகு வாய்ந்த பருவவொண் மடந லாரு
மடலருங் கருவி வாய்ந்த சேனையு மமையப பெற்றார். (௩)

மானமில் கொடுமை வஞ்சம் வயக்கிட வல்லா ராகி
யூனமில் செம்பொ னாடு முதலிய வொருங்கு தெவ்வி
யானவா யிரத்தின் மேலெட் டண்டங்கண் முழுது மாண்டு
தேனகு கற்ப கத்தார்த் தேவரை யேவல் கொள்வார். (௪)

அலைகட லகத்துத் தோணி யமைதர வியக்கிச் சென்று
வலையெடுத் தெறிந்து மீனம் வாருபு குவித்தல் செய்து
நிலைகுலைந் தலகு பற்றி நிரம்புகுப் பைகளொ ழித்து
மலைதரு சிறையிற் பட்டு மயங்கினார் வான நாடர். (௫)

வானவர் வருத்த நோக்கி வண்டுளர் தண்டு ழாய்மா
லானவர் முதலோர் கூடி யணிகெழு கயிலை சார்ந்து
நானவன் மலருங் கூந்த னங்கையோர் பாகக் கொன்றைக்
கானவன் பாதந் தாழ்ந்து கந்தனை யனுப்பு கென்றார். (௬)

இரந்திரந் தழுது வேண்டு மேழைவா னவர்க்கி ரங்கிச்
சுரந்தருள் கருணை மூர்த்தி தொக்கபல் படையி னோடு

கரந்துமால் வரைக ளஞ்சுங் கதிர்வடி வேலு நல்கி
யுரந்துளை படித்தித் தெவ்வை யொழித்துவிண் காக்க வென்று. (எ)

கலகல வொலிக்குந் தண்டைக் காலுடை யிளவற் கோதி
நலமலி விடையு நல்க நயந்தவன் பாதம் போற்றி
வலமலி குமரப் புத்தேண் மணிநெடுந் தேர்மேற் கொண்டு
விலகருந் தானை சூழத் தக்கணம் விரைந்து செல்வான். (அ)

செல்வழி வரையுந் தார காசுர னுயிருஞ் சிந்த
வெல்வழி படைதொட் பா மல குழி யாங்காங் குள்ள
நல்வழி யருளுந் தந்தை நயந்துவாழ் தலங்கள் போற்றி
வல்வழி யியங்கும் வீர வாகுவான் முழுதுந் தேர்ந்து. (கூ)

மணிமதி லுடுத்த வீர மகேந்திர புரத்து மேய
பணியலன் மைந்த னய பானுகோ பனைமுன் னோருந்
திணிகெழு படையும் வீரச் சிங்கமா முகனுஞ் சிந்த
வணிகெழு படைகை தொட்டா னமர்ந்தனன் சூர னோடும். (க0)

இலங்குபொன் புனையு மேனி யிலங்கெழிற் குமர வேளு
மலங்கலந் திணிந்தோள் வென்றி யடுசினத் தசுரர் கோவுங்
கலங்கலில் போர்மேற் கொண்டு கடிதெழூஉ விசும்பிற் செல்வார்
குலங்கெழு திசையிற் செல்வார் குரைகடற் றலையிற் செல்வார். ()

மற்றுமோ ரண்டஞ் செல்வார் வயங்கதன் புறத்துச் செல்வார்
கொற்றமா மேரு வென்னுங் குலமலை யகத்துச் செல்வார்
பொற்றவெங் கோபம் பொங்கப் புறக்கட லகத்துச் செல்வா
ரற்றமின் ருகி யிவவா றிருவரு மாடுங் காலை. (கஉ)

கண்டல மந்தி யாருங் கண்புதைத் தகன்று போக
மண்டலந் துருவிப புக்கார் மயூரவெற் பினுக்குக் கீழ்பால்
வண்டல மந்து பாடு மாலிகைத தடந்தோட் சூருங்
குண்டலச் செவிச்செவ் வேளுங் குறுகியா டமர்செய் தாரால். ()

ஆயிடை யமருக் காற்ரு தச்சமுற் றிரிந்தான் சூரன்
மாயிருங் கதிர்வே லூன்றி வள்ளலு நின்ருன் மண்மே
லாயிரங் கதிரெ றிக்கு மவ்வயி லூன்றி யெங்கள்
சேயுறு தலத்தை யாருந் திருவேலன் குடியென் பாரால். (கச)

மன்னுபல் லுலகும் போற்றி வழிபடு தலைச்செய் துய்வா
னின்னுமவ் விடத்தி லந்த விளவலவ் வாறே நிற்பன்
கொன்னுமற் றவன்றாள் போற்றி வழிபடு குணத்தின் மிக்கார்
மின்னுபல் போகந் துய்த்து வீட்டின்ப முறுவ துண்மை. (கரு)

மகப்பெற வேண்டி னாலு மணிமுத லாய செல்வ
மிகப்பெற வேண்டி னாலும் வேதநான் முதல யாவு
நகப்பெற வேண்டி னாலு நல்லருண் மலமோர் மூன்று
முகப்பெற வேண்டி னாலு முதவுமவ் விளஞ்சே யம்மா. (கசா)

கொழிவள மலிந்த வேலன் குடியிலவ் வேலன் மேவிக்
கழிமகிழ் சிறக்குங் கோயில் கவினுறப் புதுக்கு வாரு
மொழிதலில் வளங்க ளாக்கி யுவப்பொடு நல்கு வாரும்
பழிதபு போகந் துய்த்துப் பார்முழு தாண்டு வாழ்வார். (கஎ)

கோலமார் பொழில்சூழ் வேலன் குடியமர் வேல வற்கு
ஞாலமார் வத்திற் போற்றப் பூசனை நடத்து வோருஞ்
சீலமார்ந் துயரு மற்றைச் சிறப்பெலாஞ் செய்விப் போரு
மூலமா ரனையான் பாத முழுக்கலப் படைந்து வாழ்வார். (கஅ)

வேறு.

வண்டார்தொடைத் தடந்தோட்குகன் மற்றோரிட நண்ணக்
கண்டார்பல வரனோரவண் கைகூப்பிய டைந்து
தொண்டார்தரப் பலபூமழை சொரிந்தாருளத் துவகை
கொண்டாரதைப் பலவானவர் குடியென்றுரை செய்வார். (கக)

வேறு.

பன்னரும் வனப்பு வாய்ந்து பரிதியிற் பொலியுஞ் செவ்வேள்
சொன்னவத் தான நின்று மற்றொரு சூழல் புக்கா
னென்னரு மவணு லத்தி யெடுத்தனர் துதித்து நின்று
ரன்னநற் றலத்தை யின்னு மாலத்திப் பட்டி யென்பார். (உ0)

வயங்குமவ் விடத்தி னின்று மற்றுமோ ரிடத்தை யுற்று
னுயங்குத லடித்து ளாருக் கொழித்திடு குமரப் புத்தேள்
பயங்கொளவ் விடத்து மாலை யிட்டார்பண் ணவர்மெய்ச் சீரா
வியங்குந் தலத்தை மாலை யிட்டானென் றிசைப்ப ரின்னும். ()

புலவரிவ் வாறு போற்றிப் பூசனை செய்யப் போந்து
நலவரு ளகலாச் செவ்வே ணற்கலை யுணர்ந்த பன்னு
வலவரேத் திடும யூர வரையமர்ந் திருந்தான் வஞ்சக்
கலவர்செய் தொழின்மேற் கொண்டான் கடிவர னைக்கி மாதோ.

முருகவே ளங்ஙன் மேவ முன்னமே யிரிந்த சூரன்
மருமலர் வாவி சூழ்ந்த வதரியா ரணியம் புக்கான்
றிருவம ரனைய தானச் சிறப்பெலா நோக்கும் போது
பொருவரு மிலிங்க ரூபப் புராணனை யங்குக் கண்டான். (உஙு)

கண்டபோ தன்பு பொங்கக் கரதலங் குவித்துப் போற்றி
யண்டரும் பிறருங் காண்டற் கரியவிப் பெரிய சோதி
தண்டரு மிக்கான் றேன்றி யிருந்ததென் றவபபே றென்னக்
கொண்டபே றுவப்பி னேடும் பூசித்தல் குறித்தா னன்றே. (உச)

ஆதித்தன் றீர்த்தப் பாங்க ரடைந்துசங் கற்ப மென்ப
தோதித்தண் புனலின் மூழ்கி யொளவிரிய நீறு பூசி
நீதித்தண் மலர்கள் கொய்து நிலவுமஞ் சனமுங் கொண்டு
நாதித்த கழற்காற் சூர னண்ணினன் பெருமான் முன்பு. (உரு)

திருந்துமஞ் சனநீ ராட்டித் திருமலர் பலவுஞ் சூட்டிப
பொருந்துகூ விளதிற் கொய்த பொலிதளிர் பலவுஞ் சாத்தி
மருந்துநே ருணவு மூட்டி மற்றும்பன் முகம னெல்லாங்
கருந்துழாய்க் கோவி றைற்குட் கனிந்துறச் செய்த பின்னர். (உசா)

விரையவட் டாங்க மாக விரும்புபஞ் சாங்க மாகத்
தரைமிசைப் பணிந்தெ ழுந்து தம்பிரான் முன்னர் நின்றே
யுரைதடு மாற நெஞ்ச முருகநீ ரிருகண் சோரக்
கரைதரு துதிகள் செய்வான் கருங்கழ லசுரர் கோமான். (உஎ)

மேருவில் லாகக் கோட்டி வியாளமே நாணுப் பூட்டிச்
சாருமா னெடுங்கோல் கூட்டித் தழல்புரந் தளர வூட்டி
யோருமா வெற்றி காட்டி யும்பர்த மிடுக்க ணோட்டி
யாருமின் படைய நாட்டி யமர்பர மேட்டி போற்றி. (உஅ)

வீரருள் வீர போற்றி வேதத்துட் சார போற்றி
யாரரு ணீர போற்றி யாயிரம் பேர போற்றி

பாரமை தேர போற்றி பரவுப கார போற்றி
தாரமை யார போற்றி சங்கரி தார போற்றி. (௪௯)

கையுகிர் வாள போற்றி கண்டகத் துக் காள போற்றி
செய்யபொற் றாள போற்றி தேர்வரு நீள போற்றி
மையவுத் தூள போற்றி யன்பருக் காள போற்றி
மொய்யவெண் டோள போற்றி முதல்விம ணாள போற்றி (௫௦)

கொன்றையந் தாம போற்றி கொன்றருள் காம போற்றி
நன்றபி ராம போற்றி நவிற்றுபன் னாம போற்றி
துன்றவா டம போற்றி தோகைவாழ் வாம போற்றி
குன்றவி லேம போற்றி குலாநட யாம போற்றி. (௫௧)

ஒருசிறு துரும்பால் வானோ ருடைதரக் கண்டா யோல
மொருசிறு நகத்தாற் பூவோ னொருசிரங் கொய்தா யோல
மொருசிறு நகையான் மூன்றா ரொருங்கெரித் தவனே யோல
மொருசிறு பாலன் போருக் குடைந்துளே னோல மோலம். (௫௨)

என்றுதோத் திரஞ்செய் தேத்து மெறுழ்வலிச் சூரன் முன்பு
நன்றுநம் பெருமான் றோற்றி வேட்டதென் னவிற்றி யென்றா
னொன்றுபே ரன்பின் மீட்டு முள்ளுடைந் துருகி மேன்மை
பொன்றுத லில்லாப் பொற்றாள் போற்றிநின் றிதனை வேண்டும். ()

இறைவனே யடியேன் போரூண் டித்தலம் வழங்கல் வேண்டு
முறையினித் தலஞ்சார்ந் துன்னை முனிவர வழிபா டாற்று
நிறைவினர் நினைத்த யாவு நிரம்புற வடைதல் வேண்டுங்
குறைவினின் பொற்றா ளீற்றிற கூடவும் வேண்டு மாலோ (௫௪)

முந்தைநா ளடியேன் பெற்ற முழுப்பெரு வரங்க ளெல்லாஞ்
சிந்தைசெய் யாதோர் பாலன் றேவருக் காக வேற்று
வந்தையா வமர்த்தல் செய்வான் மற்றவை யொடுபோ ராற்றி
நிந்தைதீர் வெற்றி மேவி நிகழவும் வேண்டு மென்றான். (௫௫)

முன்னுரைத் தவைக்கவ வாறே யாகென மொழிந்து நக்குப
பின்னுரைத் ததற்கு நின்னோ டெவர்பொரு தமர்த்த போது
முன்னுரைத் திட்ட வாறே நகையலான் முடிவு காணாய்
பின்னுரைத் திடலென் போதி பெருவலிச் சூர வென்றான் (௫௬)

கோதிலா னுரைத்த வார்த்தைக் குறிப்புண ராது சூரன்
போதிலா னெடுமா லேனைப் புலவர்கள் போற்செவ் வேளு
மேதிலா னென்றுட் கொண்டே யெய்தினன் மகிழ்ச்சி யொன்று
மோதிலான் றொழுது போனா னுருக்கரந் தனன்கோ மானும்.(௩௭)

சென்றவன் மயூர வெற்பிற் சிறந்துவீற் றிருக்குஞ் செவ்வேண்
முன்றனு வளைத்துச் சென்றான் றூண்டன னவனும் போருக்
கொன்றுவெஞ் சினமீக் கொண்டா ரொன்றலா வாளி தூர்த்தார்
கன்றவெவ் வுலகுஞ் செல்வார் கலங்கினர் சுரரு மம்மா. (௩௮)

இவ்வண்ணம் பெரும்போ ராற்றி யிளைத்தனன் மீட்டு மென்னே
செவ்வண்ணப் பெருமான் றந்த வரமெனச் சிந்தை செய்தான்
மைவண்ணப் பொழில்சூழ் சூரை மாதேவன் பூசைப பேற்றாற்
கைவண்ணச் சிலைவெஞ் சூரற் குதித்தது கரிசின் ஞானம். (௩௯)

ஞானம்வந் துதித்த லோடு நமையலான் மற்று முள்ளோ
ரானவர் நின்னை வெல்லா ரென்றர னுரைத்த வார்த்தைக்
கினமின் றவனே போர்செய் யிவனெனத் தெளிந்தா னந்தோ
போனது போக நாமேற் புரிவதென் னென்று தேறி. (௪௦)

அடுபகை பூண்ட வாறே யமர்த்தொழிற் றவனுக் காளாய்
விடுவதே துணிபென் றோர்ந்து வேலையுண் மாவாய் நின்று
ப[illegible]டர் வேலாற் கிளைப் பட்டிரு புள்ளா யையன்
றொடுகழற் பாதம் போற்றித் துவசமோ ரூர்தி யானான். (௪௧)

அருந்தவப் பெரியீர் கேண்மி னறைந்தவிவ் வேது வாலும்
பெருந்தவர் சூரை யென்பர் பேசவல் லவர்நா விற்கு
விருந்தெனும் புகழ்டபொன் னான விசயால யன்ப ணிந்து
திருந்துபல் பணியுஞ் செய்த திறமெடுத் துரைப்பாங் கேண்மின்.

சூரன்பூசித்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௫௦௪.

# பொன்னானவிசயாலயதேவன் திருப்பணிப்படலம்.

அசையாவள மல்கி விளங்கி யமைந்து நாளு
மிசையானிறை யும்பொலி சூழா யிடத்து வாழ்வோன்
பசையாலுயிர் முற்று முவப்புறுப் பான்பொன் னான
விசையாலய தேவ னெனும்பெயர் மேவி யுள்ளான். (க)

வேறு.

இரும்புகழ் மேவியி லங்கெபு ல் வாய்ந்து
சுரும்புவி ராம்பொழிற் சூழையை யண்மிப்
பெரும்புவி யோர்மிகப் பேணுதல் செய்து
விரும்புற நாளும் விளங்குகு ணத்தான். (உ)

குறுநில மன்னர்கு லத்திலு தித்தான்
மறுவறு கல்விவ ரம்பென வாய்ந்தான்
முறுவலி னாற்புர மூன்றுமெ ரித்தா
னுறுதளிர் நேரடி யுள்ளம மைப்பான். (௩)

பொத்திய மாமலம் வேரொடு போகச்
சத்திய ஞானச தாசிவ பூசை
நித்திய மாற்றின லாற்பசி நீங்கான்
பத்திய னாய்மிகு பண்புவ ளர்ப்பான். (௪)

சிவனமர் மாதலச் சேவைசெய் தென்றுஞ்
சிவதல மான்மிய மேசெவி யேற்றுஞ்
சிவனடி யார்திருப் பூசைபு ரிந்துஞ்
சிவபணி யேநனி செய்துமு வப்பான். (௫)

கற்றவ ருக்கொரு கற்பக மானா
னற்றவ ராசிந விற்றிட வாழ்வோன்
கொற்றவ ரேறுகு லாவுமன் னானு
முற்றவு ணர்ந்தமு முப்புக ழோனே. (௬)

வேறு.

இந்திர திருவ னென்னு மிணையணிவ வாறு வாழ்நாட்
சந்திரன் றவழு மாடத் தனிநகர்ச் சூளை யோர்பா
னந்திர வியமென் றோது நல்வளப் பொலிவோ டுள்ள
மந்திர வுருவன் மேய வதரியா ரணியம் புக்கான். (௭)

சான்றவர் பலருங் காணத் தன்னக ரொருபான் மேய
மான்றபல் விருக்கந் தொக்க வதரியா ரணியம் புக்க
தேன்றவழ் மாலை மார்பன் சிறுவழி யூடு சென்று
கான்றவழ் மலர்வி ராமக் கானத்து வளமை காட்டும். (அ)

மலர்செழுங் கடுக்கைத் தாரு வொன்றன்மேன் மருவ கத்தி
யலரரும் பணையப் பூவை யத்தரு மறைத்த தோற்ற
நிலவுதன் முடிமேற் காண நெடியவெங் கரித்தோன் மூடிக்
குலவுசீ ரந்தி வண்ணக் குரிசினின் றனைய தோர்மின். (௯)

ஒருங்கிலை யுகுததுப் பூத்த வொள்ளிய பலாசோர் பாங்கர்க்
கருங்கடி மலர்க்கா யாவொன் றுறவெதிர் காயா வொன்று
பெருங்கிளை பரப்பித் தாழ்தல் பெண்ணொரு பாக னேரே
சுருங்கலி லன்பின் மாயோன் பணிவது துணைவ தோர்மின். (௧௦)

அடித்தலம் பூத்த காயா வணைதர வதன்மேற் கொன்றை
முடித்தல முதலாப் பூத்து முறிவற விளங்குங் காட்சி
படித்தலம் புகழ்மா லாய பயோதர வூர்தி மீது
கொடித்தலத ரேறு வைத்த குழகனின் றனைய தோர்மின். (௧௧)

பிடாமலர்ந் திருப்ப வுள்ளாற் பிறங்கிய காயா மேலால்
விடாதலர்ந் தொருங்கு மூடி விளங்கிய தேர்ற்ற முள்ளாற்
படாதசத் துவகு ரம்பப் படர்ந்ததா மதம்பு றத்துக்
கெடாதமை யுருத்தி ரன்போற் கிளர்தரு தன்மை யோர்மின். (௧௨)

வன்னியந் தருவி னீழன் மலர்ந்தமர் பிடாவின் றோற்ற
மின்னிய கழனி வாசற் கொற்றவா ளீசர் மேலாற்
றுன்னிய வடியார் கூடிச் சோற்றபி டேகஞ் செய்ய
மன்னிய காட்சி போன்ற தோருமின் மதியான் மிக்கீர். (௧௩)

இருதரு வொருங்கு பின்னி யெழுமலர்ச் சிவப்பு வாய்ந்து
பொருவளி யலைத்த லாலே யசைதரு பொலிவு தேரின்
வெருவரு தன்மை யில்லா விசயனு நம்பி ரானு
மொருவருஞ் சினத்தின் மற்போ ருஞற்றிய தொப்ப தோர்மின். ()

நெடியவித் தாரு மேலா னிரம்பிய கிளைக ளெல்லாம
படியமை திசைகூ ளெட்டும் பரவுற விரித்துப் போக்கிக்
கடியமுண் டகங்கீழ் மொய்ப்ப நிழல்செயுங் காட்சி தேரிற்
கொடியகோ னடா த்து மன்னன் குடைநிக ராவ தோர்மின். (௧௫)

செறிதர வீட்டா நின்ற செம்பொருண் முழுதும் யாரு
மறிதரா வண்ண மண்ணுண் மறைத்துவைத் தமர்வார் மானக்
குறிபெறு தன்காய் முற்றுங் குலவுமட் புதையப் போக்கி
வறிதமைந் தெழுந்து நிற்கும் வருக்கையின் றிறனு மோர்மின்.

இன்னபல் வளங்க ளெல்லாந் தனித்தனி யியைய நோக்கித்
தன்னமர் காதல் பொங்கச் சான்றவர் பலர்க்குங் காட்டி
மன்னவன் வருமப்போது வாரிச மலர்கள் பூத்து
நன்னல மருவும் பொய்கை யொன்றவ ணன்று கண்டான். (௧௭)

திருமல வடியார் சிந்தை நிகர்தரத் தெளிந்த தாய
குருமலர் தீர்த்த மள்ளிக் கொண்டனன் விருப்பி னுண்டான்
றிருமலர் பறித்து மோந்தான் றிபபியம் பொலிய விந்த
மருமலர்த் தீர்த்த மிங்கு வந்ததென் னென்று தேர்வான். (௧௮)

அத்தகு தீர்த்த மேலைக் கரையினை யவாவிச் சென்று
னுத்தமக் கதிரோ னங்குப் பொலிந்தினி துறைதல் கண்டான்
கைத்தலங் குவித்துத் தாழ்ந்து கருகிருள் பருகுஞ் சோதி
வித்தக னிங்கு மேவ லென்னென மிக்குச் சூழ்வான். (௧௯)

இலங்குமிக் கானத் தின்னு மென்னுள தாய்வோ மென்று
துலங்குமத் தான நின்று துனைந்துசற் றப்பாற் சென்றான்
மலங்குத றவிர்த்தாட் கொள்ள வதரிநன் னீழன் மேவி
யலங்குபே ரருளின் வைகி யருள்சிவக் குறியைக் கண்டான். ()

கண்டபோ தன்பு பொங்கக் கைகடந் தலைமேற் கூம்ப
வுண்டனிற் பணிந்து வீழ்ந்து வல்லையி னெழுந்து நின்றே

யண்டர்தம் பெருமா னிங்கே யகப்பட்டா னடியேற் கந்தோ
தொண்டனே னுய்ந்தே னென்று துதித்துமிக் குவகை பூத்தான்.

வயங்குமிச் சுயம்பு லிங்க மான்மிய மொன்றுந் தேறேன்
றியங்குத லொழிக்கு மந்தத் தீர்த்தத்தின் வரவுந் தேறே
னியங்குவெங் கதிரோ னங்ங னிருந்தருள் குறிப்புந் தேறேன்
மயங்குவன் றேற்ற வல்லா யாரென மனத்துட் கொள்வான்.

வேறு.

காணப் படாத வுருவினுக்குங் காணப் பட்ட வுருவினுக்கு
மாணப் பெருங்கா ரணமாகி வயங்கா நின்ற சிவலிங்கங்
காணப் பெற்றும் வாளாநான் கழிவ லெனிலென் னறிவென்னா
மாணப் புனைந்து பூசித்தா லன்றி மற்றொன் றியற்றேனால் (உ௬)

என்று கதிரோன் புனன்மூழ்கி யிலங்கு திருவெண் ணீறணிந்து
நன்று தருங்கண் மணிபூண்டு நமவீற் றுறவைந் தெழுத்தெண்ணி
யொன்று முவகை தலைசிறப்ப வுற்ற திருமஞ் சனமாதி
யன்று கிடைத்த கொடுபூசை யாற்றிப் பணிந்து போற்றினான்.

இடப்பான் மருவு தேவியையு மிவ்வா றன்பிற் பூசித்துத்
தடப்பா லமர்ந்த செங்கதிரோன் றனையும் போற்றி யுடன்வந்த
மடப்பா லகன்ற சான்றோரு மறையோ ரொருமுடன்றொடர [காண்.
விடப்பா ரோயுமவ் வேந்தனை விடைகொண் டிருக்கை போய்ப்புக்

இருக்கை யடைந்த வேலவேந்த னெண்ண மிகுந்து பசித்தானாய்
வருக்கை யடைந்த கானகத்து வதரி நீழல் வீற்றிருக்குந்
திருக்கை யொறுக்கு நம்பெருமான் றேவி யோடுந் தனியிருந்தான்
மருக்கை யாத மலர்த்தீர்த்த வரவுந் தெரியே னாயிருந்தேன். (உ௯)

தீர்த்தம் புனையும் பெயர்யாதோ தீர்த்தக் கரைவெய் யவன்மேற்குப்
பார்த்தங் கமருங் குறிப்பென்னோ பழுத்த வதரி நிழலமரு
மாத்தன் பெயரென் னோதேவிக் கமைந்த பெயரென் னோவறியே
னேத்த வுரியே னிவையெல்லா மென்று தெளிவே னெனக்கவன்று.

இரவு முணவு கொள்ளானா யெங்கித் தளர்மேற் றனிகிடந்தா
னரவு சூடி திருவருளாற் றுயின்றா னனையான் கனவகத்துப்

புரவு புரிவோன் முதலயரா புணரப் புணரா தகல்பெருமான்
கரவு தவிர்தன் றிருமேனி காட்டி யருளிச் செய்கின்றான். (௨௮)

வாராய் புகழிற் பொலிந்தோங்கு மன்னா கவலை முழுதுமொழி
யாராய் வதரி வனத்துமுளைத் தருளுஞ் சிவம்யா மளவில்சுகம்
பாராய் தருமன் னுயிருறுதல் படர்ந்து முளைத்த காரணத்தாற்
பேரா யிரமுள் ளனவேனும் பேசு நூல்சங் கரநாமம். (௨௯)

என்றும் பிரியா திடத்திலமாந் திருப்பா டிருப்போ பாரப்பதிகா
ணென்று மிருவே முமபெயர்வே றுறுவோம பின்னோர் காரணத்தா
லன்று நீயுந் தெரிந்திடுதி யைய வொருசூ ரியன்பூசை
துன்று மன்பிற் புரிதலாற் சூரை யாய திததலப்பேர். (௩௰)

முந்தக் கதிரோ னலையாட்ட முயன்று கண்டா னததீரத்த
மந்தக் கதிரோன் பெயர்பூண்டே யமரு மஃதத் தடந்தீர்த்தச்
சந்தக் கரைவாய் நயைவேண்டித் தணவா திருப்ப னவனமக்கு
மெந்தத் தலத்து மதிவிருப்ப மிந்தத் தலத்தென றுணருதிநீ. (௩௧)

பின்னுங் கதிரோன் வேண்டவவன் பெயர்முந் துறவோர் பெ
யர்பூண்டோ, மின்னுஞ் சொலகங்கள் சூரனைடந் தெய்திப் போ
ற்றி மிகவேண்டி, மன்னுப வரங்கோ டலினுஞ் சூரை யெனும
பேர் மருவியதா, லுனனு மவாககு நினைத்தவெலா முதவிப் புரக்கு
மித்தலமே. (௩௨)

விசையா லயனா ரெனகினத் பேரால விளங்கு மினியுணாதி
திசையா தரிக்கும புகழோய்நீ செய்வ தொன்றுண் டதுகேண்மோ
வசையா வலிய காடுமுழு தகழ்ந்து போக்கி யாலயம்பே
ரிசையால் விளங்க வமைத்துவிபூ முதப்பல் சிறப்பு மியற்றியால்.

மன்னுந் தளிசூழ் தரவீதி வகுத்து மணிமா ளிகைசமைத்து
மின்னு மறையோர் முதலியபல் குடிக ளுவன்ற மேவுவித்துப
பன்னு நீயு மவ்விடத்தே குடிகொண் டமாதி படர்ந்தவெலா வன்
முன்னு முன்னம் பெறுதியென மொழிந்து மறைந்தான் முழுமுதல

இறைவ னருளி மறைதரலும விழித்தா னிறும்பூ தெய்திய
னிறையு மகிழ்ச்சி தலைக்கொண்டா னிலவு வதரி வனமருவும் [ருட
பொறைகொ டிசைநோக் கிப்பணிந்தான்புலவர்பெருமான்பெருகுப
இறையில் மழகி மிகத்தினைத்தான் சொற்ற விசயா லயத்தேவன்.

மேவு கதிரோ னுதிப்பளவும் விழித்தே யிருந்து வெளிவந்து
பாவு மறையோர் முதலாய பலருந் தன்பால் வரக்கூவி
யோவு கவலை யுடையானு யுண்மைக் கனவை யெடுத்துரைத்துத்
தேவு மலியும் வதரிவனஞ் சென்றான் பலரு முடன்வரவே. (௩௬)

சென்ற விசயா லயத்தேவன் றிருந்த வுடன்வந் தவரோடு
மன்றன் மலர்கண் மலிகதிரோன் வகுத்த பொய்கைப் புனறோய்ந்து
நன்ற வாவு திருநீறு நறுங்கண் மணியு முறைவணிந்து
வென்ற மறையி ரித்தீர்த்தம் வெய்யோன் வகுத்த தீர்த்தமால். ()

இந்தத் தலமான் மியமுணர்ந்தே யிமையோ ரருளாற் றணவாது
சந்தக் கதிரோ னிங்கமர்வான் சாமி தனையிச் சூரியன்காண்
முந்தப் பூசித் தனனதனை சூரை யெனவிம் முதுதலத்தை
நந்தப் பெரிய ருரைப்பரினு நவிலு மொருகா ரணங்கேண்மின். ()

சூரன் பூசித் ததனானுஞ் சூரை யென்பா ரென்றுபுவித
தேரன் றிருவாய் மலர்ந்தனன்றான் சென்று பணிமே வாமவனையெ
வாரன் பொடுமங் கடைந்தவரோ டாரவிட பணிந்து போற்றினன்
வீரன் விசயா லயனென்ன விளம்பு நாமப் பெருந்தகையே. (௩௯)

அன்றே நவியங் குயமுடையார் பலரைக் கூவி யடவியெலாங்
கொன்றே யொழிமின் மிகப்பழுத்துக் குளிர்ந்த நீழல் செயும்வதரி
பொன்றே தவிர வென்றுரைத்தா னுரைத்த வாறே யவர்களெழுந்
தின்றே முடித்து மெனக்கூறி யெறிந்து தொலைத்தார் வனமுழுதும்.

சிற்ப முணர்ந்த திறலோரைச் சிறப்பின் வருவித் திறையவனுக்குப்
பொற்ப வமரா லயநன்கு புரிமி னென்று பொருள்பலவு
மற்ப மொழிய நனிகொடுத்தா னவரும் வரைகள் பலபிளந்து
சிற்ப கிடப்ப முறையாக நேரப் பொருத்திப் பணிசெய்வார். (௪௧)

ஆன்ற கருப்பக் கிரகமே யலங்கு மத்த மண்டபமே
தோன்ற மிளிர்மா மண்டபமே சோதி நிருத்த மண்டபமே
யேன்ற மதிலே கோபுரமே யாக சாலை மடைப்பளியே
சான்ற வொருபாற் பதியென்றுந் தணவா தமருஞ் சினகரமே. ()

சூழா வரண தேவரமர் சுடர்செய பொன்செய் தளிகளே
யூழா முலகு மினித்தேத்த விசைக்கும் பிறவே பேரழகு

வாழா நிற்க வகுத்தமைத்தா மன்னு மூவகைப பெருத்தி
யாழா விசயா லயதேவ னேக்கி நோக்கி யதிசயித்தான். (சரு)

பின்னு மொருநான் மறைகொழுங்கிற் பிறங்கப் புரிந்தாங் கிருபாலுந்
துன்னு மணிமா ளிகைபலவாய்த் தோன்ற வுயர்விற் புரிவித்துக்
கொன்னு மறையோர் குடிமுதனூற் குடியும் பிறவுங் குடியேற்றிப
பன்னு மினிய நன்னூளிற பரவக குடிமே வினன்றானும். (சச)

தாவா வுணர்ச்சி நலனூதி சைவ மறையோர் தமைக்கொண்டு
மூவா முதல்வற் கபிடேக முழங்கப புரிந்து மற்றுமுள
தேவா னவர்க்குஞ் செய்வித்துத் திகழ்பூ சனையும விழாச்சிறப்பு
மோவா வளத்தின் மிகப்பெருகி யோங்கப புரிவித் திறைஞ்சுவான்.

நீர றாத விளைநிலமு நெடுவான் றடவு சோலைகளுஞ்
சீர றாத பாற்பசுவுஞ் செப பொன் பொலிபல் வாகனமு
மேர றாத கொடிகுடைமுன் னிசைக்கும் பலவாம விருதுகளு
நார றாத மனத்தினொடு நங்கள் பெருமாற் கினித்தளித்தான். (சகூ)

எங்கு மறைகள் முழங்குவன வெங்கு மியங்க ளிம்புவன
வெங்கு மடியார் குழாநெருங்கு மெங்கும பரிச னங்கள்குழா
மெங்கு மிகுவ வரமுழக்க மெங்கும் வரங்கொண் டுவப்பவரே
யெங்கும் பொலியப பெருகியதா லெங்கள் பெருமான் றிருக்கோயில்.

அன்று விசயா லயபுரமென் றொருபேர் பூண்ட தச்சூளை
நன்று தெரிமின் முனிவரர்கா ளென்று சூத னவிற்றிடலும
வென்று பொறியைந் தையுமவித்த மேலோர் சூத முனிவரன்றா
ணின்று மன்பிற் பணிந்தெழுந்து தோன்ற வொன்று வினவுவார். ()

ஐய விசயா லயதேவ னமர்ந்த பதிமுன் சூளையென்றா
யெய்ய மீட்டுஞ் சூளையென்றா யிரண்டோ வொன்றோ சூளையெனல்
செய்ய திருவாய் மலர்ந்தருளிச் செய்ய வேண்டு மென்றிரந்தார்
மைய லகன்ற மாதவனு மகிழ்ச்சி பூத்து விடைகொடுப்பான்.

ஆன்ற சூளைத் தலத்தெல்லை யைங்கு ரோச நாற்புறத்துஞ்
சான்ற வதனு ளொருபாகந் தயங்கு நகர மாயிருந்த
தேன்ற வொருபா கங்காடா யிருந்த திவணு லதுமாறிற்
றான்ற வுணர்வீர் சூளையென லொன்றே நெடுநாள் கண்டதது. ()

அதனு லந்தத தலவரலா றறியா திருந்தார் யாவர்களு
மதனல் வருந்தான் வெளிசெய்தான் மன்னன் கனவிற் சென்றருடை
யிதனு லந்தத் தலப்பெருமை யிறைவ னேசொற் றிடற்குரியோன்
பதனு லுயர்ந்தீ ரென்றுரைத்து மற்றைக் கதையும் பகருவான்.

பொன்னனவிசயாலயதேவன் திருப்பணிப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௫௫.

# பொன்னனவிசயாலயதேவன் நிருத்த தரிசனஞ்செய்தபடலம்.

பசையாலுயி ரோம்பி, வசையாவுமின் மாண்பான்
றிசையாவுஞ்செல் சீர்த்தி, விசையாலய னென்பான். (க)

சூரைக்குடி மேய, காரைப்பொரு கண்டன்
சீரைப்புனை செந்தா, ளுரைக்கொடு நட்டு. (உ)

வருவானென்று தினத்திற், பெருவானவ ரேத்து
மொருவானவன் முன்போய்த், திருவார்துதி செய்வான். (௩)

கதிரோனடி போற்றப், பிதிராவர மீந்தோ
யதிராவரு சூரற், கெதிராகலந் தந்தோய். (ச)

குலவானவ ரேத்தி, நிலவாதரஞ் செய்ய
வுலவாவத ரியில்வாழ். நலவாவருள் செய்தி. (ரு)

எண்ணுரெயின் மூன்று, மண்ணுக்கெ ரித்து
விண்ணுடிபு ரந்த, வண்ணுவருள் செய்தி. (சா)

செந்தாமரைக் கண்ணுர், நந்தாவக நந்த
முந்தாரமு லாய, மைந்தாவருள் செய்தி. (எ)

மாற்றும்மன வந்த, கூற்றுருயிர் சிந்தப்
பாற்றுமுனை காத்த, வேற்றுயருள் செய்தி. (அ)

பம்பாதர மோங்கக், கொம்பாரிடை யாளைச்
செம்பாதிமெய் வைத்த, நம்பாவருள் செய்தி. (௯)

நித்தாவடி நாயேன், சத்தாதரித் துய்ய
வொத்தாடியு வக்கு, முத்தாவருள் செய்தி. (௧௦)

விரித்தாய்தரு மேலோர்க், குரித்தாய்மிளி ரொருவா
பரித்தாய்வரு திங்க, டரித்தாயுனைச் சார்ந்தேன். (௧௧)

முத்தாமுழு முதலே, யத்தாவுனை யடைந்தே
னத்தானயன் போற்றுஞ், சுத்தாவுனைத் தொழுவேன். (௧௨)

மறவாதடி போற்று, மறவாணர்க ளரசே
பிறவாநெறி பெறவே, னுறவாவுனைத் தொழுவேன். (௧௩)

பொன்னேயொளிர் மணியே, மின்னேபுரை சடையாய்
தன்னேர்வரு சம்பு, வன்னேயுனை யடுத்தேன். (௧௪)

வரமாதவர் வழுத்தா தரமார்தரு தாணுஉ
கரமானுரி போர்த்த, பரமாவுனைப் பணிவேன். (௧௫)

வேறு.

என்று தோத்திரம் புரிதலு மெதிரெழுந் தருளிக்
குன்று கோட்டிய குழகன்வேண் டுவதெவன் கூறு
நன்று நல்குது மென்றலு நயந்தடி பணிந்து
வென்று மேம்படு புகழுடை யானிது வேண்டும். (௧௬)

ஐய னேநின தருணடங் கண்டிடு மார்வம்
வெய்ய பாவியேற் கெழுந்ததா லதுபெற வேண்டுஞ்
செய்ய நின்னருள் செய்தியென் றிரந்தனன் மகிழ்ந்து
வைய முய்தர வாளுடை யானிது வகுப்பான். (௧௭)

என்று மித்தலம் போலநா மினிதுவீற் றிருக்கு
நன்று மேவிய வொருதல நகுதிருப் புத்தூ
ரொன்று மிவ்விட வதரிபோற கொன்றையங் குறையுந்
தொன்று சூரிய தீர்த்தம்போற் சீதளி துலங்கும். (௧௮)

இங்கு மாலயன் முதலியோர் வழிபட லென்ன
வங்கும் வந்துவந் தடிபணிந் தேகுவா ரனைய

பொங்கு மாதலத் திலக்குமி தொழுநடம் புரிவோங்
கொங்கு மாலையா யாயிடைக் குறுகிநீ காண்டி. (௧௯)

என்று வாய்மலர்ந் தின்னருள் செய்துருக் கரந்தான்
கன்று மான்மழு வேந்தியோன் கருத்துமுற் றியதென்
றன்று சேவடி பணிந்தெழுந் தருள்விடை பெற்றுச்
சென்று சேர்ந்தனன் றிருநல மலிதிருப் புத்தூர். (௨௦)

திருப்புத் தூருறைத் தேவனைத் தேவர்தம் பிரானை
விருப்பிற் றாழ்ந்தெழுந் தருள்பெறு விருப்பனாய் நின்றான்
கருப்பிற் றேமொழித் திருவுங்கை தொழுதன ணின்றா
ளருப்பிற் கொன்றையா னாரருள் வழங்குவா னான். (௨௧)

விரியி ளங்கதி ருதித்தென மிளிர்சடை மேவிப்
பரிய மாமுய லகன்வெரி னொருபத மூன்றி
யிரிய மும்மல மொருபதங் குஞ்சிதத் தெடுத்துத்
தெரிய வம்மைவாண் முகத்தருட் கட்கடை செலுத்தி. (௨௨)

மாயன் மத்தள முழக்கவண் டாமரை மலர்மேற்
றாய னுத்திடத் தும்புரு நாரதர் நரம்பு
தோய வீணைகொண் டிசையமு தொழுக்கிட விரவிப்
பாய பல்கண மரகர வெனுமொழி பரப்ப. (௨௩)

மதலை மாலையு மதின்முதல் குறைந்தமா லிகையும்
விதலை தீர்திருத் தோளிடைத் துயல்வர மேலான்
முதலை யோடொரு திங்களு முகிழ்த்தெழ வதலை
யதலை நீயெனு மருமறைச் சிலம்படி யரற்ற. (௨௪)

ஒருக ரந்துடி முழங்கிடக் கொழுந்துகொண் டொளிர்தீ
யொருக ரந்தனி னிவந்தெழக் கவிழ்தலை யுளூற்றி
யொருக ரந்தனி பொலிதர வுயிரெலா முய்வா
னொருக ரந்தழைந் தபயமின் னருளொடு முதவ. (௨௫)

ஆடி னான்றிரு வருட்பிரா னாடலை நோக்கிச்
சூடி னானிரு கைகளுந் தலைமிசைத் துதித்துப்
பாடி னான்வினை பாற்றினான் பரந்தெழு புளக
மூடி னான்றிரு மகளுமுள் ளானந்த முகிழ்த்தாள். (௨௬)

மற்றை யாவரு மானந்த முற்றனர் வள்ளல்
சுற்று கான்முடி யளாமதி முழுமதித் தோற்றம்
பெற்ற தாமெனப் பிறங்கிய தறிந்துளம் பிணைந்து
கொற்ற வாளினன் விடைகொடு குறுகினன் றன்னூர். (௨௭)

அளவி லானந்த முற்றவன் சூரைவா ழமல
னளவி லின்பருள் பாததா மரைபணிந் தகம்போ
யளவி லானந்தக் கூத்தையே யுண்ணினைந் தடர்ந்தா
னளவி லாப்புக ழானென வுரைத்துமே லறைவான். (௨௮)

போன்னனவிசயாலயதேவன் நிருத்த தரிசனஞ்செய்தபடலம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௩௮௩.

# சங்கப்புலவர் பூசித்தபடலம்.

மேலாகிய புகழாளுயர் விசயாலய தேவன்
சாலாகிய வின்புற்றினி திவவாறமர் தருநாண்
மாலாகிய வானேன்றெழு மதுராபுரி யதன்வாய்
நாலாகிய மறைதேர்வரு நம்மானமர் தளியுள். (௧)

ஒருவாதொளிர் திருமண்டப மொன்றுண்டது ளப்பட்
பெருவானரு மணுகற்கரும் பீடத்தினி தமர்வார்
மருவார்மலர் மலர்வாழ்கலை மகள்கூற்றினு திததார்
திருவார்வட கலைதென்கலை தேர்ந்தேகளை கண்டார். (௨)

திருந்தார்புர மூன்றுங்கெடச் செற்றாரரு ளூற்றார்
வருந்தார்கதிர் மதிதெற்குவ டக்கேகிடு மேனும
பெருந்தார்கொடு சிவபூசை பிறக்குற்றிடி னன்றி
யருந்தார்சுவை யமுதாயினு மளவாப் பெரும் புகழார். (௩)

நீறூடிய திருமேனியு நிலவோடொளிர் கங்கை
யாறூடிய சடைமோலியு மழலாடிய கரமு

மேறுடிய கொடியும்முடை யிறையோனுட னிருந்தே
பேறுடிய தமிழாய்தரப் பெருமாதவம் புரிந்தார். (ச)

பொன்னோவெனப் பொலியுஞ்சடைப் புத்தேளுட னிருப்பு
மன்னோவவ னொடுவாதம றைந்தேதெளி மாண்பு
முன்னோதரும் பெருமாதவத் துடையாரென மொழியி
னென்னோவவர் பெருமைத்திறன் யானோசொல வல்லேன். (ரு)

வேறு.

புனைதரு மினைய சங்கப் புலவரே ழெழுவோ ருங்கண்
ணனைதரு கடம்பி னீழ லையனார் பதமு மேன்மேல்
வனைதரு கயற்க ணம்மை மலரடிக் துணையும் போற்றிக்
கனைதரு பொலிவி னோடுங் களித்தினி திருக்கு நாளில். (சு)

உமையொரு பாகங் கொண்ட வுத்தமப் பெருமான் மேவி
யமைதரு தான மெல்லா மணைந்தணைந் திறைஞ்சு மார்வங்
கமைமிகு மவர்க்குண் டாகக் கடம்படி முளைத்த வேணிச்
சுமையுடை முடியாற் போற்றித் தொழுதனர் விடைகொண் டாரால்.

அருப்பவிர் கடுக்கை யானை யங்கையோ ருடுக்கை யானை
மருப்பவிர் விடையி னானை வாளராத் தொடையி னானை
யுருப்பவெஞ் சூலத் தானை யொலிமறைச் சீலத் தானைத்
திருப்பரங் குன்றிற் சென்று கண்டுசே வித்தா ரன்றே. (அ)

கருதுவா ருளத்தி னானைக் காரணி களத்தி னானை
மருவுதாட் டளத்தி னானை வரிவிழிக் குளத்தி னானை
யொருவுறு வளத்தி னானை யொப்பில்கோ மளத்தி னானைத்
திருவிய லாப்ப னூரிற் சென்றுசே வித்துப் போற்றி. (கூ)

மதியணி சடையி னானை வையமுண் விடையி னானை
யதிர்புலி யுடையி னானை யணங்கொரு புடையி னானை
விதிதலைத் தொடையி னானை வெம்மழுப படையி னானைப்
பதிவளக் கொடுங்குன் றெய்திப் பண்பொடு பணிந்து போற்றி.

ஆடக வேணி யானை யற்புளங் காணி யானை
நாடகப் பாணி யானை ஞாலமுண் பூணி யானைக்

காடகத் தூணி யானைக் கருந்துழாய்த் தோணி யானை
யேடக நகரிற் சென்று போற்றிமிக் கின்ப முற்று. (கக)

பூதவெங் கணத்தி னானைப் பூங்கொன்றை மணத்தி னானைக்
கோதமில் குணத்தி னானைச் சோளாரப பணத்தி னானை
வேதமந் தணத்தி னானை வேதக்கோ வணத்தி னானைப்
போதப்பூ வணத்தி னானைப் பொங்கும்ப ரன்பிற் போற்றி. (கஉ)

அடியவர் பானூ டானை யன்பிலார் பாற்கூ டானை
யொடிவரு மருள்கோ டானை யொருதினைத் தினையும்வீ டானை
நெடியநன் மறைக்கா டானை நிகழ்பழைய லாற்பா டானை
படிபுகழ் திருமா டானைப் பதியனைத் தொழுது போற்றி. (கங)

அழிதகை யொருவி னானை யாரழ லுருவி னானைக்
கழிதரு கருவி னானைக் கரையறு திருவி னானை
யொழிதரு வெருவி னானை யொள்ளருட் டருவி னானைச்
சுழியமின் மருவி னானைத் தொழுதவர் துதித்துப் போற்றி. (கச)

வித்தக மூன்றூர் செற்ற வீரனை நெடிய மாயோன்
சித்தம்வைத் தவாவிச் சேருந் தேரனைச் செங்கே னுண்டு
தத்தளி முழங்குங் கொன்றைத் தாரனைத் தாவா மேன்மை
யுத்தர கோச மங்கை யூரனைத் தொழுது போற்றி. (கரு)

வலந்தரு பிறவித் துன்ப வாதனை யொழிக்க வேண்டிப்
புலந்தரு நெறியி னின்றூர் போதனை மணிபொன் செய்த
கலந்தரு சிறப்பிற் சங்கக் காதனைக் கருது வார்க்கு
நலந்தரு புகழி ராம நாதனை யிறைஞ்சிப் போற்றி. (கசு)

ஒருபுற நீலி யானை யொண்பிட்டுக் கூலி யானை
மருவருள் கோலி யானை மடர்க்கருள் பாலி யானை
யிருளறு வாலி யானை யிருஞ்சடா மோலி யானைக்
கருதுநெல் வேலி யானைக் கைகுவித் திறைஞ்சிப் போற்றி. (கஎ)

அருந்துண வாலத் தானை யக்கமார் பாலத் தானைப்
பொருந்துகைச் சூலத் தானைப் பொற்கள நீலத் தானைக்
கருந்துழாய்க் கோலத் தானைக் கைக்கொண்டெய் சிலைத் தானைத்
திருந்துகுற் றாலத் தானைச் சென்னிதாழ்ந் திறைஞ்சிப் போற்றி.

விருப்பவிர் கோயி லானை விண்டொடு வேயி லானை
யிருப்புறு ஞாயி லானை யெற்றைக்குந் தாயி லானைப்
பருப்பதம் பாயி லானைப் பகர்தரு நோயி லானைத்
திருப்புன வாயி லானைச் சேவடி பணிந்து போற்றி. (௧௯)

விண்ணவர் தமக்குக் கோவை விளக்கஞ்சால் பரமான் மாவை
யண்ணலம் புகழ்சா றேவை யன்பர்க்கோர் தெய்வ வாவை
வெண்ணரு மிதழ்ப் பூவை யெடுத்தணி தருமு வாவைக்
கண்ணகன் குருந்திற் கற்பக் காவையுற் றிறைஞ்சிப் போற்றி.

அற்றவர் நேச னானை யருளுரு வேச னானைப்
பொற்றநற மீச னானைப் புலியதட் பேச னானை
நற்றவ வாச னானை நடுத்தய லாச னானைக்
கொற்றவா வீச னானைக் கோயிலார் குழுமிப் போற்றி. (௨௧)

ஆரானை முடியின் மேனக் காரத்தானை யுரித்த வையைப்
பாரானை மதவே டையப் பாரத்தானைப் பற்றார் மாட்டுச்
சேரானை யரவம் பூணச் சேர்த்தானைச் சிறந்த காமப்
பேரானை யெமது பாசம் பேர்த்தானைப் பரவிப் போற்றி. (௨௨)

மோதளி யிளைத்துப் பாட முகிழ்த்தலர் கொன்றை யோடு
சீதளித் தடமும் வாசந் திவலையெண் டிசையும் வீச
வோதளி யடைந்து சார்ந்தோர்க் குறுமல மாயா கன்மக்
கோதளி விழுங்கும் புத்தூர் குறுகினர் புலவா யாரும். (௨௩)

அளவிலா வுவகை விம்ம வானந்தக் கண்ணீர் வார
வளவிலா வின்ப மோங்க வாரணம் புகழ்ந்து போற்ற
வளவிலா வளங்கண் மல்கி யவைதரு திருப்புத் தூர்வா
ழளவிலா னந்தக் கூத்த ரடிதொழு தமர்ந்தா ரங்கண். (௨௪)

பொருவிலா வறிவிற் சங்கப் புலவர்க டிருப்புத் தூரின்
மருவின ரிருப்ப தோர்ந்து கூடைமா நகர்வாழ் மன்னன்
றிருவிய லவரைக் காணத் திகழ்ந்தெழு வேட்கை முன்னே
யொருவிலா னின்று காண்டற் குற்றதோர் சூழ்ச்சி யோர்ந்து.

### வேறு.

ஏன்றவொரா சிடையிட்டாங் கிருவிகற்பத் தான்முடிநே ரிசை
வெண் பாவொன், றான்றபுறப் பொருளமையப் *பிறந்தபிறப் பாலெ
ணமுன் னமையக் கொண்டு, சான்றதிருப் புத்தூரா னடனமுந்தன்
பேறுமுறத் தருகா சென்று, தோன்றவியல் வாய்பாட்டிற் கண்டெ
ன்று முடித்தேட்டிற் றுலங்கத் தீட்டி. (௨௬)

எதிர்நின்றா னொருவன்கைக் கொடுத்திதனைக் கொடுபோய்நம்
மிறைவாழ் புத்தூ, ரதிர்கின்ற புகழ்ப்புலவர் பாற்கொடுத்து மற்ற
வர்தேர்ந் தறைதல் கேட்டு, முதிர்கின்ற கடுப்பினொடும் வருகென்
றான் புத்தியென மொழிந்தன் னான்விண், ணெதிர்கின்ற திருப்புத்
தூர் சார்ந்தனைய ரிருக்குமிடத் தெய்தி னானே. (௨௭)

புலவர்முனம் பணிந்தெழுந்து வதரிநிழ லொருமுக்கட் புத்
தேண் மேய, நலவர்புகழ் சூளைநகர் மாவிசயா லயதேவ னலத்தான்
மிக்கான், கலவரணு காநெறியா னுமைக்காணக் கவியொன்றென்
கையி னல்கி, நிலவர்புக ழித்தலத்து விடுத்தானென் றுரைத்ததையு
நேர்வைத் தானே. (௨௮)

உறந்தபுகழ்ப் பெரும்புலவர் மகிழ்ந்ததுகைக் கொடுவாசித்
துணர்விற் றெள்ளிப், பிறந்தபிறப் பெனும்பாட்டிற் சொற்சுவை
யும் பொருட்சுவையும் பிறங்கு மேனுஞ், சிறந்தமதி யென்றுரைத்த
தொருதோட மென்றவர்தாஞ் செப்பக் கேட்டு, மறந்தவனு காமன்
மனங் கொடுதொழுது சூளைநகர் வந்தா னன்றே. (௨௯)

வந்தவன்மெய்ப் புகழ்விசயா லயதேவ னெதிர்போற்றி வண
ங்கி யென்கைத், தந்தகவி தனைக்கொடுபோய்ச் சங்கவான் புலவர்மு
னந் தாழ்ந்து வைத்து, முந்தநீ கொடுத்ததெனை மொழிந்தனன்மற்
றவரெடுத்தார் முகமன் செய்தார், சந்தமழி யாதுவா சித்தாரக் கவி
ப்பொருளுந் தவாம லோர்ந்தார். (௩௦)

“பிறந்த பிறப்பாற் பெறும்பேறு பெற்றே
மறந்து மினிப்பிறக்க வாரோஞ்—சிறந்தமதி
சேர்த்தானைப் புத்தூர்த் திருத்தளியா னைப்புவனங்
காத்தானைக் கூத்தாடக் கண்டு.”

‘நிறைந்தமதி’ என்றும் பாடம்.

மிக்கமகிழ்ச் சியரானார் சொற்சுவையும் பொருட்சுவையும் விய ந்தா ரேனுந், தொக்கவதிற் சிறந்தமதி யெனப்புனைந்து வைத்த தொரு தோட மென்றா, ரக்கணமே யான்மீண்டு வந்தனனென் றான் கேட்ட வருள்சான் மன்ன, னக்களவின் மகிழ்ச்சியனைய் மீட்டுமவன் முகநோக்கி நவில லுற்றான். (நக)

இன்னேநீ திருப்புத்தூர்க் கேகுதிமுன் பேரலவவ ரெழுந்து மாலை, நன்னேயத் திறையவன்வாழ் தளிக்கேகு வார்கூட நண்ணி நீயு, மின்னேர்செஞ் சடையார்மு னவர்முனஞ்செல் பெருந்தீபம் வேலை யாளன், றன்னேயத் தொடுவைப்ப னுடனெடுத்துச் சுழற்றிநீ தரையில் வைத்தி. (நஉ)

ஆயபொழு தவருரைக்கு மாற்றமுங்கேட் டிங்குவிரைந் தடை வா யென்றான், மேயவவ னவ்வாறே செய்துமீ ளுவலென்று விடை பெற் றேகிப், பாயமதிற் றிருப்புத்தூர் புகுந்துசங்கப் புலவரொடும் பரிந்து பின்னே, நாயனமர் கோயில்புகுந் தான்றிருமுன் னவன்றீப நலக்க வைத்தான். (நந)

வைத்தவுட னதையெடுத்துக் கொள்ளிவட்ட மெனச்சுழற்றி வைத்தான் மண்மே, லுய்த்துணரும் பெரும்புலவர் குறைமதிய நிறைமதியா யொளிர்ந்த தம்மான், மெய்த்தநடச் சுழற்சியிலென் றறிவித்தா னமக்கென்று விளங்கத தேர்ந்தார், சித்தமகிழ்ந் தாரவ ன்றன் முகநோக்கி விரும்பியிது செப்ப லுற்றார். (நச)

கற்றவர்கள் புகழ்விசயா லயதேவன் பாடிவிடு கவியுள் யாதுங், குற்றமிலை குற்றமிலை குற்றமிலை கருத்துணராக் கூற்று குற்றப், பெற்றினை யற்கினை யற்கினை யற்கவெனப் பேசு நீபோய், மற் றவனைக் காணும்விருப் புடையநா மென்பதுவும் வகுத்தி யென் றார். (நரு)

## வேறு.

என்றலும் விரைந்து சென்றா னிலங்கெழிற் சூளை புக்கான்
மன்றலந் தாரான் முன்னர் மற்றவ ருரைத்த வாறே
யொன்றவிண் ணப்பஞ் செய்தா னுவகையங் கடலு ளாழ்ந்தா
னின்றவர் தம்மைக் காண்பே னென்றெழுந் தினிது செல்வான.

பரிகரி யிரதங் காலாள் பரந்தன தொடர்ந்து செல்ல
விரிகுடை நிழற்றிச் செல்ல விளங்குசா மரைக டுள்ள
வரிகருங் கழற்கான் மன்னன் வாம்பரி யுகைத்துச் சென்று
தெரிவரும் பெருமான் மேய திருக்கோயி லூருட் புக்கான். (௩௭)

இனையவ னின்ன னாக விணர்ப்பொழிற் புத்தூ ரம்மான்
றனைவிடை கொண்டெ ழுந்து தணப்பருங் கான நீங்கிப்
புனைமலர்ப் பொய்கை சூழுக் கோயிலூ ரகத்துப் புக்கா
கனைகுரன் மேக மென்னக் கவிமழை பொழிவார் யாரும். (௩௮)

சங்கவான் புலவ ரெல்லாம் வந்தமை சாற்றக் கேட்டுத்
துங்கமாம் புணரி மேவத் துனைந்துசெல் குழுவை யேபோ
லங்கவ ரிருக்கை நேடி யடைந்தனன் றெழுந்து நின்றான்
மங்கலம் பொலியுஞ் சூரை வளநகர் புரக்கு மன்னன். (௩௯)

சிலரிவன் சூரை யாளுஞ் செல்வனென் றவருக் கோத
வலர்புக ழனையா ரங்கை குவித்தெழுந் தவாவிய புல்லி
நலர்தொழு நின்னைக் காண்பா னாங்கள்வந் தனங்கா ணென்று
றுலர்தலி னும்மைக் காண்பா னுற்றனன் யானு மென்றான். (௪௦)

இருதிறத் தாரு மிவ்வா றளவளா யெழுந்து போந்து
மருமலர் பூத்த தெய்வ வாமதுப் பொய்கை மூழ்கி
திருமல வடிவி னன்ற நெல்லைநா யகிபொற் றாளுங்
குருமலி பிறைசான் மோலிக் கொற்றவா ளீசர் தாளும். (௪௧)

அன்புறப் பணிந்து போற்றி யாரரு ணிரம்பப் பெற்றுப்
பின்பிரு திறத்தி னாரும் பெரிதள வளாவிப் பேசி
யென்புலப் பரிய பூசைக் கொண்டவ ரினிது மேவு
நன்புலச் சூரை புக்கார் நகுமுகத் தினராய் மாதோ. (௪௨)

முழுகினர் பாவ மெல்லா முருக்கிவாய்ப் பெய்வ தாய
வொழுகொளிக் கதிரோன் றீர்த்த முரைத்தநூல் விதியான் மூழ்கி
வழுவறு தெய்வ நீறும் வயங்குகண் மணியும் பூண்டு
செழுவிய வெழுத்தோ ரைந்துஞ் சிந்தையிற் றிருந்த வெண்ணி. ()

இடையறு வன்பு பொங்க விருகையுந் தலைமேற் கூப்பி
நடையறு வறவோர் சூழ நல்லகாய் கனிபூ வோடு

படையறு வதரி நீழ லமர்ந்தபார்ப் பதிம ணாளன்
கொடையறுக் கோயில் சார்ந்து கோபுர முன்பு தாழ்ந்தார். (௪௪)

விழிகணீ ரருவி பாய மென்கரந் தலைமேற் கூம்ப
வொழிதரா வன்பு பொங்க வுட்புகுந் தவப்பிற் சூழ்ந்து
பழிபடு மலங்கண் மூன்றும் பாழ்பட வின்பம் பொங்க
வழிமது நறும்பூங் கொன்றை மாலையான் றிருமுன் சென்றார். ()

கண்டனர் மாய னாதிக் கடவுளர் காணாத் தேவை
விண்டனர் கவலை யெல்லா மேனிமேற் புளகப் போர்வை
கொண்டனர் நெஞ்ச நெக்குக் குழைந்தனர் கண்ணீர் வார
வண்டர்தம் பிரானார் காட்சி யருகிய தென்று நின்றார். (௪௬)

முழுதுண ராதி சைவ முனிவர னொருவன் போந்து
பழுதறு வில்வங் கொண்டு பற்பல பெயருங் கூறித்
தொழுதகு தாளிற் சாத்தித் தூங்கவே தனமுஞ் செய்து
கெழுதகு பளிதத் தீபங் கிளர்தரச் சுழற்றிப் பின்னர். (௪௭)

இலகுவெண் ணீறு நல்க வெண்ணரும் விருப்பி னேற்றுத்
திலகநன் னுதலிற் பூசித் திருத்தகத் தொழுது பின்ன
ரலகில்பே ரருளான் மிக்க வம்மைசந் நிதியும் போந்து
குலவுபொற் றுவந்து நீறு கொண்டுபே ரின்ப முற்றார். (௪௮)

நண்ணிய புலவா யார்க்கு நலமலி வசதி நல்கிக்
கண்ணிய வமுதுங் குய்சால் கறிகளுஞ் சிற்று ணாவு
மெண்ணிய நெய்யும் பாலு மின்னுமுள் ளனவுங் கொண்டு
புண்ணிய மன்னர் மன்னன் பொலிதர வூட்டி னானே. (௪௯)

கப்புரங் கலந்த சாந்தக் கமழ்நறுஞ் சேறு பூசி
வெ[illegible]முற் றொழியச் செய்த விரைநறு நீரிற் றோய்த்த
வொப்பில்பூ மாலை சூட்டி யொருங்குபல் வாசங் கூட்டுந்
திப்பிய விலைகாய் நல்கிச் செய்தனன் மகிழ்ச்சி மேன்மேல் (௫௦)

மெல்லிழைக் கலிங்கம் பொன்செய் மென்றுகி றலைச்சாத் தாதி
நல்லிழைத் துகில்கண் மற்று நகுகதிர் மதாணி யாழி
யெல்லிழைத் தெடுத்த தாய குழைமுத லெல்லாப் பூணுங்
கல்லிழைத் தமைத்த மற்றுங் கவின்பெற நல்கி னானே.

காவலன் முகமன் கண்டு கயற்கொடி யுயர்த்த செங்கை
மாவல னுய செங்கோல் வழுதியை மறந்தார் கொன்றைப்
பூவலர் வேணிப் பெம்மான் றரிசனப் பொலிவு கண்டு
நாவல ராலவாயி னம்பனை மறந்தா ரன்றே. (௫௨)

காலத்திற் சிவபி ரானைக் கண்டிறைஞ் சுதலுங் கொண்ட
சீலத்திற் றத்தம பூசை செய்தலும் புனித மாய
கோலத்தி னமைந்த நலனூண் கோடலுங் கலைகள் யாவு
மூலத்தி னுரையின் மன்னோ டாய்தலு முயன்றி ருந்தார். (௫௩)

பன்னாளிவ் வாறு செல்லப் பாவல ருறுநா ளோர்நாட்
பொன்னனை மணிமா டஞ்சூழ் பொங்கெழி லால வாயின்
மின்னார்செஞ் சடில மோலி விமலனார் தமைநி னைந்தா
ரெந்நாள்சென் றிறைஞ்சு வோநம் மிறைவனை யென்று நைவார்.

அங்கயற் கண்ணி யோடு மாலவா யமர்ந்த மூர்த்தி
பங்கயப் பாத மென்று பணிவது கனகக் கஞ்சக்
கொங்கலர் வாவி யென்று குடைவது பனுவ லிங்கே
தங்கின மென்று நெஞ்சந் தளர்ந்துநெக் குருகு வாரால். (௫௫)

வேறு.

வெருவால மெழுதலொடு மெய்ந்நடுங்கி யயனெடுமான்
மருவால நிழலமர்ந்தாய் மாற்றென்ன விதுநமக்குச்
சருவாலென் றெடுத்தயின்ற தாவாத பெருங்கருணைத்
திருவால வாயுடையான் சேவடிகண் மறந்தனமால். (௫௬)

வெருக்கூடும் படியெழுந்து விரிந்தபுவ னம்புவன
வுருக்கூடு குலைப்பதுதோந் தும்பரெலா மோலமிட
மருக்கூடு செஞ்சடைமேல் வாங்கியமைத் துலகளித்த
திருக்கூட லுடையபிரான் சேவடிகண் மறந்தனமால். (௫௭)

பொருமியமு மொருபாலன் பொருட்டாக வருள்கூர்ந்தே
யுருமதிர வதிர்த்துமுழங் கொருகடாப் பகடுகைத்து
வருமறலி யுயிர்மாள மலரடிசற் றேயெடுத்த
திருமதுரா புரிப்பெருமான் சேவடிகண் மறந்தனமால். (௫௮)

ஒழுங்குபட வண்டிகிரீஇ யுறுசுவைய கழைகோட்டி
யெழுங்குரிசின் மலர்க்கணைதொட் டெய்யுமுன மொழிவிரதி
யழுங்கும்வகை யவனவிய வழல்விழிசற் றேதிறந்த
செழுங்கடம்பி னடிப்பெருமான் சேவடிகண் மறந்தனமால். (௫கூ)

பொருத்தமுற மூழ்குநர்தம் பொல்லாங்கு முழுதொழித்துக்
கருததலர்த்தி மலமாயை கன்மமிரி தரபாக்கி
யருத்திமிகு பேரின்ப மருளொருபொற் றாமரைநீர்த்
திருத்தலத்து முளைத்தபிரான் சேவடிகண் மறந்தனமால். (கூ0)

இந்திரனோர் பரிகழுவி வெள்ளானை யிப்புவிநீத்
தந்தரநா டிறவருளி யணிநகரந் தகக்கண்டி
சுந்தரப்பொற் றடாதகையார் தோற்றவருள் புரிந்தமருஞ்
செந்தளிர்மே னிப்பெருமான் சேவடிகண் மறந்தனமால் (கூக)

தாவாத பேரழகிற் றடாதகையை மணந்தமர
ராவாவென் றேத்தவெள்ளி யம்பலத்திற் கூத்தாடி
போவாத பெருமைசா லொருகுறளுக் கன்னமிட்ட
தேவாதி தேவனிரு சேவடிகண் மறந்தனமால். (கூ௨)

கூவொலிசெய் குறட்கன்னக் குழியொடுவை யையுமழைத்துப
பாவொலிசெ யெழுகடலும் பாண்டியனும் வரக்கூவி
யேவொலிசெய் தனுவாங்கு முக்கிரனை யருள்புரிந்த
சேவொலிசெய் கொடிப்பெருமான் சேவடிகண் மறந்தனமால்.

மைந்தனுக்கு வேல்வளைசெண் டுதவிவா ரிதிசுவற
விந்திரன்பொன் முடிதகர வளைகுலைய வெய்துவித்துச்
சந்தமறைப் பொருளுரைத்து மணிபகர்ந்து தழைந்தடியார்
சிந்தையிடத் தமர்பெருமான் சேவடிகண் மறந்தனமால். (கூச)

வருணன்விடு கடல்சுவற்றி வளநகர்மேன் முகிலேவிப்
பொருவருசித் தாய்க்கரும்பு கல்லானை வாய்ப்புகட்டி
வெருவருவே ழந்தடிந்து விருத்தனு தியராய
திருவளர்பே ரருட்பெருமான் சேவடிகண் மறந்தனமால். (கூ௫)

மாறிநடம் புரிந்துபழி யஞ்சிமா பாதகந்தீர்த்
தேறியம ரங்கமரிந் தெயிற்றுவிட நாகமொடு

சீறியமா யப்பசுவைத் தீர்த்துமெய்க்காட் டிட்டமருந்
சேறிகழ்கட் பணைபாகன் சேவடிகண் மறந்தனமால (௬௬)

கிழியருளி வளைவிற்றெண் சித்திகளுங் கிராவித்துப்
பழியில்விடைக் குறிபொறித்துத் தண்ணீர்ப்பந் தருமமைத்து
மொழியிரத வாதஞ்செய் தாரருளை முகிழ்ப்பவமா
செழியர்குலக் கொழுந்தினிரு சேவடிகண் மறந்தனமால. (௬௭)

ஒருவளவன் றனைமடுவிற் புகுத்தியுல வாக்கோட்டை
யருளியருண் மாதுலனாய்ச் சிவலோக மதுநெரிந்துப்
பெருவிறகு சுமந்துதிரு முகங்கொடுத்துப் பெருமபலகை
திருவுறவிட் டருள்பெருமான் சேவடிகண் மறந்தனமால. (௬௮)

இசைவாது வென்றுகுழ வெறுழிகட்கு முலைகொடுத்தாங்
கசையாமந் திரராகக்கி கரிக்குருவி யயாநாரா
வசைதீர வருளியரா வளைந்துணாத்த வருளாபுரிந்த
திசையாடை யுடையபிரான் சேவடிகண் மறந்தனமால. (௬௯)

தன்னுடையபே ரமபெய்து தந்துநமக குபாலைக்க
மின்னுடையபொற கிழி யளித்து வெ நளைபிற கலைமய றி
கொன்னுடைய வி கதகண முங கொடு திபுடு கலை கர
தென்னுடைய தென்னவன பொ [illegible] மறந்தனமால. (௭௰)

முகம்புலர்ந்த விடைக்காடன் முறையவைகே கொ வருளிச்
சகம்பயந்த தாயான கடம்பகண்ணு டன்பிரிந்து
மிகப்புகழ்ந்து கொண்டாடி மிந்திரபா னந்தமருந்
திகழ்ந்தவருட் பெருமான்பொற் சேவடிகண் மறந்தனமால. (௭௧)

என்றுகனிந் துள்ளுருகி யிவ்வாறு புலவரெலா
நன்றுமது வாயமடைவோ நாளைநா மெனற்றிருந்தார்
வென்றுமினி மன்னவனு மிவர்போலும் விருப்புற்று
னன்றுகன விடைச்சூலை யயலெழுந் தருள்செய்வார். (௭௨)

ஆலவா யிடைக்காணு மழகியநந் திருக்கோலஞ்
சாலநீ ரிவ்விடத்தே தரிசிப்பா னருள்செய்வோங்
கோலமார் தருகடம்புங் குளிர்பொற்று மரைத்தடமுஞ்
சீலமார் செய்கையுளீர் சிறந்தசான் றதற்குணர்வீர். (௭௩)

அங்கமா தகை சதினுமிழ் [illegible] விருபாழுமோரா
மெந்தமா [illegible] மாவாவா வெனசமெதளிமின
கந்தமே [illegible] தெரலகவி [illegible] முதணமகருக
க[illegible]தமாா குழ[illegible] [illegible]. (எச)

திருவிழ [illegible]
[illegible]
[illegible] நபுரி [illegible]
[illegible] (எரு)

[illegible] சநவலே
[illegible] வரிறப்பசிக
[illegible] ணமகூறிச
செழித[illegible] விடிவுணராா.

விடியலு[illegible] படையாளி
கடிமதிப[illegible]
வடிமதுவாய [illegible]
முடிவிலொரு பெரு[illegible] னாராம (எஎ)

தென்னவன [illegible]
யின்னலற வால[illegible]
பன்னிய புசழ[illegible]
தென்னவதி சப[illegible] (எஅ)

ஆனந்த [illegible]
யானந் வெள்ளமூ[illegible]
யானந்த யயமான வைந்தெழு[illegible] ணணி
யானந்தா தளிபுகுவாா மதமெ[illegible] (எகூ)

நெடியகோ புரமுனபு நிலநிறம்சாய தாழ்பணிந்து
கடியமதில புடையுடுத்த கனகதளி யுடபுகுந்து
பொடியணிமிப னியாபிரத்த னணாபுரியும பொழுதொருபால
வடியலாதுன் றியகடமபு வயஙகுபுகிற பதுகணடாா. (அ0)

கண்டவுடன றெழுதெழுந்தாா வயருவும பூந்தருவைத
தண்டருமன புறககட்டித நழுவினா நெட்டுயிா்த்தாா

மண்டனில்வீழ் மலரெல்லாம் வாரிவிழி யொடுசேர்த்தா
ரண்டர்பிரான் றிருவருண்மற் றளப்பரிய தாலென்றார். (அக)

சொல்லரிய வன்பகத்தே துளும்பவிறை யவன்றிருமுன்
வெல்லரிய மகிழ்ச்சியொடு மேவினர் பணிந்தெழுந்தார்
கல்லரிய மலக்கிழங்கு கழிந்ததுபோ யொழிந்தென்றார்
புல்லரிய துதியெடுத்துப் புகழ்ந்துபா டுவரானார். (அ௨)

மாலாத மனத்தொளியாய் வயங்குமொரு பேரொளியே
யேலாத கொடுதிரிவார்க் கெஞ்ஞான்று மொளிப்பவனே
சூலாத மலக்கிழங்கு சூன்றெடுக்கும் பெருவலியோய்
தோலாத பெருங்கருணைச் சுந்தரரே சுரசரணம். (அ௩)

மலமாயை கன்மமெனு மாசூழ டியவடியோ
நலமாய பேருணர்விற் றலைப்பட்டு நயமுணர்வா
னிலமாய தேரேறி நெடும்புரமூன் றெரித்திடும
துலமாய பேரருள்செய் சுந்தரரே சுரசரணம். (அ௪)

ஒல்லாத பிறவியடைந் திருவினைக்கே யுடம்பட்டுக்
கல்லாத கொடியேமாய்க் கசட்டறிவின் மூழ்காமல்
வெல்லாத மெய்ஞ்ஞான வெளிமருவ வளவிட்டுச்
சொல்லாத பேரருள்செய் சுந்தரரே சுரசரணம். (அ௫)

காற்றியொரு மலமூன்றுங் கழலடைதற் கொல்லாத
வாற்றியிறப் பொடுபிறப்பு மடைவேங்கள் கரிசனைத்து
நீற்றியருளுதறபொருட்டு நீர்ததடமுஞ் சீர்க்கடம்புந்
தோற்றியருளியபெருமைச் சுந்தரரே சுரசரணம். (அ௬)

ஒன்றாகிப் பலவாகி யுருவாகி யருவாகி
யன்றாகி யின்றாகி யருளாகி மருளாகி
நன்றாகித் தீதாகி நான்மறைச்சென் னியுமளவாத்
தொன்றாகிப் புதிதாய சுந்தரரே சுரசரணம். (அ௭)

என்றுபல வாறுதுதித் தெம்பிரான் பெருங்கருணை
யொன்றுமளப் பரிதாலென் றொழியாத வின்புற்று
நன்றுமது ராபுரியி னுங்காணுங் கோலமே
யின்றிவர்தந் திருக்கோல மென்றுதொழு தெழுந்துபோய். (அஅ)

பல்லுயிரு மினிதீன்ற பார்ப்பதியா லயமடைந்தார்
செல்லுலவு பொழின்மதுரைத் திருக்கோயில் வீற்றிருக்கு
மெல்லுலவாப் பெருங்காட்சி யியைந்தவளும் வீற்றிருந்தா
ளல்லுலவாக் கண்டத்தா ரடைந்தவடி வினுக்கேற்ப. (௮௯)

புயல்புரையொண் கருங்குழலும் பூரணசந் திரமுகமு
முயல்புரையா ருயிருமுற வொளிரிருசீ றடியுமயி
லியல்புரைசா யலும்வனப்பு மிலவுபுரை கனிவாயுங்
கயல்புரைகண் களும்பிறவுங் கண்களிப்பக் கண்டார்கள். (௯0)

மயற்கண்ணாள் வழிபாடு மறாதுபுரி யன்பினர்பா
லயற்கண்ணா ளலனாகி யளப்பரிய பேரின்பச்
செயற்கண்ணா டொறும்பருகத் தீராது பெருகுவிக்குங்
கயற்கண்ணா டிருவுருவுங் கண்டுதொழு தின்புற்றார். (௯௧)

பொன்னியற்றா மரைத்தடமும் பூப்பொலியு மொருகடம்பு
மின்னியல்செஞ் சடையார்தம் விளங்கருளாற் றோன்றினமை
மன்னியல்பி னெத்தலத்து வாழ்வாருந் தெரிந்துவகை
துன்னியல்பிற் சூறையுற்றுத் தரிசித்துத் தொழன்முயன்றார். (௯௨)

மாமதுரா புரியகத்து வாழ்வாரு மிதுகேட்டுக்
காமருநன் சூறைநகர் கலந்திரண்டுங் கண்ணுற்றுத்
தாமநறுஞ் சடையிருவர் தமைப்போற்றி யிருதிறத்து
நாமகள்சால் வாழ்க்கையர்க டமையுநயந் தேத்துவார். (௯௩)

மண்ணவர்க ளிவ்வாறு மாறாது களிப்படைய
விண்ணவர்கள் கற்பகத்தின் மேவுபூ மழைபொழிந்து
கண்ணவர்க ளாயினார் கரிசமைமுக் குறும்பெறிந்தே
பண்ணவர்கண் மிகவந்து பரவுவார் பண்பமைய. (௯௪)

துன்றுபெருங் கருணையுடைச் சுந்தரே சுரரென்றுங்
கன்றுதலி லாதருளங் கயற்கண்மட மாதென்று
மன்றுமுத லிருவருக்கு மாகியவித் திருநாம
மென்றுமிவை யுரைப்பவர்க ளெண்ணியவெ லாமடைவார். (௯௫)

மன்னியபொற் றாமரைநீர் வகுத்தவிதிப் படியாடித்
துன்னியவண் பெருங்கருணைச் சுந்தரநா தன்பதமு

மின்னியவங் கயற்கண்ணுமை மென்பதமுந் தரிசிப்போர்
பன்னியவிப் புவியாண்டு பண்ணவராய் வீடுறுவார். (௯௬)

எண்ணரிய பெருமகிழ்ச்சி யெய்தியமற் றிருவோருங்
கண்ணரிய சுந்தரனைக் கயற்கண்ணுமை யைப்போற்றிப
பண்ணரிய தொழில்வாய்ந்து பரவியதம் மிடம்புகுந்தா
நண்ணரிய கிழமையுறு நட்பின்மிகக் கலந்தம்மா. (௯எ)

நன்றுபொலி தருமொருநா ளுவலர்கண் மிகமகிழ்வுற்
றன்றிவனே யாயினக்கா லம்பதுபோ சங்கத்தா
ரென்றுசொலும் படியாமே யென்றுபுனைந் திருஞ்சுனை
யொன்றுவிச யாலயனைப பாடினாரொரு வெண்பா. (௯அ)

பாடியவெண் பாக்கேட்ட பார்த்திபனு மிகமகிழ்ந்து
கூடியவன் புரவெழுந்து குமபிட்டுக் கூத்தாடி
நாடியவான் பெருமபுலவீர் நான்றரம்மா விதற்கென்று
நீடியபல் லுபசார நிரப்பினா னவாமகிழ்ந்து. (௯௯)

ஆவணிமூ லத்திருநா ளாகியசித் திரைத்திருநா
ளாவணிதைப் பூசமென நவிலாடிப் பூரமெனப
பாவணிநற் பெருந்திருநாள் பரவுறுமற் றைத்திருநாண்
மாவணியிற் சிறப்பித்துச் சுந்தரற்கு வயக்கினான். (௫00)

இனையசிறப் பிற்பலநா ளிவ்வாறு பணிசெய்து
நனையநறு மலர்ப்பைந்தார் நயந்தவிச யாலயனு
நினையவரும் புலவர்களு நிறைகருணைச் சுந்தரர்தம்
புனையவரு மலரடிக்கீழ்ப் புக்களவா வின்புற்றார். (௫0௧)

சங்கப்புலவர் பூசித்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௪அ௪.

# திருமால்பூசித்த படலம்.

எங்கு மாகி யிலங்குஞ் சிவபிரான்
பொங்கு பேரரு ளாறபுர வுற்றவன
சங்கு சக்கரந் தாங்குந் தடக்கையான்
கொங்கு தங்கு துழாயணி கொண்டலே. (௧)

வெய்ய தானவர் வீறு குலைக்கவுஞ்
செய்ய வானவர் செய்கை நிரப்பவு
மைய நெஞ்சுட் குறித்தருள் வாங்குவான்
மைய கன்ற வளத்தலந் தேருவான். (௨)

வீளை வாய்த்துயின் மேவி நறுந்துழாய்த்
தாளை யாதரிக் குந்தடந் தோளினன்
காளை மேற்கொண் டிலங்குங் கரும்பொழிற்
சூளை மாநகர் துன்னின னென்பவே. (௩)

எண்ணு மாறெழில் சார்திருக் கோயிலு
நண்ணு பொற்றா மரைநறுந் தீர்த்தமுங்
கண்ணு தெய்வக் கடம்பும் வதரியு
மண்ணு மேன்மை யனைத்துந் தெரிந்தனன். (௪)

மேலு மேலும் விருப்பம் வளர்ந்தெழச்
சாலும் பொற்றா மரைத்தடந் தோய்ந்தனன்
கோலும் வெள்ளிய நீறுங் குரூஉச்சுட
ராலுங் கண்மணி யும்மணிந் தானரோ (௫)

நந்து வன்னமோ ரைந்து நவிற்றினன்
வந்து கோபுர வாயிலிற் றாழ்ந்தனன்
சிந்து தீவினை யேனெனச் சிந்தைசெய்
துந்து கோயிலி னுட்புகுந் தானரோ. (௬)

முந்தி மூன்று வலஞ்செய்து மொய்கழ
னந்தி பாற்சென்ற னன்விடை பெற்றன

னந்தி வண்ணத் தமலன்முன் சென்றனை
னுந்தி பூத்தவ னென்னு மொருவனே. (௭)

மன்னு பொற்று மனைப்புன லாட்டினான்
மின்னு சாந்தம் விரவமெய் கூட்டினான்
றுன்னு பன்மலர் வில்வமுஞ் சூட்டினான்
முன்னு வாச முழுப்புகை கோட்டினான். (௮)

உற்ற மேன்மை யமுதமு மூட்டினான்
முற்ற மற்றை முகமனுஞ் செய்தபின்
செற்ற மோவு திருமுன் குடந்தமுற்
றற்ற நீங்க வறைவன் றுதியரோ. (௯)

கால காலமுக் காலமுந் தீர்ந்தவ
சூல மேந்திச் சுடர்திருப் பாணிய
வால மாந்து மருட்பெருஞ் சேவக
பால லோசன நின்னடி பற்றினேன். (௧௦)

முழுது மோர்ந்த பவமுழு தாயவ
கழுது சால்பெருங் காட்டி னடிபபவ
பழுது தீரப் பரந்தநின் சேவடி
தொழுது வேண்டித் துதிப்ப னடியனேன். (௧௧)

முத்த னேமுதல் வாமுழு மாதவா
சித்த னேசிவ னேசெஞ் சடையணி
மத்த னேவத ரித்தரு நீழல்வா
ழுத்த னேயடி யேனுன் னடைக்கலம். (௧௨)

கண்ண லேது மிலேனுன் கழலன்றிப
பண்ண லேது மிலேனுன் பணியன்றி
நண்ண லேது மிலேனுன் னலனன்றி
யண்ண லேயடி யேனுன் னடைக்கலம். (௧௩)

போற்றி லேனின் பொலங்கழ னின்பணி
யேற்றி லேனின் னெழுத்தைந் தினையுமுட்
சாற்றி லேனத னாற்கொடுந் தானவர்க்
காற்றி லேனடி யேனுன் னடைக்கலம். (௧௪)

என்று தோத்திரஞ் செய்திறைஞ் சிபபெயர்ந்
தொன்று சேறக ணுமையவண் முன்செலீஇ
நன்று போற்றி நகுமலர் தூய்பபணிந்
தன்று மாயவன் பின்னரிஃ தாற்றினான். (கரு)

நாய கன்றளித் தென்றிசை நண்ணமைய
சேய மேனிச சிவலிங்க மொன்றினைப்
பாய வன்பிற் பதிட்டை புரிந்தன
னேய நீர்த்தகப் போன் றுவப்பிற றொட்டனன். (கசு)

விண்டு போக வினைதன் பெயரினால்
விண்டு வீசன் மிகப்பொலி வெய்திடும்
விண்டு தீர்த்த மெனப்பெயர் விண்டனை
விண்டு பூசனை யாற்றுதன் மேயினை. (கஎ)

அன்ன தீர்த்த முகந்தினி தாட்டிப்பு
பன்ன மோடு பலமல ருங்கொடு
முன்ன வன்றிருப் பூசை முடித்தனன்
சொன்ன வாறடை யுந்திய தூயனே. (கஅ)

இந்த வாறுபன் னாள்க ளினிதிருந்
தந்த மிலலா வருந்தவ மாற்றுழிக்
கந்த வோதிக் கயற்க ணுமையொடு
முந்த வந்தனன் முக்கண் முதல்வனே. (ககூ)

ஐயன் காட்சி கொடுத்த தறிந்துகா
மெய்யன் போற்றி விரும்பி யெதிர்நின்றான்
செய்ய நின்றவச் செய்கை யுவந்தன
மைய னிங்கு வரமபல கொளளென்றான். (உ0)

வெய்ய தானவர் வெவ்வினை வீட்டவுஞ்
செய்ய வானவர் செய்வினை நாட்டவு
மைய னேயடி யேற்கு வரமருண்
மெய்ய வின்னுமொர் விண்ணப்ப முண்டரோ. (உக)

இந்த மாதலத் தெய்தி யடியனேன்
சந்த மாரப் பதிட்டைசெய் சயம்புவை

நந்த வாவு நறும்புனற் பொய்கையை
முந்த வாதரிப் பாரெண்ண முற்றுக. (௨௨)

அன்ன தாய சிவலிங்கத் தையநீ
பின்ன மின்றிப் பிறங்கி யமருக
வின்ன மாதலத் தேயடி நாயினேன்
மன்ன வேண்டும் வழங்குதி யாலென்றான். (௨௩)

என்று வேண்ட லுமீதது நமக்குநீ
யொன்று மேற்றிசை வைகுதி யுன்பெயர்
நன்று கண்ணிறைந் தானென்பர் ஞாலத்தார்
கன்று கொண்டு கனியுருத் தாயினும். (௨௪)

உன்னை யேத்துந ருன்பத மெய்துக
பின்னை கேள்வ பிறங்கநீ பூசித்த
வென்னை யேத்துந ரென்னை யுறுகவென்
றன்னை யோடு மறைந்தன னையனே. (௨௫)

சென்று தானவர் சேட்டை யடக்கினா
னன்று வானவர்க் கேநலஞ் செய்தன
னென்று மேற்றிசை யுற்றமர்ந் தான்குணில்
கன்று கொண்டவக் கண்ணிறைந் தானரோ. (௨௬)

வாசு தேவன் வழுத்திய காதையை
யாசு தீர வறைந்தன மாற்புவி
பேசு மத்தல மேன்மையும் பேசுவோம்
பூசு நீற்றிரன் முன்புகல் வானரோ. (௨௭)

திருமால்பூசித்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௫௧௧.

# தலவிசேடப்படலம்.

துன்னிய சடில மோலிச் சுந்தரே சுரர்க்கு நாளு
மின்னிய கயிலை மேரு விண்டவழ் பொழிற்கோ கன்னம்
பன்னிய காஞ்சி காசி பருப்பதஞ் சேது வுள்ளு
மன்னிய வுவப்புச் செய்யு மலிவளம் பொலியுங் கூறை. (௧)

அன்னமா நலத்து நாளும் வசிப்பவ ராயு ணீடிப்
பன்னருஞ் செல்வ மேவிப் பண்புடை மனைவி மக்க
ளென்னரும் பொலிய வாழ்ந்து மறுமையி லிமையோ ராகி
நன்னலந் துய்த்து நம்மான் மலர்ப்பத நண்ணி வாழ்வார். (௨)

மேதகு விரதம் வேண்டா விரிந்தகா னாதி புக்கு
மாதவ மியற்றல் வேண்டா வாரிசூழ் புடவி யேத்தக்
காதர மொழித்து நாளுங் கலந்தவர்க் கின்ப நல்கு
மாதரம் பயக்குங் கூறைத் தல்னமர்ந் திருத்தல் போதும். (௩)

வளமனை வேண்டி னோரு மகநலம் வேண்டி னோரு
முளமிகு போக மெல்லா முற்றிட வேண்டி னோருந்
தளர்வரு தெய்வ போகஞ் சார்தர வேண்டி னோருங்
களமினம் பெருமான் மேய கூறையே கலத்தல் வேண்டும். (௪)

நித்தியங் கங்கை மூழ்கி நிகரிலாக் காசி மேய
வுத்தம விசுவ நாதன் றரிசன முவப்பிற் செய்து
பத்தியிற் பன்னா ளங்கு மேவலாற் படைக்கும் பேறு
வித்தகக் கூறை யோர்நாண் மேவினர் படைப்பர் மாதோ. (௫)

ஆதலிற் கூறை யென்னு மருந்தல வாசஞ் செய்தல்
காதலி னெவர்க்கு நன்றாங் கலந்தமர் தரமுற் றாதேன்
மேதகச் சின்னா ளேனும் விரும்பியாங் குறைதல் வேண்டு
மோதல்செய் ததுமுற் றாதே லொருதின மேனுஞ் சார்க. (௬)

அன்னது முற்றா தென்னி னத்தல மார்க்க மேனு
மென்னருஞ் சேறல் வேண்டு மினையபுண் ணியத்தின் பேற்றா

ஓன்னருஞ் செல்வ மேவி மறுமையி னும்ப ராகிப்
பன்னரும் போகந் துய்த்துப் பரகதி யடைவர் பின்னர் (எ)

துலங்கிய புகழ்சால் சூரைச் சுந்தரே சுரருக் கென்று
நலங்கிளர் விளையுள் வாய்க்கு நன்னில நகரமொன்று
பலங்கொள நல்கு வாரேற் பார்முழு வதுநன் காண்டு
வலங்கொளச் சிவலோ கத்தின் மருவிவீற் றிருப்ப துண்மை. (அ)

அங்கயற் கண்ணி யோடு மருட்பெருஞ் சூரை மேய
நங்கடம் பெருமாற் கன்பி னலமலி பொழில்க ளாக்கிப்
பங்கமின் றுதவு வாரேற பண்ணவ ருலகஞ் சார்ந்து
கொங்கலர் கற்ப கபூங் குளிர்நிழ லிருந்து வாழ்வார். (கூ)

பொங்கொளிச் சூரை நாதன் பூசையைச் சிறப்பிப் போருஞ்
செங்கண்மான் முதலோ போற்றத் திருவிழாச் சிறப்பிப் போரு
மெங்கணும் பகைவ ரின்றி யிருப்புவி முழுது மாண்டத்
திங்கள்வே ணியர்தஞ் செல்வச் சிவலோக மருவி வாழ்வார். (க0)

பெருகொளிச் சூரை நாதன் பிறங்குமா லயத்தி னுள்ளான்
மருவுறத் தீபஞ் செய்வோர் மற்றுள பணிக ளெல்லா
மருகுற விருப்பிற் செய்வோ ரனைவரு மவன்சா ரூபந்
திருவுறப் பெற்று வானோர் சேவிக்க வாழ்வ துண்மை. (கக)

நலமலி சூரை மேய நாயகன் முடிமே லான்பால்
வலமுற மற்று நூலில் வகுத்தன சிறப்ப வாட்டிக்
குலமலர் வில்வஞ் சூட்டிக் கும்பிடு மேன்மை பெற்றோர்
அலர்தர வடையும் பேற்றை யறைதர வல்லர் யாரே. (கஉ)

சுந்தரே சுரர்க்குஞ் சேறகட் சுந்தரி தனக்கு நாளு
நந்தலி னெய்வி ராய நல்லமு தினிய தீம்பா
லந்தமில் கறிமுன் னாக நிவேதிப்போ ரடையும் பேறு
பந்தமின் முனிவீர் பூமேற் பனவற்குஞ் சொலமுற் றாதால். (கங)

தோற்றுசெங் கதிரோன் றீர்த்தந் துலங்குபொற் கமல தீர்த்த
மேற்றமார் விண்டு தீர்த்த மென்றுசொற் றிடுமோர் மூன்று
மாற்றருங் கருணைச் சூரை வள்ளலார் முக்கண் போலு
மாற்றல்சா லிவற்று ளொன்றிற் றோய்பவ ரமர ராவார். (கச)

சுந்தரர் முடிமேற் சாத்தச் சூளைமா நகரி னுள்ளா
னந்தன வனங்கள் வைப்போர் நலமலி பொற்பூ ணுடை
யந்தமி லவருக் கீவோ ரமரரா யரம்பை மாதர்
சந்தமென் முலைமேற் றுஞ்சுந் தவாபெரும் போகந் துய்ப்பார்.

திருமதி லாதி யாய பணிகளைச் சிறப்பச் செய்தும்
பொருவறக் கிலமாயுற்ற பணிகளைப் புதிய செய்து
மருமையிற் சூளை நாதற் கன்புவைத் திறைஞ்சு வாரேற்
பொருகுபல் கிளைகள் சூழப் பிறங்கிவாழ்ந் தமர ராவார். (கசு)

துதிமிகு சுந்த ரேசர் சூளைமா நகரி னுள்ளான்
மதிமிகு மறைய வர்க்கோர் மனைபுரிந் துதவு வாரு
மதிநல மடமுங் கண் மற்றை யடியவர்க் குதவு வாருங்
கதிநலங் காணி யாகக் கயிலைமே மருவி வாழ்வார். (கஎ)

சுந்தரர் திருமுன் னாகத் துடியிடைக் கயற்க ணம்மை
சந்தமார் திருமுன் னாகச் சத்திர மொன்றுண் டாக்கி
யந்தமின் மறையோர் மற்றை யடியவ ருண்ணு மாறு
முந்தநன் கமுது நல்கு மவர்பயன் மொழியற் பாற்றோ. (கஅ)

சூளையை நினைந்தோ ரீற்றிற் றுன்னுவர் சிவசா லோகஞ்
சூளையைக் கண்டோ ரீற்றிற் றுன்னுவர் சிவசா மீபஞ்
சூளையைத் தொழுதோ ரீற்றிற் றுன்னுவர் சிவசா ரூபஞ்
சூளையில் வசித்தோ ரீற்றிற் றுன்னுவர் சிவக்க லப்பே. (ககூ)

சூரிய தீர்த்த மூழ்கித் துலங்குவக் கரைமேல் வைகுஞ்
சூரிய மூர்த்தி பாதந் தொழுபவ ரனைய தெய்வச்
சூரியன் றேசு வாய்ந்து தொக்கபல் போகந் துய்த்துச்
சூரியன் பதத்து வாழ்வார் துரிசில ராகி யென்றும். (உ0)

சூளைமேற் றிசையின் மேவித் துலங்குகண் ணிறைந்தானென்னும்
வீளைபோ னிறத்தி னானை மேதகப் போற்று வோர்கள்
பாரையா தரிப்ப வாண்டு படைகிளை சூழ வாழ்ந்து
சீளைவா யனையான் றெய்வ வைகுண்டஞ் சேர்ந்து வாழ்வார். ()

அன்னமா தலத்தின் மேய வலரியை யரியைத் தாழ்வோர்க்
கின்னமா பலனுண் டாமே யிவர்க்கருள் வழங்கா நிற்கும்

பன்னகா பரணச் சுந்த ரேசரைப் பாக மேவு
நன்னர்வான் கயற்க ணாளைப் பணிபவர் நலமெற் றூமால். (உஉ)

பற்பல வுரைப்ப தென்னோ பண்புசான் முனிவீ ரந்தச்
சொற்படு சூளை மேய சுந்தரப் பெருமான் றாளுங்
கற்புயர் சிறப்பு வாய்ந்த கயற்கணா யகிபொற் றாளு
மற்புறத் தியானஞ் செய்த லனைவர்க்குஞ் சிறந்த பேறும். (உங)

அத்தல மேன்மை யின்னு மளவில வாகு மூற்ற
வத்தல மேய சுந்த ரேசனே யறைய வல்லா
னத்தலம் பொருவ திந்த வகலிடத் தில்லை யின்னே
யத்தலம் பணிவோ மென்று ரைரு ணிறைந்த சூதன் (உச)

உரைத்தது கேட்ட லோடு மூவகையங் கடலு ளாழ்ந்து
புரைத்தவவ் வேள்வி முற்றிப் பொருக்கெனப் போந்து மூத்தங்
கரைத்தலை யொதுக்குஞ் செம்பொற் கமலநீர் படிந்தி யாரும்
வரைத்தடஞ் சிலையான் கோயில் புக்கனர் மகிழ்ச்சி பொங்க.

முனிவரர் நந்தி யண்ணன் முன்பணிந் தெழுந்து சூழ்ந்து
தனிவரு சுந்த ரேசத் தம்பிரான் செம்பொற் றாளுங்
கனிவரு மிரதத் தீஞ்சொற் கயற்கணண் மலர்ப்பொற் றாளும்
பணிவருங் கண்ண ராகிப் பரவித்தம் மிருக்கை புக்கார். (உசா)

இத்தகு புராணந் தன்னை யெழுதுவோ ரெழுது விப்போர்
வித்தகம பொருந்தக் கற்போர் கேட்பவர் பொருள்வி ரிபபோ
ரத்தனை பேரு மண்மே லளவிலாப போகந் துய்த்தகுச்
சித்தநன் குடைய ராகிச் சிவலோக மருவி வாழ்வார். (உஎ)

நம்பல மான சூளை நன்னகர் வாழ்க மென்பூங்
கொம்பன கயற்க ணம்மை குலவருள் வாழ்க வும்ப
ரிம்பரேத் தெடுக்குஞ் சுந்த ரேசர்தாள் வாழ்க வன்று
ரம்பலத் தெடுத்த செம்பொ னடித்தலம் வாழ்க வாழ்க. (உஅ)

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௬௩௧

## சூளாமாநகர்ப் புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

# அரும்பதவுரை.

## கடவுள்வாழ்த்து.

௧. உச்சகரமொழி இரண்டு-உசு, முசு என்பன; அவற்றுள், ஒன்று முசு; இது குரங்கினுள் ஒரு சாதிப் பெயர். மடங்கல் - நரசிங்கம். ஓமேவு குஞ்சரம் - பிரணவ குஞ்சரம். அப்பிடி - சத்திப்பிரணவமாகிய பெண் யானை.

௩. வதரி - இலந்தை மரம். இச்செய்யுளிற் சோமசுந்தரக்கடவுள் மதுரையிலிருந்து சங்கப்புலவர்க்காக இத்தலத்திற்கு எழுந்தருளி காட்சி கொடுத்தமை கூறப்பட்டது. இதனைச் சங்கப்புலவர்பூசித்த படலத்தா லுணர்க.

௪. மயர்கண் அம்மையும் வீழ்ந்து; அம்மை - வருபிறப்பு. செயற்கணங்களைச் சற்றாயினும் மை அறு வகை செய்து. பெயற்கு அண்ணுகின்ற நம்மையும்.

௫. சடையமர் மடநலாள் - கங்கை. இடையமர் புலி - புலித்தோல்.

௭. மற்றை உது - உணர்தல். பசு- ஆன்மாக்கள்.

௮. மன் அசைநிலை. திதித்திடு- காத்தருளுகின்ற.

௯. கருதலாய மானம் - அனுமானப்பிரமாணம்.

௧௧. குரவு ஆசிரியத்தன்மை. சூரல் - பிரம்பு.

௧௨. "அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல், பிறவினை யெல்லாந் தரும்" என்பது திருக்குறள், ௩௨௧.

௧௩. ஆணெனப்பட்ட பெண்ணை- ஆண்பனை. பெணணேயாக - பெண் பனையாக.

௧௪. குழிசி பானை. கொண்ட விரதம் குலைத்து - தாம் கொண்டிருந்த சைனமதத்திற்குரிய விரதங்களை ஒழித்து.

௧௬. ஆக்குவித்தோன் முதலியோர் சிவபெருமானொருவரேயாக; பாக்கு - வினையெச்சவிகுதி.

௧௭. மருங்கின் ஆதாரம்.

௧௮. அவை - அத்தீமைகளை.

௨௧. துணைத்து-ஒன்றை ஒன்று ஒத்து. ஆனா, ஐ - சாரியை.

## ஆக்குவித்தோர்.

௨. காரையம்பதி - காரைக்குடி

௩. தளி - கோயில். விளர் - அறியாமை.

## அவையடக்கம்.

௧. விசயாலயன் - பொன்னுன விசயாலயனென்னும் சிற்றரசன். சூரனும விசயாலயனும் பூசித்ததை இந்நூலுட் பின்னர்க் காணக.

௨. என்பாடல் குணமாய்க் குணமும் குற்றமுமாய்க் குற்றமாய் மருவிடுமேனும. முற்காட்டு - முன்பு எடுத்துக் காட்டிய பிறை, அரவு, விடமென்பன.

## சிறப்புப்பாயிரம்.

க. துமித்தல் - அறுத்தல். | உ. கழனியமபதி - கோயிலூர்.

## திருநாட்டுப்படலம்.

உ. கொடுங்குன்றம்-பிரான்மலை.

ங. கைகுறைத்தோன் - ஒருபாண்டியன்; இவன், தன் கையைக் குறைத்துக்கொண்ட கதையைச் சிலப்பதிகாரம், கட்டுரைகாதையாலுணர்க.

ச. சீர் நறை - சீராகிய தேன்.

ரு. இச்செய்யுளில் எஙஉ, எஙக-ம் திருக்குறளின் கருத்துக்கள் முறையே அமைந்திருத்தல் காண்க. நகக - விளங்கிய.

சு. முல்லை-முல்லைநிலம். சானம்-சண்டுத்தொகுதி. பூவை-காயாமரம்.

எ. வெறுத்த - மிக்க. மாதவன் - அகத்தியர்.

அ. தடித்து - மின்னல். அறல் - நீர். தோற்றிட - தோன்றும்படி செய்ய.

க௦. வேந்தன் - இந்திரன்; பாண்டியனுமாம்.

கக. வெளிக் கங்கை - ஆகாயகங்கை. மலயம் - பொதியின்மலை.

கஉ. பறம்பு - மலை. சீர் - புகழ். பிரதாபம் - வீரத்தாலுண்டாகியபுகழ். செம்மணி பிரதாபத்திற்கும் வெள்ளருவி புகழிற்கும் உவமைகள்.

கங. குங்குமம் - ஒருவகை மரம். மிகை - அதிகம். துணையும் - ஒக்கும்.

கச. நொடித்தல் - சொல்லுதல்.

கரு. கருவி - கூட்டம். இருவி - தினைத்தாள். பொருநை - தாம்பிரபன்னிநதி.

கஎ. நரலை - கடல். பாடு - பக்கம் சீர்த்தமாநதி - வைகையாறு.

கஅ. கழனிவாயில் - கோயிலூர். மதுநதி - தேனாறு.

உ௦. பரி-குதிரைமரங்கள். பணி-பாம்புபோல் திரைத்த வைக்கோற்புரிகள். பலாலம் - வைக்கோல். ஏ-மதகுநீர் தாங்கும் பலகை.

உச. பார் நடத்து ஆதி நன்னூல்-பூமியாகிய தேரை நடத்திய சிவபெருமான் அருளிச்செய்த வேதாசமங்கள். உதக்கு - வடக்கு. முன் திசை - கிழக்கு.

உரு. வன்காலர் - வலிய காலையுடைய உழவர், வலிய கூற்றவர். கடா முதலியவற்றை இருதிறத்தார்க்கும் அமைகளாக்குக.

உசு. கான் ஆதி - காடு முதலியவற்றில்.

உஎ. கங்கு - வரம்பின்பக்கம்.

உஅ. பாசம் - கயிறு, ஆணவம முதலியவைகள்.

உகூ. வயல்கள் தழைதர - வயல்கள் தழைக்க.

ஙஉ. கழகம் - கல்விச்சாலை. பள்ளிகணக்கர் - மாணுகர்.

ஙங. தள்ளிய - தள்ள.

ஙச. கலை கலை பருவம் - கலைகலைக் கலையும் பருவம். புரி - கயிறு. துரைத்து - சுருட்டி.

ஙரு. மருவலர் - மணத்தையுடையபூ, பகைவர்.

ஙசு. பூ - பூமி, மலர்.

ஙஎ. துண்டல் - நீங்குதல்.

ஙஅ. சுகம் - கிளி.

ஙகூ. கமலராசி - தாமரைமலரின் கூட்டம். குலை - கரை. ஆய - ஆயின.

சக. நகப்படை - நகங்களாகிய ஆயுதம், சிங்கம், புலி. சிங்கத்திற்கு நகாயுதமென்று ஒரு பெயருண்டு. ஆம்பல் - ஆம்பற்பூ, யானை. தாமரை - தாமரைப்பூ, தாவுகின்ற மரையென்னும் விலங்கு.

சரு. அவாய் - விரும்பி.

சஎ. நார் - அன்பு.

சஅ. வைப்பொடி - கூளம்.

ரு௦. கந்தி - கமுகமரம்.

ருக. இதை - புதுக்கொல்லை.

ருஉ. இசும்பு - வழுக்கல். ஒப்புதல் - ஓட்டுதல்.

௫௩. முடஞ்சுட்டுகள் - பசுக்கள்.

௫௪. கொன்றை வேய்ங்குழல் - கொன்றைப் பூவைச்செருகிய மூங்கிற் குழல்.

௫௫. திரில - மீன்படகு.

௫௬. கோடு - கரை. மாடு - பக்கம்.

௫௭. உழுத்து இதஞ்செய்வ.

௫௮. நாமம், நாம் - அச்சம்; அம்சாரிகை. கொற்றி - துர்க்கை.

## திருநகரப்படலம்.

௨. சோமநதில்.

௫. முன்னிய - முன்ன. தவமுயல் தவம் - தவஞ்செய்தற்குக் காரணமான தவம்.

௭. சிவபெருமானருளால் நாரை முத்திபெற்றதைத் திருவிளையாடற்புராணத்தாலுணர்க.

௮. சூரனுடல் ராசி - சூரனின் கூட்டம். கொக்குவடிவமுள்ள பாம் சூரனென்பவன் பகைமையற்றுச் சிவபிரானாற் சொல்லப்பட்டானென்பது புராணகதை.

௧௨. இயற்பெயர் மீனமென்பது. தாம் வித்தின் - தாவுகின்ற வித்தம் போல.

௧௪. நாவலர் - சங்கப்புலவர்.

௧௫. காளிந்திநதி - யமுனாநதி இதில் தாமரைப் பூவின்மேல் அம்பிகை சங்க வடிவங்கொண்டு பூர்வருளியிருந்ததைக் கந்தபுராணத்தாலுணர்க.

௧௭. குறை - முழக்கம் புரை எறி - குற்றத்தை நீக்கிய. இருநிதி - சங்கநிதி, பதுமநிதி.

௧௮. ஆரிய - நுகர்தற்கு.

௧௯. உள்ளிய - நினைக்க. சவி - "பிறந்தபிறப்பால்" என்னும் வெண்பா. இதனை இப்புத்தகத்தில் ௯0-ம பக்கத்திற் காண்க. ஒதிவிட்டவன் - பொன்னனை விசயாலயதேவன்.

௨0. தடம் - எண்டிசை சூரியதீர்த்தம். நாயகன் - சூரியன். இத்தீர்த்தக்கரையிற் சூரியனுக்குக் கோயிலுள்ளது; சூரியன்பூசித்தபடலத்தாலுணர்க.

௨௩. பழையர் - கள்விற்போர்.

௨௪. கால் - காற்று.

௨௬. அமர்கதிரும காதல்செய.

௨௭. புனைதிடும் கால்கள், பரிகால்கள்; பரித்தல் - தாங்குதல். பரிபடும் - வருத்தம் நீங்கிய.

௨௮. கல் - நடுகல்; போரிலிறந்த வீரனுடைய பெயரை ஒருகல்லிலெழுதி அதைநாட்டி அவனுகப்பாவித்து வழிபடுவருதல் மரபு; இதனைப்புறப்பொருளிலக்கண முதலியவற்றாலுணர்க. சல்லாரி - சல்விச்சாலை.

௨௯. கணை - கணையாலாகிய புண். பின்னுள்ள அயில் முதலியவற்றிற்கும் இங்ஙனமே பொருள்கொள்க. சூழ்க்கடை - சூலம். வசி - வாள். உலவை - கோடரி. எஃகம் - சக்கரம். ஆகம் - மார்பு.

௩0. அப்பிடாது - இளையாமல்.

௩௧. சோமசுந்தரக்கடவுள் எழுகடலையும் அழைத்தருளியது கண்டு அறியற்பாலது. இஞ்சி - மதில்.

௩௨. பொலிவரை - மேருவரை.

௩௪. கோட்டுநாறு - சங்கின் சுண்ணம். ஒழுத்தது - தங்கியது. நயக்கும் - ஒக்கும்.

௩௮. மட்டு - அளவு. மாதிரம் - திசை.

௪௪. உபசரித்து அல்லால் - உபசரித்தாலன்றி. வார்தெரு - நீண்டதெரு.

௪௫. மலைதரா - மாறுபாடாத.

௪௬. மயங்கும்செய்கை இல்லாத.

௪௮. துணங்கறல் - இருள்.

௫0. வானர் - தேவர்.

௫௧. பூதி - விபூதி. மும்மலங்களாதி; சாதி - கெடுத்து.

௫௨. பாகு - குழம்பு.

௫௩. சோமசுந்தரக்கடவுள் தண்ணீர்ப்பந்தர் வைத்தருளிய திருவிளையாடல் கண்டு உணரற்பாலது. காணிசுரியது. பாணி - நீர்.

௫௪. நான்மார்க்கமாவன, தாஸமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கமென்பன. ஒது அமார்க்கம்.

௫எ. கண்ணிறைந்த பெருமாளென்பது - இத்தலத்திலுள்ள திருமாலின் திருநாமம்.

௫அ. சோமூன்றும் - மும்மதிலும். படர்ந்து - நினைந்து.

௫௯. உதவிசெய்பாக்கு - உதவி செய்யும்பொருட்டு.

௬க. தெவ்வுவான் - கொள்ளும் பொருட்டு. தெவ்வும் - பகையும். கண்டகம் - முள்.

௬உ. அண்ணுகிற்றலின் - அணுகுதலால்.

## நைமிசவனப்படலம்.

உ. வருக்கை - பலா. தூம் கனிகள் - தூவுகின்ற பழங்கள்.

ந. இச் செய்யுள், நைமிசத்திற் பகையின்மையைப் புலப்படுத்திற்று.

ச. அற்புஅகம், அகம்-மனம். அது-அமுதம் பெறுதற்குச் சுவர்க்கம்செல்லுதல். எண்மையதோ - எளியதா.

௫. மஞ்சு - அழகு. நனைப்ப - நனைப்பார்கள், நனைப்பன. தஞ்சு-பற்றுக்கோடு. மாக்குலம் - விலங்கின் கூட்டம்.

௬. கோதம் - குரோதம்.

எ. கறையடி - உரல்போன்றஅடி.

அ. தூயவன் - சிவபெருமான். இதழி - கொன்றைமரம்.

௯. யாத்து - கட்டி. படர்ந்து - தியானித்து.

௧௦. உழை - மான். அறுபகை அறுபகையாகிய - காமமுதலிய ஆறனையும்வென்ற; இது, முனிவர்கள் சிவஸாரூபம் பெறுவதைப் புலப்படுத்தியது.

௧ந. தளைத்து - கட்டி.

௧௯. தள்ளிய இருவினையான் - இருவினைகளையும் விலக்கியவன்.

௨௦. வாதராயணன்-வியாஸமுனிவர். மாணவகர் - மாணக்கர்.

௨௨. ஓவரும் உவகை - நீக்கமில்லாத மகிழ்ச்சி. தா - கேடு.

௨௫. புத்தி - போகம்.

௨௯. மிறை - நடுக்கம்.

௩௨. உதீசித்திக்கு - வடதிசை.

௩௩. இரண்டுபுள் - அன்னமும் கருடனும். மயூரம் - மயில். இளஞ்சேய் - முருகக்கடவுள். மயூரவெற்பு-குன்றக்குடி. குணக்கு - கிழக்கு. (முன்னொருகாலத்தில் பிரமதேவருடைய வாகனமாகிய அன்னத்தையும் திருமாலின் வாகனமாகிய கருடனையும் விழுங்கி, முருகக்கடவுளால் 'கல்வடிவமாக' எனச் சபிக்கப்பெற்ற மயில் ஈண்டுவந்து மலை வடிவங்கொண்டு பன்னாட்கிடந்து முருகக்கடவுள் தன்பால் எழுந்தருள, அச்சாபம் நீங்கப் பெற்றதென்பது) மயூரகிரிபுராணகதை.

௩ச. சத்தியகிரி - திருமெய்யம்.

௩௫. வீணாவனம் - சாக்கை.

௩௬. பனித்த - குளிர்ந்த. மனித்தரின் - மனிதர்போல.

௩அ. தொன்று-பழமை. அன்றுஉரை - விரோதித்தசொல்.

## சூரியன்பூசித்தபடலம்.

க. நண்ணிய கருதி - நண்ணநினைந்து.

உ. புனைந்து - அலங்கரித்து. அகழ்தரு - பெயர்த்த.

ந. சபித்தும் - சபிப்பேம். ஆலோன் - சந்திரன்.

ச. ஓர் மங்கையென்றது உரோகிணியை.

௬. விதி - கட்டளை.

எ. இறுத்த - தங்கிய.

௯. வாழிய - அசைநிலை. ஆழிய ஆழ்ந்த.

௧௦. விது - சந்திரன். மஞ்சனை அழகனை.

௧௧. கோட்பட்டார் - கொள்ளப்பட்டவர்.

௧௨. அல் பக - இருள் கெட. மோலி - கிரீடம். பொற்பு அகம் பொலிய.

௧ந. எச்சன் - யாகத்தின் அதி

தேவதை. கச்சம் - அளவு. யாழ்முனி- நாரதர்.

கரு. மகதி - நாரதரது வீணை. வீரன் - வீரபத்திரக்கடவுள்.

கசு. போற்றிய - போற்ற. ஆற்றிய - செய்ய. மாற்றிய - மாற்ற.

கஎ. புலிப்போத்து - ஆண்புலி.

கஅ. பகன் - ஆதித்தர்பன்னிருவருளொருவன்.

ககூ. சவி - அழகு.

உ0. இன்னணம் - இன்னவண்ணம்.

உக. சான்று - ஸாக்ஷி.

உஉ. எண்வகை உடம்பு - அஷ்டமூர்த்தம். கயமை - கீழ்மை.

உங. சிதம்பு - கீழ்மை. நிலாவிற்கு - சந்திரனுக்கு.

உச. நன்று - இகழ்ச்சிக் குறிப்பு.

உரு. சமழ்ப்பு - நாணம். குழகன் - பேரழகையுடையவன்.

உஎ. இழுதையேன் - அறிவில்லாதேன்.

உஅ. சிகை-தீக்கொழுந்து. நகை - ஒளி, பல். முகை - அரும்பு.

உகூ. கரிசு - குற்றம். வெறி - வாசனை. மிலைச்சிய - சூடிய.

ங0. மாயக்கோல் - திருமாலாகிய அம்பு.

ஙக. கேழ் - நிறம். வம்பு - புதுமை. ஓங்கல் - மலை. நம்பு-விருப்பம். பம்புதல் - பரவுதல்.

ஙங. கொங்கு - வாசனை.

ஙசு. அழலோன் திக்கு - தென்கிழக்கு. ஒன்றேனும் இணைய வாராது.

ஙஎ. காற்றி - நீக்கி.

ச0. மலரிய - மலர.

சக. மற்றையோர்தம்முள் அறிய வல்லார் எவர்.

சஉ. தொட்டு - தோண்டி. எள்ளல் - இகழ்தல். உள்ள - நினைக்க.

சங. ஏதம்-துன்பம். ஓதம்-கடல்.

சரு. ஒன்றுடை-ஈரம் புலர்த்தும் ஆடை. அதிசுவை - மிக்கசுவை.

சஅ. நந்தும் நந்து - பெருகிய சங்கக்குழையை. நன்று உகந்து. கந்துகக்கையோடும் பந்தையணிந்த திருக்கரத்தையுடைய உமாதேவியாரோடும்.

சகூ. தள்ளிய சடையாய் - முடிவைத்தள்ளியவரே. தரக்கு அதள் - புலித்தோல். நள்ளிய - பொருந்திய.

ரு0. மாட்டி - மாளச்செய்து. தளைத்து நின்று அடர்க்கும் மலம் - கட்டிநின்று வருத்துகின்ற மலம்.

ருங. வித்தகம் - ஞானம். ஒத்து அகம் உவப்ப.

ருச. ஆழி - தேருருளை. வாழி - அசைநிலை.

ருசு. பொன்றல் இல் - அழிவில்லாத.

ருஎ. உவாமதி - பூரணசந்திரன். குவால் - குவியல்.

ருஅ. எரிமருள் - நெருப்பைப்போன்ற. தோம் என் உடையவர் - குற்றம் யாதுடையவர்; குற்றமில்லாதவரென்றபடி.

ருகூ. சிவணுக - கலப்பாயாக.

சுஉ. எண் - எள்.

சுரு. அந்தை - அசந்தை. அதான்று - அஃதல்லாமல்.

சுஎ. அணங்கு - பேய். எறுழ் - வலி.

சுகூ. தென்புலத்தவர் - பிதிரர்.

எ0. சந்தம் - அழகு.

## சூரன்பூசித்தபடலம்.

க. மனமுதல்மூன்று - மனம் வாக்குக் காயம். பக்க - பக.

ங. அரணம் - கோட்டை முதலிய காவலிடங்கள். கருவி - ஆயுதம்.

ச. மானம் - அளவு.

ரு. அலகு - துடைப்பம்.

சு. நானம் - கஸ்தூரி.

எ. கரந்து - ஒளித்து. வடி - கூர்மை. உரம் - மார்பு. தெவ்வை - பகையை=சூரன்முதலியவர்களை.

கூ. வரை-கிரவுஞ்சகிரி. எல்-ஒளி.

க0. பணியலன்-பகைவன். திணி-திண்மை. அமர்த்தனன் - சண்டைசெய்தான்.

கக. பொன் - சூரியன்.

கஉ. சொற்றம் - வெற்றி. பொற்ற - பொலிவுபெற்ற. அற்றம் - சோர்வு. ஆடுதல் - போர்செய்தல்.

கங. கண்டு அலமந்து. தூருவி - தேடி. சூர் - சூரன்.

கச. இரிந்தான் - கெட்டோடினான்.

கரு. சொன், உம், மற்று - அசைநிலைகள்.

கசு. மூன்றும உருமபடி அருளைப் பெற. உதவும் - உதவுவார்.

உ0. பரிதி - சூரியன். சூழல் - இடம். அவண் - அவ்விடம்.

உக. உயங்குதல் - வருந்துதல. குமரப்புத்தேள் மற்றுமோரிடத்தை யுற்றான். பயம் - பிரயோசனம்.

உஉ. புலவர் - தேவர். நலவர் - நன்மையையுடையவர். பல வலவர். கலவர் - கீழ்மக்கள். கடிவரல் - விரைந்துவருதல்.

உச. தண்ணென்மைதரும.

உரு. நாதித்த - முழங்கிய.

உசு. கூவிளம-வில்வம. அர்து - அமிர்தம். முசமன் - உபசாரம. துழாய்க்சோல் - திருத்துழாயையணிந்த திருமாலாகிய அம்பு.

உஅ. கோட்டி - வளைத்து. வியாளம் - பாம்பு.

உகூ. பார் அமை தேர - பூமியாக அமைந்த தேரையுடையீர். தாா அமை ஆர - மாலையாக அமைந்த ஆத்தியையுடையீர.

ஙo. உகிர் - நகம். காளம்-விடம். சேர்வு அரு - ஆராய்தற்கரிய. உத்தாளம - பூசசு. மொய் - வலி.

ஙக. அபிராமம்-பேரழகு. ஈமம்-மயானம். வாமம - இடப்பக்கம். ஏமம - இன்பம. யாமம் - நள்ளிரா.

ஙங. வேட்டது என் - விரும்பியது யாது.

ஙரு. வந்து ஐயா.

ஙசு. போதி - போவாய்.

ஙஎ. போது இல்லான் - பிரமன். ஏதிலான் - அயலான். மகிழ்ச்சி எய்தினன் - மகிழ்ச்சியை அடைந்தனன்.

ஙஅ. தநு - வில்.

ஙகூ. மாவாய் - மாமரமாய். கிளைப்ப டு-வி கசப்ப டு. இருபுள்ளாய்-சோறியும மயிலுமாகி.

## பொன்னுன விசயாலயதேவர் திருப்பாணிப்பாடலம்.

க. பசை - அன்பு.

உ. விராம் - விராவும. அணமி - அடைந்து.

ரு. குறுநிலமன்னர் - சிற்றரசா. முறுவல் - சிரிப்பு.

எ. மந்திர உருவன் - சிவபெருமான்.

கூ. கடுக்கைத் தாரு - கொன்றைமரம்.

கo. பலாசு - புரசமரம். துன்னுவது - ஒப்பது.

கக. மாலாய பயோதர ஊர்தி - திருமாலாகிய மேகவாகனம். ஏறு - இடபம்.

கச. வளி - காற்று. விசயன் - அருச்சுனன்.

கரு. முண்டகம் - முள்.

கஎ. வாரிசம - தாமரை.

கஅ. குரு - நிறம்.

கசு. சூழ்வான் - ஆராய்வான்.

உo. துன்னுந்து - விரைந்து. சிவக்குறி - சிவலிங்கம.

உக. வேலை - விரைவு. அண்டர் - தேவர்.

உஉ. சுயம்பு-தானேதோன்றியது.

உங. அரு - அரூபம். மாண - மாட்சிமைப்பட. வாளா - சும்மா.

உரு. தடப்பால்-தடாகத்தின்பக்கத்தே.

உசு. திருக்கு - மாறுபாடு. மறுகையாத - மணம நீங்காத.

உஎ. ஆத்தன் - சிவபெருமான்.

உஅ அரவு சூடி-சிவபெருமான். புரவு - காத்தல். கரவு - கள்ளம்.

உகூ. மன்னுயிர் அளவில் சுகமுறுதல.

ஙங. அகழ்ந்துபோக்கி - தோண்டியெறிந்து. இசை - கீர்த்தி.

௩௯. பாவுதல் - பரவுதல். பூவு கவலை உடையானாய் - கவலையில்லாத வனாகி; ஓவுதல் - ஒழிதல்.

௪௦. நவியம் - கோடாரி. கூயம் - அரிவாள். அடவி - காடு. எறிந்து - வெட்டி.

௪௧. சிற்பம் - சிற்பநூல். பொற்ப - அழகுபொருந்த. நிற்ப - தூண் முதலியவைகள். இப்ப - விட்டம் முதலியவைகள்.

௪௨. ஆன்ற - அமைந்த.

௪௩. ஆழா - ஆழ்ந்து.

௪௪. மறுகு - வீதி. பிறங்க - விளங்க.

௪௫. மூவா - அழியாத.

௪௬. நார் - அன்பு.

௪௭. எய்ய - அறிய.

௫௦. குரோசம் - நீட்டலளவைகளுளொன்று.

௫௧. மதனுல்வருந்தான் - சிவபெருமான். சென்றருளி வெளிசெய்தான். பதன் - பக்குவம்.

## பொன்னனை விசயாலயதேவன் நிருத்த தரிசனஞ்செய்தபடலம்.

௪. அதிரா - நடுங்கி.

௫. நிலவு ஆகரம்.

௬. எண்ணூர் - பகைவர்.

௭. செங்காமரைக் கண்ணர் - பிரமதேவனும் திருமாலும்; கண் - இடம், விழிகள்.

௮. ஆருயிர் - அருமையான உயிர். மூளை - பிள்ளை; என்றது மார்க்கண்டேயனை.

௯. சொம்பு ஆர் - கொம்பையொத்த.

௧௦. சத்து - உண்மை.

௧௧. பரித்தாய் - தாங்கினாய்.

௧௨. நத்தான் - திருமால்; நத்து - சங்கம்.

௧௫. வழுத்து ஆதரம். கரமான் உரி - யானைத்தோல்.

௧௮. திருப்புத்தூரில் ஸ்தலவிருக்ஷம் கொன்றை. சீதளிதீர்த்தம் - அத்தலத்துத் தீர்த்தங்களுள் ஒன்று. இது திருமகளாலுண்டாக்கப்பெற்றது.

௨௨. வெரிந் - முதுகு. மும்மலம் இரிய.

௨௪. மதலை-கொன்றை. அதில் - அச்சொல்லில்; முதல்குறைந்தமாலிகை - தலைமாலை. விதலை-நடுக்கம். முதலை-முதிய அலைகளையுடையகங்கை. அதலை அதலை - அஃதல்லாய் அஃதல்லாய்.

௨௫. துடி - உடுக்கை. உஞற்றி - செய்து.

௨௬. தலைமிசைச்சூடினன்.

௨௭. சுற்று கால் - சுற்றிவருங்காலத்தில். பிணைந்து - விரும்பி.

## சங்கப்புலவர்பூசித்தபடலம்.

௧. சால் - மிகுதி.

௨. ஒருவாது - நீங்காமல். கூறு - அம்சம்.

௩. திருந்தார் - பகைவர். எகிடு மேனும் வருந்தார். தார் - மலர். பிறங்குதல் - விளங்கச்செய்தல்.

௫. அன்னோ - ஐயோ.

௬. கள்ளனை தரும்.

௭. கமை - க்ஷமை.

௮. உருப்பம் - உட்டினம்.

௯. தளம் - பூவிதழ். குளம் - நெற்றி. கோமளம் - அழகு.

௧௦. வையம் உண் விடை - திருமாலாகியவிடை. விதி - பிரமன்.

௧௧. ஆடகம்-பொன். அன்புஉள்ளம். பாணி - தாளம். பூணி - இடபம் காடகத்தூணி - முல்லைநிலமாகிய அம்பறாத்தூணி; திருமால் அம்பாதலின் அவருக்கு இருப்பிடமாகிய முல்லைநிலம தூணியாகக்கூறப்பட்டது. தோணி - அம்பு.

௧௨. மந்தணம்-ரஹஸ்யம். போதம் - ஞானம்.

௧௩. மறைக்காடு-வேதாரணியம்.

௧௪. கரு-பிறவி. வெரு - அச்சம்.

௧௫. வித்தகம் - திறமை. பூமிதேராதலின், “மாயோன்சித்தம்வைத்து அவாவிச்சேருந்தேரான்” என்றார்

௧௭. நீலி - நீலநிறமுடைய உமாதேவியார். வாலியான் - தூய்மையையுடையவன்.

௧௮. ஆலம் - விடம். அக்கமார்பாலம்-கண்பொருந்தியநெற்றி. களம்-கழுத்து.

௧௯. வேயில் - மூங்கிலாகியவீடு. ஞாயில்-மதில்; என்றது திரிபுரங்களை. பருப்பதம் பாய் இல் - பருப்பதத்திற் பாய்ந்துவிளையாடுகின்ற மனைவி.

௨௦. தெய்வஆ-காமதேனு. உவாவை-பூரணப்பொருளை. முருந்துகூறப்பட்டமையின், இதிற்கூறியதலம் திருப்பெருந்துறையென்றுகொள்க.

௨௧. தேசு - ஒளி. தூசு - ஆடை. தழல் ஆசம் - தீயையுண்டாக்கும் சிரிப்பு.

௨௨. முடியின்மேல்ஆராளை,அர்-ஆத்தி. நக்கு ஆர்த்து ஆனையையுரித்த. வையம்-தேர். பற்றார் - பகைவர். காணப்பேர் - காளையார்கோயில்.

௨௩. கொன்றை வாசத்தையும் தடம் திவலையையும்வீச. அளி-அன்பு. அள்ளிவிழுங்கும்.

௨௪. வார - ஒழுக.

௨௫. புறப்பொருள் - புறப்பொருளிலக்கணம். அது புகழ்ந்தனர்பரவலென்னுந்துறை.

௨௭. இறை - சிவபெருமான். கடுப்பு - விரைவு. புத்தியென்பது பெரியோரேவுங்காற் சிறியோர்கூறும் உடன்பாட்டுக் குறிப்புமொழி.

௩௧. நக்கு - சிரித்து.

௩௨. இன்னே இப்பொழுதே.

௩௩. நாயன் - தலைவன். நலக்க-அழகுபெற.

௩௫. கருத்துணராக்கூற்று' என்பதன்முன் 'யாம்கூறியசொல்' என்பதனை வருவிக்க.

௩௮. இணர் - பூங்கொத்து.

௩௯. புணரி-கடல். குடிஞை-ஆறு.

௪௦. வலர் - வல்லவர். நலர் - நல்லோர்.

௪௧. அளவளாய் - கலந்து. மதுப்பொய்கையென்பது. கோயிலூரிலுள்ள தீர்த்தத்தின் பெயர்.

௪௨. உலப்பரிய பூஜைகளன்பைக் கொண்டவர். நன்புலம் - நன்செய்.

௪௩. முருக்கி - அழித்து. செழுவிய - செழித்த.

௪௪. அடை - இலை.

௪௭. பளிதம் - கருப்பூரம்.

௪௮. போற்று - துதித்தல்.

௪௯. வசதி - வீடு. கண்ணிய - கருதிய.

௫௦. கப்புரம்-பச்சைக்கருப்பூரம். ஒருங்கு - ஒருமிக்க.

௫௧. கலிங்கம் - ஆடை. பொன்செய் மென்றுகில் - பீதாம்பரம். மதாணி - பதக்கம். ஆழி - மோதிரம். குழை - குண்டலம்.

௫௨. மாவலன் - குதிரைவீரன். வழுதி - பாண்டியன்.

௫௪. சடிலமோலி-சடாமகுடம்,

௫௫. கனகசஞ்சவாவி - பொற்றாமரைத்தீர்த்தம்.

௫௬. சரு - தேவருணவு.

௫௭. புவனம் - நீர்; என்றது ஆகாயகங்கையை. புவன உரு கூடு - புவனங்களினுருவமாகிய கூடுகளை.

௫௮. பாலன் - மார்க்கண்டேயர். உரும் - இடி. கடாப்பகடு - எருமைக்கடா. மறலி - இயமன்.

௫௯. வண்டுநிறீஇ - வண்டுகளாகிய நாணை நிறுத்தி. கழை - கரும்பு.

௬௦. கருத்து அலர்த்தி. அருத்தி-ஆசை.

௬௨. தாவாத - கெடாத. ஆவா - ஐயோ, குறள் - குண்டோதரன். தேவாதிதேவன் - தேவர்களுக்கு ஆதியாகிய தேவன்; மாதேவனென்றபடி.

௬௩. பாவொலி-பரவிய ஒலி. ஏ-அம்பு. சே - இடபம்.

௬௪. பகர்ந்து - விற்று.

௬௬. சேல் திகழ்கண்.

௬௭. பொறித்து - எழுதி. முகிழ்ப்ப - தோன்ற.

௬௮. மாதுலனாய் - மாமனாகி.

௬௯. குழவு எறுழிகள் - பன்றிக்குட்டிகள்.

௭௦. தன்னுடைய பேரம்பு-சுந்தரப் பேரம்பு. கொளுத்தி-பொருத்தி.

கலாம் - பிணக்கு. தென் - அழகு.

௭௧. புலர்ந்த - வாடிய. இகம் - இவ்வுலகு. இந்திரமானம் - இந்திரவிமானம்.

௭௪. கந்தமார்குழல் - உமாதேவியார்.

௭௫. குரு விழாவகை - அழகுகெடாத விதம்.

௭௬. இராப்பொழுது மிக நீண்டு தோன்றியதென்பார், 'விடிவுணரார்' என்றார்.

௭௮. நென்னல் - நேற்று.

௭௯. அக்குமணி-உருத்திராக்ஷம்.

௮௦. வடி - தேன்.

௮௩. மாலாத-மயங்காத. எலாத-ஏற்றுக்கொள்ளத்தகாத தீக்குணங்களை. சூலாத - பிறரால் தோண்டி எடுக்கப்படாத. சூன்று-தோண்டி. தோலாத - தோல்வியடையாத.

௮௪. தலைப்பட்டு - கலந்து. உணரவான் - உணரும்பொருட்டு. அதுலமாய - ஒப்பில்லாததாகிய.

௮௫. கசடு - குற்றம்.

௮௬. ஒல்லாதவற்றை. நீற்றி-நீறாக்கி.

௮௭. தொன்று - பழமை.

௮௮. ஒன்றும் - சிறிதும்.

௮௯. எல்உலவா - ஒளிகெடாத. அல்உலவாக்கண்டத்தார்.நீலகண்டர்.

௯௦. புரைஆருயிரும் உயல் உற - குற்றத்தையுடைய அரிய உயிரும்பிழைத்தலுற.

௯௧. மயற்கு அண்ணாள். அயற்கண்ணாள் அலளாகி - வேறிடத்திலுள்ளாளல்லளாகி. செயலாகிய கள்ளை.

௯௩. இரண்டு-பொற்றாமரையும், கடம்பும். தாமம்-கொன்றை, மாலை; சடை-சடை, பின்னல்.

௯௪. கண்ணவர்கள்-கருதுதலையுடையவர்கள்.

௯௯. தரமோ - தகுதியோ.

௧௦௦. நாஅணி - நாவால் அலங்கரிக்கும். மாஅணியின் - மிக்கஅலங்காரத்தோடும்.

## திருமால் பூசித்தபடலம்.

௨. ஐய - அழகிய.

௩. வீரை - கடல்.

௫. குரூஉச்சுடர் ஆலும்-நிறம்பொருந்திய ஒளிமிக்க.

௬. வன்னம் - எழுத்து.

௯. செற்றம் - தணியாக்கோபம. குடந்தமுற்று - வணங்கி.

௧௦. பாணி-கை, மார்தும்-உண்ட. பாலலோசன-நெற்றிக்கண்ண.

௧௧. பவனென்பது சிவபெருமான்திருநாமங்களுளொன்று. கழுது - பேய்.

௧௨. மத்தம் - ஊமத்தை.

௧௩. கண்ணல் - கருதுதல். உன்கழலன்றிக் கண்ணல் எதுமிலேன். பின்னுமிப்படியே கொள்க.

௧௫. பின்னர் இஃது ஆற்றினன்.

௧௬. சேய - சிவந்த. பதிட்டை - பிரதிஷ்டை. ஆவயின்-அவ்விடத்தே.

௧௭. வினைவிண்டுபோக. விண்டு-விஷ்ணு.

௧௮. பன்னம் - இலை. சொன்ன ஆடை - பீதாம்பரம்.

௧௯. கந்தம் - மணம்.

௨௨. சந்தம்-அழகு. நந்து-சங்கு,

௨௪. ஈத்து-கொடுத்து. கன்று பசுக்கன்று. கனி - விளாங்கனி.

௨௫. பின்னை - திருமகள்.

௨௬. குணில் - குறுந்தடி.

## தலவிசேடப்படலம்.

௧. பன்னிய-சொல்லிய. பருப்பதம் - ஸ்ரீசைலம்.

௨. என்னரும் - யாவரும்.

௩. காதரம் - அச்சம்.

௪. மனை - மனைவி. களம் - குற்றம்.

௮. விளையுள் - விளைதல். வலம் வெற்றி.

௯. மையனா தம்பெருமான். பங்கம இன்று - குற்றமில்லாமல்.

௧௧. அருகுறு - குறையாத. திரு- செல்வம்.

௧௩. விராய - கலந்த. பூமேற்றுன வன் - பிரமன்.

௧௬. கிலம - பழுது.

௨௦. தொக்க - கூடிய.

௨௨. அலரி-சூரியன். பன்னகம- பாதமபு. நன்னர் - நன்மை.

௨௩. சொல - புகழ்.

௨௫. புனைத்த - உயர்ந்த.

௨௬. பனிவ நங்கணணர் - துளிக் கும கணணர். பரவி - துதித்து.

௨௮. உமபா - தேவா.

## பிழையும் திருத்தமும்.

| பக்கம். | பாடல். | வரி | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- | --- |
| ௪௫ | ௫ | ௨ | தவா | தவ |
| ௪௨ | ௨௦ | ௧ | பன்னரும | பன்னரு |
| ௪௮ | ௨௧ | ௧ | கடாறலை | கடன்றலை |
| ௫௧ | ௪௩ | ௨ | யதா | பேதா |

